මොරටුව විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව

மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை

UNIVERSITY OF MORATUWA, SRI LANKA



වාර්ෂික වාර්තාව
සහ ගිණුම් වාර්තාව

வருடாந்த அறிக்கையுடன்
கணக்கறிக்கை

ANNUAL REPORT
& STATEMENT OF ACCOUNT

2020

கணக்குகளின் வருடாந்திர அறிக்கை மற்றும் அறிக்கை

2020

தொலைநோக்கக் கூற்று

உலகளாவிய ரீதியில் அதிகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவுசார் நிறுவனமாக தெற்காசியாவில் திகழ்வதாகும்.

செயற்பணிக் கூற்று

என்பன மூலமாக தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் அதிகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவுசார் நிறுவனமாக தெற்காசியாவில் திகழ்வதாகும்:

- உலக சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஆராய்ந்தறியும் மனோபாவத்தையும் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதனையும் போசிக்கக் கூடியதான தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் கல்வியை வழங்குதல்;
- கல்வி வரையறைகளை விருத்தி செய்வதற்காக மற்றும் தேசிய தொழில்நுட்பத் திறமைகளை உயர்வடையச் செய்வதற்காக தேசிய ரீதியில் பொருத்தமான மற்றும் உயர் விளைவுகள் கொண்ட ஆய்வினை மேற்கொள்ளுதல்;
- சர்வதேச ரீதியிலான இடத்தைக் கொண்டதொரு இலங்கைப் பல்கலைக்கழகமாக நாட்டிற்கும் கைத்தொழில் துறைக்கும் சமூகத்திற்கும் நிபுணத்துவ சேவைகளை வழங்குதல்; மற்றும்
- இலங்கையின் நிலைத்திருக்கும், விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பங்குபற்றுதல்

உப வேந்தரின் செய்தி



மொறட்டுவை பல்கலைக்கழகம் (UOM), இன்று இலங்கையிலுள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. கற்கைகள் சார்பாக மிகச் சிறந்த, தன்னம்பிக்கைமிக்க, நெகிழ்வுடைய, அதிகளவில் வேலை பெறக்கூடிய சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரம் வாய்ந்த, பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் தொழில் செய்யக் கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதற்கு UOM கடுமையாக உழைக்கின்றது. அதற்குமேலும், அவர்கள் பட்டத்தைப் பெறும்போது எமது மாணவர்கள் அதிகமானோரை "வேலை தேடுபவராக" அன்றி "வேலை உருவாக்குபவர்" எனும் நிலைக்கு நாம் பயிற்றுவிக்கின்றோம். பொறியியல், மருத்துவம், கட்டடக்கலை, கணிய அளவையியல், வடிவமைப்பு, பட்டணமும் நாடும் திட்டமிடல், வசதியளித்தல் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், போக்குவரத்தும் ஏற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் வியாபாரம் போன்ற துறைகளில் பல்கலைக்கழகம் உருவாக்கும் பட்டதாரிகள், எமது அதிகமான புதிய பட்டதாரிகளின் வருடாந்த சம்பளத்தை விடக் குறைந்ததொரு தொகையான 4 வருடங்களுக்கும் ஒரு மாணவருக்கு 9500 ஐ.அமெ. டொலரை விட குறைந்த தொகையை (மீண்டுவரும்) செலவிடுகின்றது.

பல்கலைக்கழகத்தின் மூலோபாய திட்டமிடல் மற்றும் பல பூர்வாங்க வேலைகளை அமுலாக்குதல் மூலமாக இலங்கையை "அறிவியல் கேந்திரநிலையமாக" ஆக்குவதற்கு பங்களிப்புச் செய்யும் அதேவேளை, எமது நாட்டினது பொருளாதார அபிவிருத்தியில் செயற்பாட்டு இயக்கி ஒன்றாக ஆகுவதற்கான சில குறிக்கோள்களை உருவாக்கியுள்ளது.

2020 ஆண்டின் இறுதியில், மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு மாணவர்கள் 9090 பேர் காணப்பட்ட அதேவேளை, 2019 உ./த. மாணவர் தொகுதி மூலம் 2277 புதிய மாணவர்களை UOM சேர்த்துக்கொண்டதுடன் (கோவிட்-19 தொற்றுநோய் நிலைமையினால் புதிய உள்வாங்கல் மெய்யாகவே 2021-இன் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டன), பாரிய இடப்பிரச்சினையைக் கவனத்தில் கொள்ளாது மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது புதிய அனுமதிகளுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஏனைய பல பல்கலைக்கழகங்களை விடவும் முன்னனியிலும் இருந்தது.

எமது பட்டதாரி நிகழ்ச்சித்திட்டத்திற்கான மாணவர்களினதும், அவர்களின் பெற்றோர்களினதும் அதிகரித்த கேள்வியை எதிர்கொள்வதற்காக பல்கலைக்கழகமானது கடந்த பத்து ஆண்டுகளில் வருடாந்த மாணவர் உள்வாங்கலை சகல விதத்திலும் 70% இற்கு மேலாகவும், பொறியியல் பீடத்தில் 31% ஆலும், கட்டடக்கலை பீடத்தில் 83% ஆலும், தகவல் தொழில்நுட்ப பீடத்தில் 77% ஆலும் மற்றும் வியாபார பீடத்தில் 61% ஆலும் அதிகரித்துள்ளது

என்பதை இங்கு குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும். அது தவிர, புதிதாக உருவாக்கப்பட்ட மருத்துவ பீடத்தின் எம்.பி.பி.எஸ். பட்ட நிகழ்ச்சிக்காக 104 மாணவ, மாணவிகளை முதலாவது உள்வாங்கலாக மொறட்டுவை பல்கலைக்கழகம் சேர்த்துக்கொண்டது.

கடந்த பத்தாண்டுகளில் வருடாந்த உள்வாங்கல்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து இருப்பதுடன், வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அதனது சகல பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களையும் ஏற்றவகையிலும் தரத்திலும் தடங்களின்றிப் பேணிச் செல்வதையிட்டும் மேம்படுத்தியுள்ளதையிட்டும் பெருமிதம் அடைகின்றது.

2020-இல் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய 1550 மொத்த மாணவர் எண்ணிக்கையில் 1388 (90%) பேர் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச காலவரையறைக்குள் தமது முதாலவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்கள். 2020-ஆம் ஆண்டு பொதுப் பட்டமளிப்புவிழாவில் பட்டமேற்படிப்பு பட்டங்களையும் உள்ளடக்கி மொத்தமாக வழங்கப்பட்ட 1877 பட்டங்களில் 1491 இளமாணிப் பட்டங்களும், 386 பட்டமேற்படிப்பு பட்டங்களும் உள்ளடங்கியிருந்தன.

2020-இல் நடாத்தப்பட்ட பட்டதாரிகளின் தொழில் தன்மைகள் பற்றிய டிரேஷர் ஆய்வில் (Tracer surveys) மொறட்டுவை பல்கலைக்கழக பட்டதாரிகள் சம்பந்தமாக கைத்தொழில்துறைகளாலும் வருங்கால தொழில்வழங்குநர்களாலும் கோவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையிலும் கூட பொிதும் வேண்டப்படுவதை சுட்டிக்காட்டும் வகையில் அவர்களின் பட்டமளிப்பு விழாவின் போது சகல பட்டதாரிகளும் 71.1% தொழிலைப் பெற்றுள்ளனர் எனும் தகவல் பெறப்பட்டுள்ளது.

கூட்டு பட்டங்களை ஆரம்பித்தல், வெளிநாட்டு மாணவர்களை ஈர்த்தெடுத்தல், சர்வதேச சுற்றுப்பயணங்களை ஏற்பாடுசெய்தல், சர்வதேச பல்கலைக்கழகங்களில் எமது மாணவ, மாணவிகளுக்கான அனுமதிகளை ஏற்பாடுசெய்தல், சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் (MOUs) ஆகியவற்றில் ஈடுபடல் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2020-ஆம் ஆண்டின் போது, வெஸ்டர்ன் சிட்னி பல்கலைக்கழகம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் சார் கிழக்கு சீன பல்கலைக்கழகம், சிறிந்தோர்ன் சர்வதேச தொழில்நுட்ப நிறுவகம் (Sirindhorn International Institute of Technology), தாய்லாந்து தம்மசாட் பல்கலைக்கழகம் (Thammasat University) மற்றும் பாகிஸ்தான் உயர் கல்வி ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்பட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தமை சில நடவடிக்கைகளாகும்.

2020-இல், சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவகங்கள் ஆகியவற்றுடன் பல ஒத்துழைப்புக்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்த போதிலும், சில புரிந்துணர்வு உடன்படிக்கைகள் (MOUs) மற்றும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும்,

பணியாளர்களினதும் மாணவர்களினதும் வினைத்திறன்மிக்க செயலாற்றல் காரணமாக தேசிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் இப் பல்கலைக்கழகம் 2020 ஆண்டில் பல துறைகள் சார்பாக அங்கீகாரம் கிடைத்ததன் ஊடாக தொடர்ந்தும் சிறப்பான முன்னேற்றங்களை பெற்றுவருகின்றது.

அரசாங்கமும், கல்வி அமைச்சும் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் சென்ற பல வருடங்களில் அடைந்த குறிப்பிடத்தக்க சாதனைகளை கணக்கிலெடுத்து, அதன் செயல்நுணுக்க முகாமைத்துவ திட்டத்தின் குறிக்கோள்களையும், நோக்கங்களையும், அதன் தூரநோக்கான **"உலகளாவிய ரீதியில் அதிகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வி நிறுவகமாக தென் ஆசியாவில் திகழ்வதாகும்"** என்பதை அடையவும் உதவிபுரியுமென மனப்பூர்வமாக எதிர்பார்க்கின்றோம்.

பேராசி. என்.டீ. குணவர்தன
உபவேந்தர்
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

உள்ளடக்கம்

		பக்கம்
	நிறுவன இலக்குகள்	i
	பல்கலைக்கழக நிருவாக சபை	ii - iii
	நிறுவனக் கட்டமைப்பு	iv
பகுதி 1	பல்கலைக்கழக செயற்பாடுகள் சார் மீளாய்வு	01- 24
பகுதி 2	மூலவளங்கள் மற்றும் மாணவர்கள்	
	பொழிப்பு (மூலவளங்கள் மற்றும் மாணவர்கள்)	25
	விபரம் (மூலவளங்கள் மற்றும் மாணவர்கள்)	26
பகுதி 3	உள்நாட்டு மாணவர்கள்	
	பொழிப்பு (உள்நாட்டு மாணவர்கள்)	27 - 28
	விபரம் (உள்நாட்டு மாணவர்கள்)	29 - 33
பகுதி 4	வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரம்	34 - 35
பகுதி 5	பணியாட்தொகுதியினர் விபரம்	36 - 37
பகுதி 6	கல்விசார் ஆளணியினர் பற்றிய விபரம்	38
பகுதி 7	நிர்வாக ஆளணியினர் பற்றிய விபரம்	39
பகுதி 8	கல்விசாரா ஆளணியினர் பற்றிய விபரம்	39- 40
பகுதி 9	ஆய்வு கருத்திட்டங்கள் / ஆக்கவுரிமைகள்	
	பொழிப்பு (ஆய்வு கருத்திட்டங்கள் / ஆக்கவுரிமைகள்)	41
	விபரம் (ஆய்வு கருத்திட்டங்கள் / ஆக்கவுரிமைகள்)	41 - 42
பகுதி 10	ஆய்வு, புதுமையாக்கம், பிரசுரங்கள்	
	பொழிப்பு (ஆய்வு, புதுமையாக்கம், பிரசுரங்கள்)	42
	விபரம் (ஆய்வு, புதுமையாக்கம், பிரசுரங்கள்	43
பகுதி 11	நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள்	44
பகுதி 12	கிடைத்த விருதுகள் பற்றிய விபரம்	45
பகுதி 13	2020-இல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள் பற்றிய விபரம்	45
பகுதி 14	மீண்டெழும் செலவினங்கள் பற்றிய விபரம்	46
பகுதி 15	மூலதன செலவினங்கள் பற்றிய விபரம்	46
பகுதி 16	கருத்திட்ட செலவின விபரம் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)	47 - 48
பகுதி 17	நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரம் (செலவினம்)	49
பகுதி 18	நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரம் (உருவாக்கப்பட்ட வருமானம்)	49
பகுதி 19	நிதி செயற்திறன் பகுப்பாய்வு	49
பகுதி 20	உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரம்	50
பகுதி 21	நிதிக் கணக்குகள் - 2020	
	21.1 நிதி நிலைமைக் கூற்று – 2020.12.31-இல் உள்ளபடி	51
	21.2 நிதி செயலாற்றல் கூற்று - 2020.12.31-இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	52
	21.3 தேறிய சொத்துக்கள் மாற்றல் கூற்று 2020.12.31-ல் முடிவடைந்த ஆண்டுக்கானது	53
	21.4 காசுப்பாய்ச்சல் கூற்று - 2020.12.31-இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	54
	21.5 நிதிக் கூற்றுக்கான குறிப்புக்கள் - 2020	55 - 69
	21.6 நிதி நிலைமைக் கூற்றுக்கான குறிப்புக்கள்	70 - 73
	21.7 நிதிச் செயற்திறன் கூற்றுக்கான குறிப்புகள்	74 - 76
	21.8 சட்ட நியாயாதிக்க சபை நிதியியல் முன்னேற்றம் 2020	77
	21.9 கணக்காய்வுக் குழு அறிக்கை – 2020	78 - 80
பகுதி 22	நிலைபேறான அபிவிருத்தி பற்றிய எதிர்பார்க்கை அறிக்கை	81 - 84
பகுதி 23	ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கை மீதான கருத்துக்கள்	85 - 96

நிறுவன இலக்குகள்

- உயர் கல்வி பயிற்சி நிறுவகமென்ற வகையில் சர்வதேச மட்டத்திலான அங்கீகாரத்தை அடைதல்.

- உலகலாவிய அங்கீகாரத்துடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச தொடர்புடையதான ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் நிறுவக நிலையில் உயர்நிலையை அடைதல்.

- தேசத்தின் தேவைப்பாடுகள் மற்றும் கைத்தொழில் துறையினதும் சமூகத்தினதும் எதிர்ப்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையிலான கல்வியை வழங்கும் முன்னோடிப் பல்கலைக்கழமாக திகழுதல்.

- பல்கலைக்கழகம் அதனது செயற்பாடுகளில் வினைத்திறனை அடையும் வகையில் கல்விசார் புலமை மற்றும் பௌதீக சூழலை உயர்த்துதல்.

- முனைப்பான பல்கலைக்கழக கட்டமைப்பின் நிபந்தனைகளை சந்திக்கத்தக்க சிறந்த அறிவுமிக்க, திறமைமிகுந்த மற்றும் திருப்தியடைந்த ஆளணியினர் மற்றும் மாணவர்களை உள்ளடக்கியதுமான சமூகத்தை உருவாக்குதல்.

- உயர் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதில் திறமைமிக்க சேவை வழங்கும் முன்னோடியாகத் திகழுதல்.

- இலங்கையில் ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் உயர்/ தொழில்சார் கல்வி தொடர்பிலான தேசிய அபிவிருத்தி மற்றும் கொள்கை வகுப்பில் அரசாங்கத்திற்கு ஆலோசகராக செயற்படுதல்.

- தர உறுதிப்பாடு மற்றும் வினைத்திறன் மிக்க கூட்டு நல்லாட்சியினை பல்கலைக்கழக கலாசாரத்தில் ஏற்படுத்துதல்

பல்கலைக்கழக நிருவாக சபை

பதவிவழி உறுப்பினர்கள்:

உப வேந்தர் (தவிசாளர்)	பேராசி. கே.கே.சி.கே. பெரேரா பேராசி. என்.டீ. குணவர்தன (2021.09.03 முதல்)
பிரதி உப வேந்தர்	பேராசி. பீ.கே.எஸ். மஹானாம
பீடாதிபதி, கட்டடக்கலைப் பீடம்	கலாநிதி டீ.பீ. சந்திரசேக்கர
பீடாதிபதி, வியாபார பீடம்	பேராசி. என்.டீ. குணவர்தன பேராசி. எஸ்.டபிள்யூ.எஸ்.பி. திசாநாயக்க (2020.09.17 முதல்)
பீடாதிபதி, பொறியியல் பீடம்	பேராசி. என்.கே. விக்கிரமாரச்சி
பீடாதிபதி, தகவல் தொழில்நுட்ப பீடம்	திரு. பி. எச். சுதந்த
பீடாதிபதி, பட்டமேற்படிப்பு கற்கை பீடம்	பேராசி. அஜித் த அல்விஸ்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:

பேராசி. (திருமதி) ஈ.ஆர்.கே. பெரேரா (2020.01.21 முதல்)
மாண்புடன் (இளைப்பாரிய) பேராசிரியர், விலங்கியல் விஞ்ஞான திணைக்களம்,
மொறட்டுவை பல்கலைக்கழகம்

கலாநிதி பிரியந்த பந்து விக்கிரம (2020.01.21 முதல்)
செயலாளர், நகர அபிவிருத்தி அமைச்சு

கலாநிதி (திருமதி) என்.கே.சி. குணரத்ன (2020.01.21 முதல்)
பிரதி பணிப்பாளர், நாகொட வைத்தியசாலை

கலாநிதி கே.டீ.பீ. விஜேய்சிங்ஹ (2020.01.21 முதல்)
பணிப்பாளர், காசல் வீதி மகளிர் வைத்தியசாலை

கட்டடக்கலைஞர் ஆஷ்லி த வோஸ் (2020.01.21 முதல்)
பட்டயக் கட்டடக்கலைஞர்

திரு. பிரசாந்த லால் த அல்விஸ் (2020.01.21 முதல்)
சனாதிபதி சட்டத்தரணி

திரு. யூ.டீ.சி. ஜயலால் (2020.01.21 முதல்)
அரசாங்க அதிபர்/ மாவட்ட செலயாளர், களுத்துறை

திருமதி அனோமா இத்தமல்கொட (2020.01.21 முதல்)
மனித வள நிபுணர்

திரு. டிஷான் சுபசிங்ஹ (2020.01.21 முதல்)
முகாமைத்துவ பணிப்பாளர், மூர் ஸ்டீபன்ஸ் கொன்சல்டின் (பிரை.) லிமி.


திரு. டீ. லக்சிறி மென்டிஸ் (2020.09.03 முதல்)

மூதவையினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் : பேராசி. பீ.ஜீ.ஆர். தர்மரத்ன
பேராசி. ஏ.எஸ். கருணானந்த

பதிவாளர் (செயலாளர்) : Ms. டபிள்யூ.எம்.டீ.பீ. மடவல ஹேலுகல்ல

நிதியாளர் (அழைப்பின் போரில்) : திரு. கே.ஏ.டீ. புஸ்பகீர்த்தி

மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
நிறுவனக் கட்டமைப்பு



1. பல்கலைக்கழக செயற்பாடுகள் சார் மீளாய்வு

மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது (UOM), 1960-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பிரத்தியேக தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் 1966-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றைத் தொடர்ந்து, 1972-ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 15-ஆம் திகதி முதல் கட்டுபெத்தைப் பல்கலைக்கழகமாகச் செயற்பட ஆரம்பித்தது. 1978-ஆம் ஆண்டின் 16-ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கட்டுபெத்தைப் பல்கலைக்கழகமானது, அதன் தற்போதய பெயரான "இலங்கை மொறட்டுவை பல்கலைக்கழகம்" எனும் ஒரு சுயாதீனப் பல்கலைக்கழக அந்தஸ்தையும் பெற்றுக்கொண்டது. 2020-ஆம் ஆண்டின் இறுதியில், மொறட்டுவை பல்கலைக்கழகமானது கட்டடக்கலை, பொறியியல், தகவல் தொழில்நுட்பம், பட்டமேற்படிப்புக் கற்கைகள், வியாபாரம் மற்றும் மருத்துவம் ஆகிய ஆறு பீடங்களைக் கொண்டிருக்கிறது. மருத்துவ பீடம் 2020 அக்டோபர் மாதம் தொடங்கப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பதின்மூன்று (13) இளமாணிப் பட்டப் பாடநெறிகளை வழங்கும் கல்விசார் திணைக்களங்கள் முப்பத்துஐந்து (35) (பார்க்க: அட்டவணை - 1) 2020 ஆண்டின் இறுதியில் பல்கலைக்கழகத்தில் காணப்பட்டன. செலவை மீட்கும் அடிப்படையில் இதில் 29 திணைக்களங்கள் ஐம்பத்து இரண்டுக்கு (52) மேற்பட்ட பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றன. அதில், 2020 ஆண்டில் 40 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளதுடன், புதிய பட்டமேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் சில உட்பட 21 நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய புதிய உள்வாங்கல் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளது.

அட்டவணை 1- மொறட்டுவை பல்கலைக்கழக பீடங்கள் மற்றும் திணைக்களங்கள்

கட்டடக்கலை பீடம்	**பட்டமேற்படிப்புக் கற்கைகள் பீடம்**
கட்டடக்கலை திணைக்களம்	**தகவல் தொழில்நுட்ப பீடம்**
பட்டணமும் நாடும் திட்டமிடல் திணைக்களம்	தகவல் தொழில்நுட்ப திணைக்களம்
கட்டட பொருளியல் திணைக்களம்	கணிப்பீட்டு கணிதவியல் திணைக்களம்
ஒருங்கிணைந்த வடிவமைப்பு திணைக்களம்	பல்துறைசார் கற்கைகள் திணைக்களம்
வியாபார பீடம்	**மருத்துவ பீடம்**
தீர்மானித்தல் விஞ்ஞான திணைக்களம்	உடற்கூற்றியல் திணைக்களம்
கைத்தொழில் முகாமைத்துவ திணைக்களம்	உயிர் இரசாயனவியல் மற்றும் சிகிச்சையக இரசாயனவியல் திணைக்களம்
தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்	
பொறியியல் பீடம்	உயிரின ஆய்வியல் திணைக்களம்
இரசாயன மற்றும் செயல்முறை பொறியி. திணை.	மருந்தாக்கவியல் திணைக்களம்
சிவில் பொறியியல் திணைக்களம்	நுண்ணுயிரியல் மற்றும் ஒட்டுண்ணியியல் திணைக்க.
கணினி விஞ்ஞான, பொறியியல் திணைக்களம்	சமூக மருத்துவம் மற்றும் குடும்ப மருத்துவ திணைக்க.
நில மூலவளங்கள் பொறியியல் திணைக்களம்	நோயியல் மற்றும் தடயவியல் மருத்துவ திணைக்களம்
மின் பொறியியல் திணைக்களம்	மருத்துவம் மற்றும் மன நல திணைக்களம்
இலத்திரணியல், தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம்	அறுவைசிகிச்சையியல் மற்றும் மயக்கமருந்தியல் திணைக்களம்
மொழிகள் திணைக்களம்	மகப்பேற்று மற்றும் பெண்ணோயியல் திணைக்களம்
பொருட்கள் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் திணைக்களம்	சிறுவர் மருத்துவம் மற்றும் குழந்தை பிறப்பு நோயியல் திணைக்களம்
இயந்திரப் பொறியியல் திணைக்களம்	மருத்துவக் கல்வி திணைக்களம்
கணிதவியல் திணைக்களம்	மருத்துவ தொழில்நுட்பத் திணைக்களம்
புடவையும் ஆடை தொழில்நுட்பமும் திணைக்க.	
போக்குவரத்து, தேவை. ஒழுங். விநி. முகாமை. திணைக்களம்	

மொறட்டுவை பல்கலைக்கழகமானது யாராலும் மறுக்க முடியாதளவிற்கு இன்று இலங்கையில் **எல்லா வகையிலும் மிகச் சிறந்த** பல்கலைக்கழகமொன்றெனும் கீர்த்தியைப் பெற்றுக் கொண்டுள்ளது. கல்வி அடிப்படையில், ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகமொன்றில் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் எதிலும் இலகுவாக அனுமதி பெற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் கற்கைகள் மற்றும் செயற்பாடுகள் ஆகிய இரண்டிலும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த பல்கலைக்கழமொன்றினால் உருவாக்கப்பட்ட பட்டதாரிகளைப் போன்று சிறப்பாகச் செயலாற்றக்கூடிய - தொழில்நுட்பத் துறைகளிலே "உலக தரம் வாய்ந்த பட்டதாரிகளை" உருவாக்குவதற்கு பல்கலைக்கழகம் கடுமையாக உழைக்கின்றது. அதனடிப்படையில், மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பிரதான இலக்கானது கற்கைகள் சார்பாக மிகச் சிறந்த, தன்னம்பிக்கைமிக்க, நெகிழ்வுடைய, அதிகளவில் வேலை பெறக்கூடிய சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரம் வாய்ந்த, பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் தொழில் செய்யக் கூடிய பட்டதாரிகளை உருவாக்குதல் மற்றும் அதேபோல், அவர்கள் பட்டத்தைப் பெறும்போது எமது மாணவர்கள் அதிகமானோர் "வேலை தேடுபவராக" அன்றி "வேலை உருவாக்குபவர்" எனும் நிலைக்குப் பயிற்றுவிப்பதுமாகும். பொறியியல், கட்டடக்கலை, கணிய அளவையியல், வடிவமைப்பு, பட்டணமும் நாடும் திட்டமிடல், வசதியளித்தல் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், போக்குவரத்தும் ஏற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் வியாபாரம் போன்ற துறைகளில் உயர்ந்தளவில் தொழில்களில் அமரக் கூடிய, உலக தரம் வாய்ந்த பட்டதாரிகளை மொறட்டுவைப் பல்கலைக்கழகம் உருவாக்குகின்றது என்பதை சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

பல்கலைக்கழகத்தின் மூலோபாய திட்டமிடல் மற்றும் பல பூர்வாங்க வேலைகளை அமுலாக்குதல் மூலமாக இலங்கையை "அறிவியல் கேந்திரநிலையமாக" ஆக்குவதற்கு பங்களிப்புச் செய்யும் அதேவேளை, எமது நாட்டினது பொருளாதார அபிவிருத்தியில் செயற்பாட்டு இயக்கி ஒன்றாக ஆகுவதற்கான சில குறிக்கோள்களை உருவாக்கியுள்ளது.

இப் பின்னணியுடன் இந்த மீளாய்வானது, மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பெற்றுக்கொள்ளல் அதிகரிக்கப்பட்டது சார்பாகவும், அதையடுத்து 2020 ஆம் ஆண்டில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் அடைவுகள் மற்றும் அங்கீகாரங்கள் தொடர்பாக முதலில் நோக்குகின்றது. அதன் பின்னர் அது, மூலோபாயத் திட்டமிடல் அம்சங்கள், முதலீட்டுச் செலவுகள், புத்தாக்கமும் தொழில்முனைவுசார் தன்மையும் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குதல், பல்கலைக்கழக-கைத்தொழிற்றுறை ஒத்துழைப்புக்கள், தர உத்தரவாதம் என்பவற்றுடன் ஆய்வு விவரக்குறிப்பு மற்றும் சர்வதேசமயப்படுத்தல் சார்பாக முன்னேற்றும் எமது முயற்சி போன்றவற்றை நோக்குகின்றது. பல்கலைக்கழகத்தின் மூலோபாய அபிவிருத்திக்கு இடையூறாக அமைந்த வரையறைகள் பற்றிய ஒரு சுருக்கமான கூற்றுடன் ஆய்வு முடிவடைகின்றது.


1.1 பல்கலைக்கழக கல்வி பெற்றுக்கொள்வதை அதிகரித்தல்

தொழில்சார் சுகாதார கல்விக்கான தெற்காசியாவின் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட மையமாக திகழும் தொலைநோக்குடனும், 'சுகாதார பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சியில் அதிநவீன புத்துருவாக்கம் மூலம் அறியப்பட்ட மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றல்சார் அர்ப்பணிப்புமிக்க சுயாதீன சிந்தனை, இரக்கத்தன்மை, புத்தாக்கம் மற்றும் இணங்கத்தக்க சுகாதார பராமரிப்பு தொழில்வாண்மையாளர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் செயற்பணியுடனும் 2020-ஆம் ஆண்டில், மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் (UOM) மூலம் மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சை சார் இளமாணி (M.B.B.S.) பட்டத்தை வழங்குவதற்காக மருத்துவ பீடத்தை ஆரம்பித்தது.

2020 ஆண்டின் இறுதியில், மொறட்டுவை பல்கலைக்கழகத்தில், பட்டப்படிப்பு மாணவர்கள் 10,654 பேர் இருந்தனர். பொறியியல் பீடமானது மூன்று பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. அவை, பி.எஸ்சி. பொறியியல் (விசேடமான கற்கைப் பிரிவுகள் பத்து), பி.எஸ்சி. போக்குவரத்து மற்றும் தேவை விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவம், பி. வடிவமைப்பு - நவநாகரீக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி என்பனவாகும்.

கட்டடக்கலைப் பீடம் ஆறு பட்ட நிகழ்ச்சிகளை வழங்குகின்றது. அவை, பீ. கட்டடக்கலை, பீ. வடிமைப்பு, பி.எஸ்சி. கணிய அளவையியல், பி.எஸ்சி. வசதிகள் முகாமைத்துவம், பி.எஸ்சி. பட்டணமும் நாடும் திட்டமிடல் மற்றும் பி.எஸ்சி. நிலத்தோற்ற வடிவமைப்பு கட்டடக்கலை பட்டங்களுமாகும். தகவல் தொழில்நுட்ப பீடமானது, பி.எஸ்சி. தகவல் தொழில்நுட்பம் மற்றும் பி.எஸ்சி. தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் ஆகிய இரண்டு பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. 2017 ஆம் ஆண்டிலிருந்து வியாபார பீடம் வியாபார பகுப்பாய்வு, வியாபார செயலாற்றல் பகுப்பாய்வு மற்றும் நிதியியல் பகுப்பாய்வு ஆகிய மூன்று விசேட துறைகளில் வியாபார விஞ்ஞான இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது.

கட்டடக்கலைப் பீடம், வியாபார பீடம், பொறியியல் பீடம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பீடம் ஆகியன வழங்கும் இளமாணி பட்டங்கள் அனைத்தும் 4 வருடங்கள் கொண்ட கௌரவ பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் என்பதுடன், M.B.B.S. பட்ட பாடநெறியின் காலம் ஐந்து வருடங்களாகும். இதற்கு மேலதிகமாக, தகவல் தொழில்நுட்ப பீடம் தனது பங்காளி நிறுவனங்களின் உதவியுடன் இணைந்து வெளிவாரியாக வழங்கும் நிகழ்ச்சித்திட்டமாக தகவல் தொழில்நுட்ப இளமாணி (BIT) நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குகின்றது.



உரு 1 – கடந்த பத்து ஆண்டுகள் சார்பாக பீடங்களுக்கான வருடாந்த உள்வாங்கல்

2021-இன் முற்பகுதியில், 2019 உ./த. மாணவர் தொகுதியிலிருந்து UOM-இற்கு 2277 மாணவ, மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், அது, காலப்பகுதி சார்ந்த சிக்கல் மற்றும் பாரிய இடப்பிரச்சினை என்பவற்றை கவனத்தில் கொள்ளாது மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது புதிய அனுமதிகளுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஏனைய பல

பல்கலைக்கழகங்களை விடவும் முன்னனியில் இருந்துமாகும் என்பதுடன், பல்கலைக்கழக வரலாற்றில் அதிக எண்ணிக்கையான பட்டதாரி மாணவ, மாணவிகளை அனுமதித்த பல்கலைக்கழகம் எனும் விதிவிலக்கான ஆண்டினையும் பதிவுசெய்தது.

எமது பட்டதாரி நிகழ்ச்சித்திட்டத்திற்கான மாணவர்களினதும், அவர்களின் பெற்றோர்களினதும் அதிகரித்த கேள்வியை எதிர்கொள்வதற்காக பல்கலைக்கழகமானது கடந்த பத்து ஆண்டுகளில் வருடாந்த மாணவர் உள்வாங்கலை சகல விதத்திலும் 70% இற்கு மேலாகவும், பொறியியல் பீட உள்வாங்கல் 31% ஆலும், கட்டடக்கலை பீட உள்வாங்கல் 83% ஆலும், தகவல் தொழில்நுட்ப பீட உள்வாங்கல் 77% ஆலும் அதிகரித்துச் சென்றுள்ளது என்பதைக் இங்கு குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும். கடந்த பத்து மாணவர் உள்வாங்கல்கள் தொடர்பாகவும் மூன்று பீடங்களுக்கும் பட்டதாரி அபேட்சகர்கள் உள்வாங்கப்பட்ட முறையினை உரு-1 வெளிக்காட்டுகிறது. மேலும், புதிதாக உருவாக்கப்பட்ட மருத்துவ பீடத்தின் எம்.பி.பி.எஸ். பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக 104 மாணவ, மாணவிகள் கொண்ட அதனது முதலாவது உள்வாங்கலை UOM சேர்த்துக்கொண்டது.


மொறட்டுவைப் பல்கலைக்கழகம் 2006 ஆம் ஆண்டில் அதனது திறந்த தொலைக் கல்வி (ODL) முறையிலான முதலாவது வெளிவாரி இளமாணி நிகழ்ச்சித்திட்டமான தகவல் தொழில்நுட்ப இளமாணிப் பட்டத்தை (BIT) ஆரம்பித்தது. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பிரதான திட்டத்தின் ஊடாக இந்த திறந்த மற்றும் தொலைக்கல்வி முறையானது உயர் தரத்தில் தகுதிபெற்ற, குறிப்பாக கிராமபுர பிரதேசத்தைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையான மாணவர்களுக்கு இப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் உயர் தரத்தைக் கொண்ட கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கின்ற முறையொன்றாக இனம்காணப்பட்டுள்ளது. இந்த BIT நிகழ்ச்சித்திட்டமானது, பிரதானமாக அங்கீகாரம் பெற்ற பங்காளி நிறுவனங்களின் ஊடாக வழங்கப்படுவதுடன், இந்த முன்மாதிரியானது ஏனைய பல பல்கலைக்கழகங்கள் மூலம் வெளிவாரி பட்டங்கள் வழங்கப்படுகின்ற முறையை விட மாறுபட்டுக் காணப்படுவது மாணவர் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் அதேவேளை அதன் தர உறுதிப்படுத்துதலும் ஆகும். 2020 ஆண்டின் போது இந் நிகழ்ச்சித்திட்டத்தை தொடருவதற்காக 275 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2020 ஆண்டின் இறுதியில் 2814 பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இந் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்கின்றனர்.

1.2 அடைவுகள் மற்றும் அங்கீகாரங்கள்

2020 இல் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய 1550 மொத்த மாணவர் எண்ணிக்கையில் 1388 (90%) பேர் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச காலவரையறைக்குள் தமது முதாலவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்கள். 2020 ஆண்டு பொதுப் பட்டமளிப்புவிழாவில் பட்டமேற்படிப்பு பட்டங்ளையும் உள்ளடக்கி மொத்தமாக வழங்கப்பட்ட 1877 பட்டங்களில், 1491 இளமாணிப் பட்டங்களும், 386 பட்டமேற்படிப்பு பட்டங்களும் உள்ளடங்கியிருந்தன.

கடந்த பத்தாண்டுகளில் வருடாந்த உள்வாங்கல்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து இருப்பதுடன், வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் எல்லாப் பட்டதாரிகளையும் ஏற்றவகையிலும் தரத்திலும் தடங்களின்றிப் பேணிச்செல்வதனாலும் மேம்படுத்தியுள்ளதனாலும் பெருமிதம் அடைகின்றது. 2020 இல் நடாத்தப்பட்ட பட்டதாரிகளின் தொழில் தன்மைகள் பற்றிய டிரஷர் ஆய்வில் (Tracer surveys) கோவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையிலும் கூட மொறட்டுவைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் கைத்தொழில்களாலும், அதன் தொழில்வழங்குநர்களாலும் பெரிதும் வேண்டப்படுகின்றார்கள் என்பதைக் சுட்டிக்காட்டும் வகையில் அவர்களின் பட்டமளிப்பு விழாவின் போது சகல பட்டதாரிகளும் 71.1%-மும்,

கட்டடக்கலை பட்டதாரிகள் 93.0%-மும், வசதியளித்தல் முகாமைத்துவ பட்டதாரிகள் 81.1%-மும், கணிய அளவையியல் பட்டதாரிகள் 82.5%-மும், பொறியில் பட்டதாரிகள் 73.4%-மும் மற்றும் தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகள் 71.1%-மும் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர் எனும் தகவல் தொியவந்துள்ளது. உரு- 2 மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பட்டப்படிப்பு பாடநெறிகள் ஒவ்வொன்றினதும் தொழில்வாய்ப்புத்திறன் வீதத்தைக் காட்டுகிறது.



உரு – 2 பல்வேறு பட்ட பாடக்கற்கைகள் சார்பான வேலைவாய்ப்பு – 2020

2020 ஆண்டில் பணியாளர்களினதும் மாணவர்களினதும் வினைத்திறன்மிக்க செயலாற்றல் காரணமாக தேசிய ரீதியில் மற்றும் உலகளாவிய ரீதியில் பல துறைகள் சார்பாக அங்கீகாரம் கிடைத்ததன் ஊடாக தொடர்ந்தும் UOM சிறப்பான முன்னேற்றத்தை பெற்றுவருவதுடன், குறிப்பிடத்தக்க சில விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

சர்வதேச விருதுகள்:

- எந்திரப் பொறியியல் திணைக்களத்தைச் சேர்ந்த கலாநிதி ஜே.ஆர். கமகே அவர்களுக்கு, இயந்திரப் பொறியியல் நிறுவகத்தின் (IMechE) தெற்காசிய பிராந்தியம் (SAR) மூலம் 2019-ம் ஆண்டுக்கான இளம் தன்னார்வத் தொண்டர் விருது வழங்கப்பட்டது.

- மின் பொறியியல் திணைக்களத்தைச் சேர்ந்த எம்.எஸ்சி. மாணவரான திரு. நிலுஸ் ஜயவர்தன அவர்களால், கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய மற்றும் பேராசி. ரஞ்சித் பெரேரா ஆகியோர் இணை ஆசிரியர்களாக சமர்ப்பிக்கப்பட்ட "Technical and non-technical losses in single phase Energy Metering" எனும் தலைப்பிலான பத்திரம் அவுஸ்திரேலியா, வெஸ்டர்ன் சிட்னி பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட மின் பொறியியல் ஆராய்ச்சி மற்றும் நடைமுறை பற்றிய சர்வதேச மாநாட்டில் (iCEERP-2019), சிறந்த பத்திரத்திற்கான விருதை வென்றெடுத்தது.

- மொறட்டுவைப் பல்கலைக்கழக, சிவில் பொறியியல் திணைக்கள கலாநிதி (திருமதி) ஜே.சி.பீ.எச். கமகே அவர்களால் மேற்பார்வை செய்யப்பட்ட, பட்டமேற்படிப்பு மாணவர் திரு. சம்பத் அபேயசேக்கர அவர்களின், "Innovation and fabrication of low-cost three point, cyclic flexural test apparatus for structural engineering laboratory applications" எனும் தலைப்பிலான ஆய்வுப் பத்திரம் மலேசியா, கோலாலம்பூர், புக்கிட் பிண்டாங், சுவிஸ் கார்டன் ஹோட்டலில், "நிலைபேறான எதிர்காலத்தை நோக்கி புதுமையான கட்டமைப்புகளுடன் உலகைக் கட்டமைத்தல்" எனும் கருப்பொருளின் கீழ் நடைபெற்ற 2020 – சிவில் பொறியியல் மற்றும் கட்டடக்கலை சார் சர்வதேச மாநாட்டில் (ACE) சிறந்த பத்திரத்துக்கான விருதை வென்றெடுத்தது.

- எந்திர பொறியியல் பட்ட மாணவர்களது குழுவொன்றான Team MORA Phoenix அணி, 'EqualEngineers' மூலம் ஐ.இரா., IMechE நிறுவனத்துடன் இணைந்து ஒழுங்குசெய்யப்பட்ட 'கோவிட் 19 மாணவர் சவால்' உயர் கல்விப் பிரிவின் கீழ், உலகெங்கிலும் உள்ள 100 இற்கும் மேற்பட்ட தனித்துவமான போட்டியாளர்கள் மத்தியில் முதலாம் இடத்தை வென்றெடுத்தது. ஹஸ்மட் உடைகள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை அணிந்துகொண்டு, வெப்பமான காலநிலையில் சுகாதாரப் பராமரிப்பு பணியாளர்களை சௌகரியமாக வைத்திருக்க வடிவமைக்கப்பட்ட, குளிரூட்டும் அமைப்புடன் ஒருங்கிணைந்த, பளு குறைவான, தயாரிப்பதற்கு எளிதான உடையொன்றுக்கான அவர்களது யோசனை Team MORA Phoenix அணியினால் முன்மொழியப்பட்டது.

- கட்டடக்கலை திணைக்களத்தின் திரு. எம்.பீ.சி.எம். கவறம்மன அவர்களின் இறுதியாண்டு விரிவான வடிவமைப்பு கருத்திட்டமானது, NYPPON Paint மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட AYDA (ஆசியா இளம் வடிவமைப்பாளர் விருது - Asia Young Designer Award) போட்டியில் 'சிறந்த வடிவமைப்பு விளைவு விருது (சர்வதேச மட்டம்)' மற்றும் 'தங்க விருது (தேசிய மட்டம்)' ஆகிய இரண்டையும் வென்றெடுத்தது – 2019, 'கலாச்சார மற்றும் கைத்தொழில்துறை வெளிப்பாடு', இரத்தினக்கல் மேம்பாட்டு மையம் @ இரத்தினபுரி.

- இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களத்தின் (ENTC) ஆறு பட்டதாரி மாணவர்களையும் கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் திணைக்களத்தின் நான்கு மாணவர்களையும் கொண்ட அணியொன்று, ஸ்பெயின், பார்சிலோனாவில் நடைபெற்ற ஒலிப்புலன், பேச்சு மற்றும் சமிக்ஞை செயலாக்கம் (ICASSP) சார் சர்வதேச மாநாட்டுடன் இணைந்ததாக சமிக்ஞை செயலாக்க கிண்ணம் (SP Cup) 2020 போட்டியில் இரண்டாவது இடத்தை வென்றெடுத்தது.

- கட்டட பொருளியல் திணைக்கள விரிவுரையாளர் திரு. அக்கில பிரமோத் மற்றும் அதே திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மஹேஷ் அபேயநாயக்க ஆகியோரின், "Impact of Environmental Law and Physical Planning Law to the Construction Projects in Sri

Lanka" எனும் தலைப்பிலான பத்திரம், ஐக்கிய அரபு இராச்சியத்தின் துபாய் நகரில் நடைபெற்ற, 2020 – கைத்தொழில்துறை பொறியியல் மற்றும் தொழிற்பாடுகள் முகாமைத்துவம் பற்றிய 10-வது சர்வதேச மாநாட்டில், சிறந்த பத்திரதுக்கான விருதை வென்றெடுத்தது.

- மொறட்டுவை பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அணி (Team SiRi), சீனாவின் ஷங்காய் நகரில் ஷங்காய் மின் சக்தி (Electric Power) பல்கலைக்கழகத்தின் (SUEP) மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட, சக்தி மற்றும் வலு பல்கலைக்கழகங்களின் 2-வது பிராந்திய சங்கத்தினது (RAEP) 2020 – சக்தி மற்றும் மின் சந்தை வணிக தீர்மான உருவகப்படுத்துதல் போட்டியில் சம்பியன்ஸ் ஆனது.

தேசிய விருதுகள்:

- போக்குவரத்து மற்றும் தேவைகள் ஒழுங்கமைப்பு விநியோக முகாமைத்துவ திணைக்களத்தின் 1-வது நிலை மற்றும் 2-வது நிலை மாணவர்கள் உட்பட TNDS அணி, இலங்கை CILT-இன் இளம் தொழில்வாண்மையாளர்களது மன்றத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டு, 2020 பெப்பிரவரி 11-ஆம் திகதி, Hatch Colombo-இல் நடாத்தப்பட்ட CILT YPF இளம் தொழில்வாண்மையாளர்களின் சவால் 2019 நிகழ்வில் சம்பியன்ஷிப்பை வென்றெடுத்தது.

- மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் திணைக்கள, கலாநிதி (திருமதி) ஜே.சி.பீ.எச். கமகே அவர்களால் மேற்பார்வை செய்யப்படும் பட்டமேற்படிப்பு மாணவி Ms.ஆருகா செல்வரட்னம் அவர்களது பட்டதாரி ஆய்வு கருத்திட்டமான "Effect of anchorages on flexural behaviour of carbon fiber reinforced polymer (CFRP) – strengthened reinforced concrete curved beams" எனும் தலைப்பிலான பத்திரம், உயர் விஞ்ஞானம் சம்பந்தமான இலங்கை சங்கத்தினது 75-வது வருடாந்த அமர்வுகளில் 'சி' அமர்வில் (பொறியியல், கட்டடக்கலை மற்றும் அளவையியல் சார்) சிறந்த வாய்மூல சமர்ப்பித்தலுக்கான விருதை வென்றெடுத்தது.

- கோவிட்-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்காக IMechE இளம் அங்கத்தவர்களது வடிவமைப்புத் திறன்களை ஆராய்வதற்காக, மெக்கானிக்கல் பொறியியலாளர்கள் நிறுவனத்தின் (IMechE) இலங்கை குழுவின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட போட்டியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை எந்திர பொறியியல் திணைக்களத்தைச் சேர்ந்த மூன்று மாணவர் அணிகள் வென்றெடுத்தது.

- எந்திர பொறியியல் திணைக்களத்தைச் சேர்ந்த 17-வது தொகுதியின் பட்டதாரி மாணவரொருவரான ஷெனால் தீக்ஷன, மெக்கானிக்கல் பொறியியலாளர்கள் நிறுவனத்தின் (IMechE) இலங்கை குழுவின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட, Speak Our for Engineering (SOfE) தேசிய சுற்றில் வெற்றி பெற்றார்.

- மொறட்டுவை பல்கலைக்கழக, சிவில் பொறியியல் திணைக்களத்தின் 2015 தொகுதியின் எச்.எச்.என்.டீ. ஹக்கல்ல, இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தினால் (IESL) வழங்கப்பட்ட தொழில்துறை பயிற்சியின் போது சிறந்த சிவில் பொறியியலாளருக்கான, 2019/2020 ஆம் ஆண்டினது 'மிகார ரணதுங்க அறக்கட்டளை விருதை' (தீவு முழுவதுக்குமான 1-வது இடம் – பிரிவு 'ஏ') வென்றெடுத்தார். அதே தொகுதியைச் சேர்ந்த ஆர்.எம்.ஏ.ஜீ.பீ. ரத்நாயக்க, இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தினால் (IESL) வழங்கப்பட்ட சிறப்பு விருதை (பிரிவு 'பி') வென்றெடுத்ததுடன், அவரது சிவில் பொறியியல் தொகுதி சக மாணவர்களான எஸ். கஜனன் மற்றும் கே.பி.எஸ்.எல். மதுஷன் ஆகியோர் பங்குபற்றிமைக்கான சான்றிதழ்களை (பிரிவு 'சி') பெற்றுக்கொண்டனர்.

- மின் பொறியியல் திணைக்களத்தைச் சேர்ந்த குழுவொன்றின் மூலம் இறுதியாண்டு கருத்திட்டமாக, "Smart Device for DC Side Fault Detection and Prediction for Solar PV Systems" எனும் தலைப்பில் சமர்ப்பித்த பத்திரமானது 2020 IESL இளம் அங்கத்தவர் தொழில்நுட்ப மாநாட்டில் சிறந்த பத்திரத்திற்கான "பொறியியலாளர் சந்திரசேன விருதை" வெற்றியீட்டியது.

- மின் பொறியியல் திணைக்களத்தின் "Develop a Series-arc Fault Detector to minimize the risk of domestic electrical fires" எனும் தலைப்பிலான கருத்திட்டத்திற்கு, இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தின் மூலம், மின் பொறியியல் 2019/2020 சார் சிறந்த பட்டதாரி மாணவர் கருத்திட்டத்திற்கான "பொறியி. ஈ.டபிள்யூ. கருணாரத்ன விருது" வழங்கப்பட்டதுடன், உயர் விஞ்ஞானங்களுக்கான இலங்கை சங்கத்தின் மூலம், பொறியியல் சார் – குழு பிரிவில் சிறந்த பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான இறுதியாண்டு பட்டதாரி மாணவர் கருத்திட்டத்துக்கான 'மணம்பேறி பிரதான விருது 2019' வழங்கப்பட்டது.

- மின் பொறியியல் திணைக்களத்தைச் சேர்ந்த குழுவொன்றின் மூலம் இறுதியாண்டு கருத்திட்டமாக, "Smart Device for DC Side Fault Detection and Prediction for Solar PV Systems" எனும் தலைப்பில் சமர்ப்பித்த பத்திரம், 2020 IESL இளம் அங்கத்தவர் தொழில்நுட்ப மாநாட்டில் சிறந்த பத்திரத்திற்கான "பொறியி. சந்திரசேன விருதை" வெற்றியீட்டிக் கொண்டது.

- Team AbruTech அணியினது "Vision-Based Adaptive Traffic Control System" எனும் இறுதியாண்டு கருத்திட்டம், மூன்றாம் நிலை மாணவர் பிரிவில் பிரித்தானியா கணினி சங்கத்தினால் (BCS) ஒழுங்குசெய்யப்பட்ட தேசிய சிறந்த தர மென்பொருள் 2020 (National ICT) விருது நிகழ்வில் தங்க விருதை வெற்றியீட்டியது.

- கட்டடக்கலை திணைக்களத்தின் விரிவுரையாளர் (தகுதிகாண்) நதீகா ஜயவீர அவர்களுக்கு, 2020-இன் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கான சனாதிபதி விருது வழங்கப்பட்டது.

- பொறியி. ஜீ. கிஷோகுமார், பொறியி. ஈ.என்.கே. குடாஹெவ மற்றும் கலாநிதி அசங்க ரொட்ரிகோ ஆகியோரால் எழுதப்பட்ட "Parameter Identification for Design of an Automated Load- Frequency Control (ALFC) Scheme for Sri Lankan Power System" எனும் பத்திரம், இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் 114-வது வருடாந்த அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 2020 வருடாந்த அமர்வில், சிறந்த பத்திரம் சார்பான "பொறியி. ஈ.ஓ. பெரேரா - 2020" (ENG E.O PEREIRA AWARD FOR BEST PAPER-2020) விருது கிடைத்தது.

1.3 பிரதான திட்டம் மற்றும் செயல்நுணுக்க முகாமைத் திட்டம்

மொறட்டுவைப் பல்கலைகழகத்தின் 2020 மற்றும் 2030ஆம் ஆண்டுக்கான பிரதான திட்டம் கட்டடக்கலை பீடத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர் குழுவொன்றினால் தயாரிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் தற்போதைய சகல பௌதிக அபிவிருத்தி செயற்பாடுகளும் இந்த பிரதான திட்டத்திற்கும் செயல்நுணுக்க முகாமைத் திட்டத்திற்கும் (SMP) 2014-2018 ஏற்ப மேற்கொள்ளப்படுகிறது. பல்கலைக்கழகம் சார் துரித விரிவாக்கத்துடன், 2020 மற்றும் 2030 தொடர்பான திருத்தப்பட்ட பிரதான திட்டங்கள் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணத்துவக் குழுவொன்றின் மூலம் தேசிய அபிவிருத்தித்திட்டம் மற்றும் உயர் கல்வி அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் கூட்டுத்திட்டம் ஆகியவற்றுடன் இணைந்ததாக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் சார்பான துரித அபிவிருத்தி திட்டங்கள் உள்ளடக்கப்பட்டு மேம்படுத்தப்படுகின்றது.

முன்னைய 2010–2015 கூட்டுத் திட்டம் திருத்தியமைக்கப்படுவதன் மூலம், செயல்நுணுக்க முகாமைத் திட்டம் (SMP) 2017-2018 அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், 2013 ஆண்டின் பிற்பகுதியில் அதன் பங்காளிகள் எல்லோருடனும் பரந்தளவில் கலந்துரையாடியதன் பின்னர், 2014 மார்ச் மாதத்தில் பல்கலைக்கழக நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. 2014-2018 செயல்நுணுக்க முகாமைத்துவத் திட்ட (SMP) மீளாய்வின் போது, மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நிதித் தேவைப்பாடுகள் பெருமளவு அவசியமற்ற அதன் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் பெரும்பாலானவற்றை தற்போது அடைந்துள்ளது என்பதையும் எஞ்சிய இலக்குகளையும் அடைந்துகொள்ளும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது என்பதையும் வெளிக்காட்டியது.

2017 – 2021 ஆண்டுப் பகுதிக்கான செயல்நுணுக்க முகாமைத்துவத் திட்டத்தை (SMP) இற்றைப்படுத்துவதற்காக இரண்டு நாள் சிந்தனைக்கிளறல் செயலமர்வொன்று 2017 சனவரி மாதம் பல்கலைக்கழக உப வேந்தர், சபை உறுப்பினர்கள், மூதவை அங்கத்தவர்கள் மற்றும் தொிவுசெய்யப்பட்ட கல்விசார் மற்றும் நிருவாக பணியாளர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்ட அதேவேளை, மற்றுமொரு ஓர் நாள் செயலமர்வொன்று பெப்பிரவரி மாதம் பல்கலைக்கழக உப வேந்தர், பிரதி உப வேந்தர், பதிவாளர், பீடங்களின் பீடாதிபதிகள் மற்றும் பதில் கடமையாற்றும் நூலகர் ஆகியோர்களுடன் கல்விசார் துணை மற்றும் கல்விசாராத பணியாளர்கள் வகையைச் சேர்ந்த தொிவுசெய்யப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கையானோரின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டது.

1.4 மூலதன முதலீடுகள்

மொறட்டுவை பல்கலைக்கழகம் அதன் பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக மிக விசேட நிதிகளைப் பெற்றுக்கொண்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் விரிவாக்கத்திற்கு இணைவாக கடந்த

ஐந்தாண்டு காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்பட்ட நிர்மாணக் கருத்திட்டங்கள் பற்றிய விபரங்களை அட்டவணை-2 காட்டுகிறது.

2020 ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) ஊடாக திறைசேரியிலிருந்து மூலதன முதலீடாக நிர்மானிப்புக்களுக்காக ரூ. 164.8 மி. கிடைத்ததுடன், மூலதனச் சொத்துக்களை புனரமைப்புச் செய்வதற்காக ரூ. 67.0 மில்லியனும், நிலையான சொத்துக்களை கைகொள்வதற்காக ரூ. 146.78 மில்லியனும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

அட்டவணை 2 – கடந்த 5 வருடத்தின் மூலதன உட்கட்டமைப்பு அபிவிருத்தி

கருத்திட்டம்	பெறுமதி (ரூ. மில்.)	நிலை
கட்டடக்கலை பீடம் – கட்டம் II (பட்டணமும் நாடும் திட்டமிடல்)	140	2015-ல் பூ.செ.பட்டது
மாணவ நிலையம் மற்றும் சிற்றுண்டிச்சாலை விரிவாக்கல்	57	2015-ல் பூ.செ.பட்டது
நெடுஞ்சாலை சார் பரிசோதனை ஆய்வுகூடம் - கட்டம் I	6.7	2015-ல் பூ.செ.பட்டது
விடுதி கருத்திட்டத்தின் கீழ் விடுதிக் கட்டடம் - I (Pre-fabricated) (உயர் கல்வி அமைச்சின் நேரடி நிதியளிப்பு)	196.4	2016-ல் பூ.செ.பட்டது
விடுதி கருத்திட்டத்தின் கீழ் விடுதிக் கட்டடம் - 2 (Pre-fabricated) (உயர் கல்வி அமைச்சின் நேரடி நிதியளிப்பு)	196.4	2016-ல் பூ.செ.பட்டது
தகவல் தொழில்நுட்ப பீடக் கட்டடம் - கட்டம் II	205	2016-ல் பூ.செ.பட்டது
கட்டடக்கலை பீடம் – கட்டம் IV (கட்டடக்கலை)	150	2016-ல் பூ.செ.பட்டது
கட்டடக்கலை பீடம் – கட்டம் III (ஒருங்கிணைந்த வடிவமைப்பு)	110	2017-ல் பூ.செ.பட்டது
நிருவாகக் கட்டடத்தின் விரிவாக்கம்	282	2017-ல் பூ.செ.பட்டது
கட்டடக்கலை பீட விரிவுரை அறை கட்டடம் (உருக்கு)	164	2017-ல் பூ.செ.பட்டது
பொறியியல் பீட பலநோக்குக் கட்டடம் (உருக்கு)	184	2017-ல் பூ.செ.பட்டது
நெடுஞ்சாலை சார் பரிசோதனை ஆய்வுகூடம் - கட்டம் II	23.7	2018-ல் பூ.செ.பட்டது
புடவையும் ஆடை தொழில்நுட்பமும் திணைக்கள கட்டடம்	307	2018-ல் பூ.செ.பட்டது
புடைவை மற்றும் ஆடை தொழில்நுட்ப திணைக்கள புடைவை சார் நீடிப்பு கட்டட நில மற்றும் இடைநிலை மாடிகளின் எஞ்சிய வேலை	28	2019-ல் பூ.செ.பட்டது
கட்டட பொருளியல் திணைக்கள கட்டடம்	75	நடைபெறுகின்றது
பொருட்கள் விஞ். மற்றும் பொறியியல் திணைக்கள கட்டடம்	439	நடைபெறுகின்றது
பெண்கள் விடுதி (400 மாணவிகளுக்கானது)	194	நடைபெறுகின்றது
எந்திரவியல் பொறியியல் திணைக்களத்திற்கான உத்தேச கட்டடம்	247	நடைபெறுகின்றது

1.5 புதுமையாக்க, தொழிலுரிமைத்துவ பட்டதாரிகளை உருவாக்குதல்

மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது, மூன்று வருடங்களுக்காக தேசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் பல்கலைக்கழக முறைமையில் முதன்முதலாக ஏற்படுத்திய கைத்தொழில் ஆதரவு தலைமைத்துவத்துடன் கூடிய "தொழிலுருமைத்துவம் பற்றிய NDB வங்கியின் அறக்கொடை உடனான பேராசிரியர்/உறுப்பினர்" எனும் கௌரவ பதவியை உருவாக்கியுள்ளது. இதன் கீழ் முதலாவது அறக்கொடையுடனான பேராசிரியர் 2010 ஆண்டு அக்டோபரில் நியமிக்கப்பட்டதுடன், இதன் கீழ் எடுக்கப்பட்ட தொழில்முனைவோர் சார் முன்னெடுப்புக்களால் பிரதானமாக 'இளம் தொழில்முனைவோர் ஸ்ரீலங்கா' (YESL) நிகழ்ச்சித்திட்டத்துடன், பல்கலைக்கழக தொழிலுரிமைத்துவ கலாச்சாரம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்-

பட்டதுடன், பொறியியல் பட்ட பாடவிதானத்துக்கு தொழிலுரிமைத்துவம் தொடர்பாக சிறு விசேடத்துவமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

பல்கலைக்கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மற்றுமொரு முக்கியமான செயற்றிட்டம், மூன்றாண்டு காலப்பகுதியினுள் ரூ. 16 மில்லியனுக்கும் கூடுதலான தொகையுடன் கைத்தொழிற்துறை நிதிசார் சேவைகள் (IFS) மூலமான முதலீட்டுடன் "புத்தாக்கம் மற்றும் தொழிலுரிமைத்துவம்" பற்றிய அறக்கொடையுடனான பதவியொன்று உருவாக்கப்பட்டது. இந் நோக்கத்திற்காக 2014 நவம்பரில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டதுடன், புத்துருவாக்கம் மற்றும் தொழிலுரிமைத்துவம் தொடர்பான சிரேஷ்ட தோழமை உறுப்பினரொருவரின் நியமனத்துடன், 2015 செப்ரெம்பரில் புதிய தொழிலுரிமைத்துவம் பூர்வாங்க செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன.

புதிய கண்டுபிடிப்புக்கள், புத்தாக்கங்கள் மற்றும் தொழிலுரிமைத்துவம் சார்பான வசதிகளை ஏற்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குதல் அத்துடன், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரிடையே தொழிலுரிமைத்துவம் பற்றிய கலாச்சாரத்தை மேம்படுத்துதல் சம்பந்தமாக பல்கலைக்கழக உபாயங்களின் கீழ் 2017 ஆண்டினுள் சில குறிப்பிடத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பூர்வாங்க பொது வேலை வெற்று இடத்தை அடிப்படையாகக் கொண்ட முன்னெடுப்பு இலங்கையின் முதலாவது அரசாங்க பல்கலைக்கழகத்தில் "The Enterprise" ஆரம்பித்து வைக்கப்பட்டது. The Enterprise ஏற்கனவே முன்மொழியப்பட்ட தனியார் துறை பங்காண்மையுடன் மேலும் வசதிகளை கூட்டிக்கொண்டு தற்போது 25-இற்கும் மேற்பட்ட முன்னெடுப்புக்களுக்கு இடவசதிகளை உண்டாக்க பல்கலைக்கழகத்திற்கு முடிந்துள்ளது. புத்தாக்கங்கள், தொழிலுரிமைத்துவ மற்றும் தொழில்நுட்ப அனுமதிப்பத்திரங்களை வழங்தல் சார் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் நிலையமாக The Enterprise திகழும். பல்கலைக்கழக முன்னெடுப்புக்களுக்கான திறந்த அலுவலக சூழலொன்றை வழங்கும் அதேவேளை, பல்கலைக்கழகத்தினுள்ளேயே மேலும் புத்தாக்கங்களுக்கு ஒத்துழைப்பு மற்றும் ஏற்பாட்டு வசதியை வளர்த்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பொது வேலை வெற்று இடத்தில் ஆரம்பத்தில் மாணவர்களது 15 முன்னெடுப்புக்கள் மற்றும் 3 கைத்தொழில் முன்னெடுப்புக்கள் (பட்டதாரிகளால் முன்னெடுக்கப்படுபவை) ஆகியவற்றுக்கு இடவசதி உண்டாக்கும் திறனைக் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட சகல மாணவர் முன்னெடுப்பினதும் உள் கூட்ட அறை மற்றும் சரக்கு அறை ஆகியவற்றுக்கான பிரவேசத்துடன் இலவச Wi-Fi உடனும் காப்பகத்தில் 2 முதல் 3 இடங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். மேலும், கைத்தொழில் முன்னெடுப்புக்கள் 3 இற்கு கழிவு கொடுக்கப்பட்ட வீதத்தில் வழங்கப்படுகின்ற 5 முதல் 6 வரையிலான இடங்களை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படும். பொது வேலை வெற்று இடத்திற்கு தொிவுசெய்வதற்கு விசேடமாக வரையப்பட்ட அளவுகோல்கள் மிகச் சிறந்த முன்னெடுப்புக்களை தேர்ந்தெடுப்பதை உறுதிப்படுத்துகிறது. தற்போது, மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது முன்னெடுப்புக்களின் வாழ்க்கைச் சுழற்சியின் பல்வேறு நிலைகளில் 80 இற்கும் மேற்பட்ட முன்னெடுப்புக்களை கொண்டு வந்துள்ளது. 2017 பெப்பிரவரியில் தொடங்கப்பட்ட Mora Ventures மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெடுப்பு காப்பகமாகும். இலங்கையின் முதலாவது unicorn (ஐ.அமெ. டொ. 1 பில்லியனுக்கு மேல் மதிப்புள்ள முன்னெடுப்பு) மூலம் நிதியளிப்பு செய்யப்பட்ட Mora Ventures 2027 ஆண்டு வரை காலாண்டு ரீதியில் நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்முயற்சி, பல்கலைக்கழக வியாபார இணைப்புக் குழு (Enterprise, University Business Linkage Cell) 2020-இல் அதன் முன்னெடுப்புக் குழுக்களுக்குக்கான தொடர்ச்சியான செயல்பாடுகளை தொடங்கியுள்ளது. "AGX, Pristine, ThermalR, Wiyamana, AbRuTeCh, மற்றும் MagicBit" ஆகிய முன்னெடுப்பு குழுக்கள் இச் செயற்பாடுகளில் பங்குபற்றின. கம்பனியின் ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவம், நிதி கையாளுதல், வடிவமைப்பு சிந்தனை, உற்பத்தி பொதிசெய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான அமர்வுகளை உள்ளடக்கிய தொடர் செயற்பாடுகள்.

உயிர்வாயு தகன முறைமைக்கான கட்டுப்பாட்டு பொறிமுறையை உருவாக்கும் நோக்கத்துடன் புதிய ஆராய்ச்சி முன்னெடுப்பொன்று 2020 ஏப்பிரல் 21-ஆம் திகதி தாபிக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி கருத்திட்டமானது, மொறட்டுவை பல்கலைக்கழக, இரசாயன மற்றும் செயல்முறை பொறியியல் திணைக்களத்தினதும், ஜேர்மன் Technische Hochschule Nürnberg Georg Simon Ohm-இன் பேராசி. கிறிஸ்டோப் பேயர் அவர்களினதும் கூட்டு மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும். மேலும், வெவ்வேறு தகன கட்டுப்பாட்டு தொகுதிகளின் கீழ் உயிர்வாயு தகனத்தை பகுப்பாய்வு செய்வதற்காக அளவுரீதியான மாதிரிகளுடன் கணிப்பிய பாய்ம இயக்கவியல் தளத்தில் கலவை மற்றும் தகன தாக்கங்களை உருவகப்படுத்தும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது, பல்கலைக்கழகத்தில் 33 ஆக்கவுரிமை விண்ணப்பங்கள் உள்ளன. அவை, ஆக்கவுரிமை மானியங்களுக்காக NIPO மூலம் செயல்முறைக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது. அத்துடன், எந்திர பொறியியல் திணைக்களத்தின் பேராசி. ஆர்.ஏ.ஆர்.சி. கோபுர அவர்களது, "Under-Actuated and Self-Adaptive Mechanism for a Robotic Finger" என்பதற்கான ஆக்கவுரிமை 2020-இல் கிடைத்தது.

தொழிலுரிமைத்துவம் சார் சூழலொன்றை உருவாக்குவதற்கான பல்கலைக்கழகத்தின் முயற்சி தொடர்பான செயற்பாடுகள் ஊடாக ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள புலமைச் சொத்து பற்றிய ஆலோசனை குழு (IPAC), பல்கலைக்கழக கைத்தொழில்துறை இணைப்புக் குழு (UIIC), கருவாக்கல் சார் திணைக்களங்கள் மற்றும் பீடங்களில் உள்ள கருவாக்கல்சார் நிறுவனங்களை வலுவூட்டிப் பாதுகாக்கும். இவ் அனைத்து அடிப்படை அம்சங்களும் குறிப்பாக எமது பட்டதாரிகள் "வேலை தேடுபவராக அல்லாது வேலை உருவாக்குபவர்" எனும் நிலையை உருவாக்கவும் மற்றும் எமது பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு வணிகமயப்படுத்தக்கூடிய அவர்களின் புத்தாக்கங்களுக்கு ஆக்கவுரிமை சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கும் இம் முயற்சிகள் பங்களிப்புச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

1.6 பல்கலைக்கழக - கைத்தொழில்துறை இடைத்தொடர்பு

பயனுறுதிமிக்க பல்கலைக்கழக – கைத்தொழில்துறை பிணைப்பு மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பலம் வாய்ந்த காரணிகளுள் ஒன்றாகும். பொதுமுயற்சிகள் கைத்தொழில் துறையில் உள்ளோர்களுக்கான பகுதி நேர பட்டப்பின்படிப்பு பாடநெறிகள், குறுங்கால பாடநெறிகள், பயிற்சியும் தொடர் தொழில்சார் அபிவிருத்தி (CPD) பாடநெறிகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், ஆலோசனை மற்றும் பரிசோதனை ஒப்படைகள், கைத்தொழில் நிதியிடப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி (R & D) ஆய்வுகூடங்கள், அறக்கொடையுடனான தலைமைகள், திணைக்கள கைத்தொழில்துறை ஆலேசானை சபைகள், பீட கைத்தொழில் ஆலோசனை

சபைகள் மற்றும் கூட்டிணைந்த சமூக பொறுப்பு நடவடிக்கைகள் மூலமாக மொறட்டுவை பல்கலைக்கழகம் கைத்தொழில் துறைகளுடனும், சமூகத்துடனும் குறிப்பிடத்தக்க வகையில் பரஸ்பர செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. கைத்தொழிலுடனும் சமூகத்துடனும் காணப்படும் பரஸ்பர இணைப்புக்கள் மூலம் கைத்தொழிற்சாலைகளிள் முன்னேற்றம் மற்றும் அதற்கேற்ப நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளல் என்பதுடன், அதற்கு மேலாக அதனூடாக பல்கலைக்கழக பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் அதற்கு இணையாக நிறுவகத்திற்கும் பாரிய நன்மைகள் பெருமளவில் கிடைப்பதனால் இந்த பரஸ்பர செயற்பாடுகள் பல்கலைக்கழகத்திற்கு தீவிரமாக ஊக்கமளிக்கின்றது.

கைத்தொழில்துறை மூலம் நிதியளிக்கும் ஆராய்ச்சி மையங்கள் வெற்றிகரமான பல்கலைக்கழக கைத்தொழிற்துறை ஒத்துழைப்பு சார் மற்றுமொரு முக்கியமான பொறிமுறையாகும். சுமார் ஒரு தசாப்தத்துக்கு முன் அமைக்கப்பட்ட தொடர்பாடலுக்கான டயலொக்- UOM ஆய்வுகூடம், தொலைத்தொடர்பாடல் துறையினுள் கைத்தொழில் அடிப்படையிலான ஆய்வு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி தொடர்பான மிகவும் வெற்றி பெற்ற மாதிரியாக அமைந்துள்ளது. இந்த ஆய்வுகூட வெற்றியானது, இலத்திரணியல் சார்ந்த புதிய தொழில்நுட்பங்களுக்கான "Zone 24X7 UoM ஆய்வுகூடம் ,"இறப்பர் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்திக்கான "SIL-UOM ஆய்வுகூடம்", உயிரியல் மருத்துவ தொழில்நுட்பத்துக்கான "Premium International - UoM எழுதுபொருள் தொழில்நுட்பத்துக்கான சிலோன் பென்சில் கோப்பரேஷன் ATLAS - UoM மற்றும் பொருட்கள் ஆய்வுக்கான INSEE – UOM, மாணவர்களை கைத்தொழிற்துறையில் அமர்த்துதல் மற்றும் வெளிநாட்டு பயிற்சி உட்பட பயிற்சியளிப்பு, ஆய்வு, வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் என்பவற்றை வலுவூட்டுதல், உற்பத்தி அபிவிருத்தி மற்றும் வருடாந்த நவநாகரீக வடிவமைப்புக் கண்காட்சிக்கு ஆதரவளித்தல் என்பவற்றுக்காக Textured Jersey, "Epic-UOM Innovation Lab" எனும் முழுமையான வசதிகளுடன் நவீன ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நிலையமொன்று அமைத்தல், இலங்கையின் முதலாவது செயற்கை மதிநுட்ப புத்தாக்க ஆய்வகமான "QBITS" ஆய்வுகூடம், லங்கா மின்சார கம்பனி மற்றும் ஆசியா அபிவிருத்தி வங்கி (ADB) ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மின் பொறியியல் திணைக்களத்தில் மைக்ரோ-கிறிட் (Micro-Grid) முன்னோடிக் கருத்திட்டமொன்றையும் ஸ்மார்ட் கிறிட் (Smart Grid) ஆய்வுகூடமொன்றையும் அமைத்து, செயற்படுத்துகின்றது. மேலும், மாதிரியமைப்பு மற்றும் துறைசார் ஈடுபடுத்துதல் இரண்டிலும் Internet of Things (IoT) அடிப்படையிலான தீர்வை விருத்தி செய்வதற்கான மாணவர்களது வேலைக்கு SLIoT வடிவமைப்பு புத்தாக்க ஆய்வகம் உதவுகிறது. மேலும், மொறட்டுமுல்லை மரப்பலகையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்துறை சார் வளர்ச்சிக்காக மரப்பலகை புத்தாக்க நிலையமொன்று (TDIC) தாபிக்கப்பட்ட அதேசமயம், வியாபார பீடம் BPM பட்டதாரி மாணவர்களுக்கு வியாபார செயலாக்கப் பகுப்பாய்வு மற்றும் மேம்படுத்துதல் எனும் பிரிவுகளில் இலாபகரமான தொடர்புகளை வழங்குவதற்காக LAKARCADE (பிரை.) லிமி. நிறுவனத்துடன் கூட்டை ஏற்படுத்திக்கொண்டது.

2020-ம் ஆண்டின் போது, மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் யுனி கன்சல்டன்சி சேர்விசஸ் (UNIC) மற்றும் DSI குழும கம்பனிகளிடையேயான 9 வருட கால தயாரிப்பு செயல்முறை அபிவிருத்தி ஆராய்ச்சி கூட்டு முயற்சியானது 2020 யூலை 27-ஆம் திகதி புதுப்பிக்கப்பட்டது. இந்த புதுப்பித்தலின் ஊடாக D. சம்ஸன் இன்ரஸ்ட்ரீஸ் (பிரை.) லிமி. நிறுவனமும் கைத்தொழில்துறை ஒத்துழைப்பில் இணைந்து கொண்டது. மேலும், லங்கா மின்சார கம்பனி (LECO), மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் (UOM) இணைந்து, ஆசியா அபிவிருத்தி

வங்கியின் (ADB) $ 1.8 மில்லியன் மானிய உதவியுடன் மைக்ரோகிரீட் முன்னோடி பிரதான கருத்திட்டமொன்றை தொடங்கியது.

சகல பணியாட்தொகுதி உறுப்பினர்களும் பல்கலைக்கழக, கைத்தொழில்துறை பரஸ்பர இணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அதேநேரம், அரசாங்க திரட்டு நிதியத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளுக்காக அவர்கள் கல்வித்துறை சார்பாக பொறுப்புக் கூறுவதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களால் பட்டதாரி கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக தம்மீது ஒப்படைக்கப்பட்ட கல்விசார் வேலை பணிகள் மற்றும் கல்விசார் அலுவல்களையும் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துதல் பல்கலைக்கழக நிருவாக சபையின் கொள்கையாகும். பட்டதாரி மாணவர்களுக்கான உயர் பயிற்சி மற்றும் தராதரங்களை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் பாடநெறிகள், அறிவு மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றை விருத்திசெய்யவும் மாற்றம் செய்யவும் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், CPD பாடநெறிகள், ஆய்வு மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் ஏனைய கல்விசார் ஒப்படைகள், கைத்தொழிலுக்கான ஆலோசனை மற்றும் ஆய்வு ஒப்படைகள் மற்றும் கூட்டிணைந்த சமூக பொறுப்பு நடவடிக்கைகள் ஆகியன பொது நிதிச் சுற்றுநிருபம் இல. 380-இற்கு இணங்க **செலவு மீட்பு** (சுய நிதியிடல்) அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களாகும். அதற்கேற்ப, மொறட்டுவைப் பல்கலைக்கழகம் சமூகம், கைத்தொழில் சார்ந்து காணப்படும் அதன் கடப்பாடுகளை அரசாங்கத்திற்கு எவ்வித **செலவுமின்றி** நிறைவேற்றி வருகின்றது.

இச் செயற்பாடுகள் மூலம் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் தனது **செலவு மீட்பு** (சுய நிதியிடல்) செயற்பாடு மற்றும் தொழிலுரிமைத்துவ நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கான தனது கைத்தொழில் முன்னெடுப்பின் ஊடாக 2020 ஆண்டினுள் ரூ. 556.76 மி. தொகையை உருவாக்கியுள்ளது. பொது நிதி சுற்றுநிருபம் இல. 380-இன் பிரகாரம் உருவாக்கப்பட்ட வருமானம் இலாபமற்ற அடிப்படையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1.7 தர உத்தரவாதம்

மொறட்டுவைப் பல்கலைக்கழத்தின் தர உத்தரவாதம் அதன் சேவைகள் மற்றும் உற்பத்திகள் ஆகியவற்றின் தரம் தொடர்பாக மாணவர்கள், பணியாட்டொகுதி உத்தியோகத்தர், ஊழியர்கள் மற்றும் மொத்தச் சமூகம் போன்றவற்றுக்கும் உத்தரவாதப்படுத்துவதற்காக அதன் கற்றலுக்கான உள்ளீடுகள், கல்விப் பெறுபேறுகள், ஆராய்ச்சிக்கான தளம், செயற்றிறன் மதிப்பிடல், நிருவாக கட்டமைப்பை கொண்ட மாணவர் சேவைகள் மற்றும் பாடவிதானங்களுக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளை உள்ளடங்கிய பிரதான நடவடிக்கைகளின் தரம், வெளிப்படைத்தன்மை, திறனாற்றல், நம்பிக்கைமிகு அடைவுகள் எனும் வகையில் செயலுறுதிப்படுத்தியதாக பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் செயற்பாடு அமையப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகத்தின் QA கொள்கை மூலம் நிறுவகத்தின் கீழ்வரும் கல்விசார், கல்விசாரா மற்றும் நிருவாகம் சார் சகல பணியாட்தொகுதி உறுப்பினர்கள் அதேபோல் மாணவர்கள் ஆகியோர்களால் ஏற்றுக்கொள்ளத் தக்க QA அடிப்படையிலான கலாச்சாரமொன்றை அபிவிருத்திசெய்து கடைப்பிடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தர உத்தரவாத உபாயம் (QAS) மூலம் பல்கலைக்கழகத்தின் செயல்நுணுக்க முகாமைத்துவ திட்டத்தில் (SMP) குறிப்பிடப்பட்ட தொலைநோக்கு மற்றும் செயற்பணி ஆகியவற்றுடன் இணைந்ததாக செல்கின்றது. SMP-ஐ செயற்படுத்தும் போது, பல்கலைக்கழக முகாமைத்துவம் அதன் சேவைகளும் உற்பத்திகளும் அவற்றுக்கு ஏற்படுத்தப்பட்ட வரையறைகள் மற்றும்

இலக்குகள் சார் அதிசிறந்த தரத்தை உத்தரவாதம் செய்யத் தேவையான முறைமைகள், செயற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு பொறிமுறைகள் ஆகியவற்றை ஏற்படுத்துகின்றது. அதற்கிணங்க, SMP-இல் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் தரம் சார் கொள்கைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், அவை பல்கலைக்கழக உள்ளக தரம் சார் அலகின் (IQAU) தலைமையின் கீழ் நோக்கங்களாக வடிகட்டப்பட்டு, மேலும் அவை ஒவ்வொன்றும் முதன்மைச் செயற்பாடுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இவ் ஒவ்வொரு செயற்பாடுகளை முன்னேற்றச் செய்வதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்/ பங்காளர் இனங்காணப்பட்டுள்ளதுடன், தர உறுதிப்படுத்தல் தர உறுதிப்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல் சபையின் (QAAC) வழிகாட்டுதல் அம்சங்களுக்கு இணங்க நியமிக்கப்பட்ட காலப்பகுதிகளில் வெளிவாரி மற்றும் உள்ளக மீளாய்வு முறைகள் மூலம் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றது. பல்கலைக்கழக செனட் சபை மற்றும் நிருவாக கவுன்சில் மூலம் அவர்களது மாதந்த கூட்டங்களில் IQAU செயற்பாடுகள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் அவர்களால் புதிய நிருவாகக் கட்டடத்தில் 2017 நவம்பர் மாதம் உள்ளக தர உத்தரவாத அலகு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் அதன் முதன்மை ஆர்வமிக்க பங்காளர்கள், ஆளணியினர் மற்றும் மாணவர்கள் ஆகியோர்களுக்கு மிகப் பயனளிக்கத்தக்க அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு பல்கலைக்கழகம் செயலாற்றுவதுடன், தர உத்தரவாத உபாயம் (QAS) மூலம் அதன் கருத்துப் பற்றிய வரைவிலக்கணத்தையும் வழங்குகின்றது. அது, சர்வதேச மட்டத்திலான மதிப்புமிக்கதொரு பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ள இலுமான சிறப்பான கற்பித்தல், கற்றல் என்பன யாதென்பது பற்றி தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. தர உத்தரவாத உபாயம் (QAS) மூலம் பட்டமேற்படிப்பு மற்றும் ஆய்வு உட்பட கற்பித்தல் உள்ளீடுகள் மற்றும் கற்றல் வெளியீடுகள் ஆகியவற்றில் ஏற்படுகின்ற வெளிவாரி மற்றும் உள்வாரி அம்சங்களை நோக்குவதுடன், அதன் மூலம் தர நியமங்களை மேம்படுத்தவும் பேணிச்செல்லவும் பீட மட்டத்தில் புதிய பொறிமுறையையும் அதனூடாக விபரிக்கின்றது. தனியான கல்விசார் திணைக்களங்கள் மற்றும் பிரிவுகள் வரை விரிவடையும் அதன் வலையமைப்புடன் இது தொடர்பாக பீட மட்டத்தில் தர உத்தரவாத குழுவானது (QA Cells) உள்ளக தர நிர்ணய அலகுடன் (IQAU) இணைந்து செயலாற்றுகின்றது.

அதேபோல், பல்வேறு பின்புலத்தில் வரும் ஆளணியினர்களுக்கும், மாணவர்களுக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களின் சாதகங்களைப் பெறவும், கல்விசார்ந்த வகையிலும் ஆளுமையிலும் சிறப்படையவும் அதேபோல், உலகலாவிய சவால்களுக்கு ஏற்றவகையில் அவசியமான அறிவுசார் மற்றும் திறன்கள் சார் அபிவிருத்தியின் ஊடாக தொழிலுக்கும் பரந்த உலகின் பணிசார் வெற்றிக்குப் பங்களிக்கவும் மற்றும் பட்டமேற்படிப்பு தகைமை மற்றும் ஆய்வு ஊடாக தொழிலொன்றை தேடிச்செல்ல முடியுமாக இருந்தால், அவர்களுக்கு தேவைப்படுவது யாதென்பது பற்றி தர உத்தரவாத உபாயம் (QAS) தன் கவனத்தைச் செலுத்துகின்றது. கற்றலின் தரம், ஆய்வு, வழிகாட்டல் மற்றும் அதன் மீது நிறுவகம் வைக்கின்ற பெறுமதியும் இதன் பகுதியாவதுடன், மொறட்டுவைப் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் இது தொடர்பாகவுள்ள துறைசார்ந்த சிறப்படைதலுக்கு இணைந்ததாக உள்ளதென்பதை உறுதிப்படுத்த, திட்டமிடுவதற்கான செயற்பாடு தர உத்தரவாத உபாயத்தில் (QAS) உள்ளடங்குகின்றது.

மேலும், கற்பித்தலின் உள்ளீடுகள், கற்றலின் வெளியீடுகள், செயற்றிறன் மதிப்பீடு, ஆய்வு, புலமைப்பரிசில் மற்றும் தொழில்முயற்சி என்பன ஒன்றுக்கொன்று இணைந்த அம்சங்கள் எனவும் அவைகளின் உள்வாரி தொடர்பினைப் பற்றித் தெளிவான நோக்கினை நிறுவதற்கும் உதவுகின்றது எனவும் தர உத்தரவாத உபாயம் (QAS) கருதுகின்றது. உலகலாவிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் அதிகரித்துவரும் போட்டி மிகுந்த சூழலில், தனி நபர்களினதும் சமூகங்களினதும் தேவை யாதென அறிந்து, அவற்றினை வழங்குவதற்காக வளர்ச்சியடையும் அழுத்தங்களுடன், போட்டியாளர்களிடமிருந்து நிறுவகத்தை வேறுபடுத்தி இனங்காணுவதற்காக பிரிவுகளை வகைப்படுத்திக் காட்டும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் செயற்பணியின் வெவ்வேறு தரங்களை மீண்டும் உறுதிப்படுத்தவும் தர உத்தரவாத உபாயம் (QAS) உதவுகின்றது. குறிப்பாக மதிப்பீட்டுத் தரம் மற்றும் சகல கல்விசார் ஆவணங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆவணக் கருத்து திருட்டுடன் தொடர்புபட்டதாக மொறட்டுவை பல்கலைக்கழகம் இச் சந்தப்பத்தில் சம்பந்தப்பட்ட பல கொள்கைகளை அபிவிருத்திசெய்தது. அது, எப்போதும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய மதிப்புடனும் பல்கலைக்கழக மாற்றங்களுடனும் மிகச் சிறப்பாக செயலாற்ற சந்தேகத்திற்கு இடமின்றி வழியமைக்கும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினது நிறுவனம்சார் மதிப்பாய்வின் (Institutional review - IR) மூன்றாவது சுழற்சி 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. முந்தைய இரண்டு சுழற்சிகள் 2006 மற்றும் 2013-ஆம் ஆண்டுகளில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. இந்த ஆண்டின் நிறுவனம்சார் மதிப்பாய்வுக்கு "ஏ" தரத்தை (மிக உயர் தரத்தை) பெறும் சிறப்புரிமையை பல்கலைக்கழகம் அடைந்துகொண்டது.

சுய மதிப்பாய்வு அறிக்கை (SER), 2019 மே மாதம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் மீளாள்வு செயல்பாடு ஆரம்பமாகியது. 2019 பெப்பிரவரி மாதத்தில், துணை வேந்தரவர்களது தலைமையின் கீழ் பிரதி துணை வேந்தர் (DVC), பணிப்பாளர்/ தர உத்தரவாதம், பீடங்களின் பீடாதிபதிகள், பதிவாளர், நூலகப் பொறுப்பாளர், சிரேஷ்ட் கல்வியாளர்கள் மற்றும் நிருவாக உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்கிய (வரையறையற்ற) வழிப்படுதல் (steering) குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், இது இந்த சுய மதிப்பாய்வு அறிக்கையை (SER) சமர்ப்பிப்பதற்காக செயலாற்றியது. பல்கலைக்கழகத்தின் கல்விசார் துணை பணியாளர்கள், கல்விசாராத பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் மூலம் வழிப்படுதல் குழுவுக்கு திறனாக ஆதரவளிக்கப்பட்டது.

SER சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் உள்நாட்டு அரசாங்க பல்கலைக்கழகங்கள் ஐந்தின் சிரேஷ்ட பேராசிரியர்கள் ஐந்து பேர் மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தர உத்தரவாத (QA) நிபுணரொருவரான சர்வதேச மீளாய்வாளர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட IR குழு நியமிக்கப்பட்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட SER தொடர்பான மேசை மீளாய்வின் பின்பு, 2019 திசம்பர் 16 முதல் 21 ஆம் திகதி வரை அக் குழு பல்கலைக்கழகத்திற்கான அதனது தள சுற்றுப்பயணத்தை மேற்கொண்டது. மீளாய்வுக் குழுவினால் அவர்களது மீளாய்வு அறிக்கை மூலம் பல்கலைக்கழகத்திற்கு "ஏ" தரத்தை பெற்றுக்கொடுத்ததுடன், அவர்களது பாராட்டுக்கள் மற்றும் பரிந்துரைகளுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் (UGC) சமர்ப்பித்தது. பின்பு, பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரவர்களுக்கு UGC மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

முழு IR செயற்பாடுகளும் பல்கலைக்கழக உள்ளக தர நிர்ணய அலகின் (IQAU) மூலம் தர உத்தரவாத பணிப்பாளரின் கீழ் கல்விசார் மற்றும் வெளியீடுகள் சார் பிரதி பதிவாளர் (DR) மற்றும் வெளியக அலுவல்கள், பிரசித்தப்படுத்தல் சார் உதவி பதிவாளர் (AR/) மூலம் ஒழுங்கமைப்பு விநியோக ஆதரவுடன் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டது.

உலகலாவிய அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகமாகும் எமது தொலைநோக்கின் பொருட்டு, மொறட்டுவைப் பல்கலைக்கழகம் உலக தரப்படுத்தலில் மேலே செல்வதற்கு முயற்சி எடுத்து வருவதுடன், 2020-இல் மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது, இலங்கையில் மிகச் சிறந்த நான்காவது நிலையை தக்கவைத்துக்கொண்டு, 2020 திசம்பரில் உலக பல்கலைக்கழகங்கள் சார் வெபோமெற்றிக்ஸ் (Webometrics) தரப்படுத்தலில் உலக ரீதியாக 2087-வது (சிறந்த 20%) நிலையையும் பெற்றுக்கொண்டது. வெபோமெற்றிக்ஸ் மதிப்பீட்டு அளவுகோள்களின் தன்மை காரணமாக மொறட்டுவை பல்கலைக்கழகத்தைப் போன்ற நடுத்தர அளவிலான பல்கலைக்கழகமொன்றுக்கு தனது நிலையை மேம்படுத்துவது கடினமானதாகும்.

ஆசியா பிராந்தியத்திலுள்ள சுமார் 12,000 பல்கலைக்கழகங்களுக்கிடையில் QS ஆசியா பல்கலைக்கழகங்களின் தர நிர்ணய வரிசைப்படுத்தல் 2020 (QS AUR 2020) சார்பாக கவனத்தில் எடுக்கப்பட்ட 550 பல்கலைக்கழகங்களுக்கு இடையே 351-400-வது இடத்திற்கு முதல் தடவையாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதனால் மொறட்டுவை பல்கலைக்கழகம் ஆசியாவில் உள்ள உயர் தரத்திலான பல்கலைக்கழகங்கள் 2.5% இல் ஒன்றாக திகழ்கிறது.

இது, CILT, IMechE, CText, IChemE, RIBA, RICS, CICES, PAQS போன்ற பல பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சர்வதேச அங்கீகாரத்தை பேணிச்செல்வதற்கு மேலதிகமானதாகும். பொறியியல் கல்விசார் தகைமைகளுக்கான அங்கீகாரத்தை வழங்கும் நிறுவனமான இலங்கை பொறியியலாளர்களின் நிறுவனத்துடன் (IESL) 2014 யூன் மாதம் வொசிங்டன் உடன்பாட்டின் (Washington Accord) முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டு, தற்போது மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற சகல பொறியியல் பட்ட பாடநெறிகளும் தர ரீதியில் உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படுகின்ற அத்தகைய பட்ட பாடநெறிகளுக்கு இணையானதாக கருதப்படுகின்றது.

முக்கியமாக தற்போது பெற்றுக்கொண்டுள்ள அங்கீகாரங்களை புதுப்பித்துக் கொள்வதற்காக 2020 ஆண்டு காலப்பகுதியில் பல அங்கீகாரங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், புதிய அங்கீகாரங்கள் சில பெற்றுக்கொள்ளப்பட்டன. சர்வதேச வசதிகள் முகாமைத்துவ சங்கத்தின் (IFMA) அங்கீகாரக் குழுவினர் மொறட்டுவை பல்கலைக்கழக கட்டட பொருளியல் திணைக்களத்திற்கு வருகைதந்ததுடன், கட்டட பொருளியல் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற வசதிகள் முகாமைத்துவம் சார் பி.எஸ்சி. (கௌரவ) பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு, 2015-இன் உள்வாங்கலில் இருந்து அடுத்த ஆறு (6) வருடங்களுக்கான அங்கீகாரத்தை வழங்கியது. 2020 காலப்பகுதியில் இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகம் (IESL) பொறியியல் பீடம் வழங்குகின்ற பொறியியல் சார் பி.எஸ்சி. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் சார்பாக மீள் அங்கீகாரத்திற்கு/ அங்கீகாரத்திற்கு உட்படுத்தியது.

உப வேந்தரின் தலைமையில், பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் சகல தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோர்களிடையே மாதாந்தம் நடாத்தப்படும் "*பசுவிபரம*" (*Pasuviparama*) கலந்துரையாடல் 2006 மார்ச் மாதத்திலிருந்து நடாத்தப்பட்டு வருவதுடன், பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு பல்கலைக்கழகத்தினதும் பணியாட்தொகுதி-யினரதும் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வழிவகைகள் மற்றும் முறைகள் அதில்

கலந்துரையாடப்படும். மேலும், சம்பந்தப்பட்ட மாதத்தினுள் தீர்க்கப்படவேண்டிய மாணவர் சமூகம் தொடர்பான முக்கிய பிரச்சினைளை கலந்துரையாடுவதற்காக உபவேந்தரின் தலைமை வகிக்கும் பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் எல்லா மாணவர் சங்கங்களின் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இடையே நடாத்தப்படும் இணைப்புக் கூட்டமொன்றும் ஒவ்வொரு மாதமும் நடாத்தப்படுகிறது. அத்துடன், பீட மட்டத்தில் நிலவும் மாணவர்களின் பிரச்சினைகளை கலந்தாலோசித்து தீர்ப்பதற்காக பீடாதிபதியின் தலைமையில் ஆளணியினர், மாணவர் தொடர்புக் கூட்டம் மாதாந்தம் பீட மட்டத்தில் சகல பீடங்களிலும் நடாத்தப்படுகின்றது. இக் கூட்டங்கள் யாவும் பல்கலைக்கழகத்தின் வருடாந்த நாட்காட்டி திட்டத்திலுள்ள விடயங்களாகும்.

2020 ஆம் ஆண்டின் போது, முறைமைசார் மேம்படுத்தல்களுக்காக இன்னும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மாணவர் பதிவு, பெறுபேறுகளை தயாரித்தல், பிரதிகளை வழங்கல், மாணவர் நலன்புரி, வழங்கல் செயற்பாடுகள், வாகன முன்பதிவுகள், சொத்து முகாமை, ஆவணக் கட்டுப்பாடு, தாபன விடயங்கள், பணியாளர் அபிவிருத்தி விடயங்கள் போன்ற நிருவாகம் சார்ந்த பணிகளுக்கான முகாமைத்துவ தகவல் முறைமையை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவம் இதில் உள்ளடங்குகின்றது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் சில மொடியூல்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதுடன், ஏனையவை அபிவிருத்திசெய்தல், அமுல்படுத்துதல் மற்றும் சோதனை செய்தல் செயல்முறைகளில் இருந்தன.

1.8 ஆராய்ச்சி முயற்சிகள்

மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது சகல கல்விசார் பணியாளர்களுக்கும் ஆய்வு அத்தியாவசியமான செயற்பாடொன்றாக கருதுகின்றது. 2015 ஆண்டினுள் பணிப்பாளர்/ ஆய்வு அலுவலகம் மூலம் ஆதரவு தெரிவிக்கப்பட்ட குறிப்பாக ஆய்வு செயற்பாடுகளுக்காக கவனம் செலுத்தி பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடமொன்று உருவாக்க முடிந்தமை பல்கலைக்கழக ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் ஆய்வு கலாச்சாரம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.


பல்கலைக்கழகமானது மூன்று ஆய்வு பட்ட கற்கைகளை வழங்குகின்றது. விஞ்ஞான முதுமாணி (ஆராய்ச்சியை பிரதான கூறாகக் கொண்டு), தத்துவவியல் முதுமாணி (MPhil) மற்றும் தத்துவக் கலாநிதி (PhD) ஆகியவற்றை கட்டடக்கலை, வியாபார, பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப (IT) பீடங்களின் மூலம் வழங்குகின்றது. FGS இந் நிகழ்ச்சித்திட்டத்தின் நிருவாக நடைமுறைகளை ஒருமுகப்படுத்துதல், உயர் தரத்திலான மாணவர்களை ஈர்த்தெடுத்தல், புதிய ஆராய்ச்சி பங்காளர்கள் மற்றும் நிதியிடல் வாய்ப்புக்களை கண்டறிதல் மற்றும் பல்கலைக்கழகத்தினுள் ஆராய்ச்சி திறனை உயர்த்துதல் சார்பாக மூலோபாயங்கள் மூலம் இந் நிகழ்ச்சித்திட்டங்களை அதிகரிக்க முற்படுகின்றது. FGS இம் முயற்சிகளில் ஆராய்ச்சி அலுவலகம் மற்றும் சர்வதேச உறவுகள் அலுவலகம் ஆகியவற்றுடன் நெருக்கமாகச் செயற்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் 21 கலாநிதி (PhD) பட்ட மாணவர்கள் உட்பட 96 புதிய ஆராய்ச்சி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

2020 ஆண்டில் மேலும் ஆய்வை அதிகரிப்பது மற்றும் ஆய்வு விளைவுகளை பரப்புதல் சார்பாக ஏனைய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் உள்ளடங்குவன: சர்வதேச மாநாடுகளை ஒழுங்குசெய்வதற்கான மானியங்கள் (பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் ஊடாக வழங்கப்பட்ட ரூ. 5 மில்லியன்); கீர்த்திமிக்க வெளிநாட்டு கல்வியாளர்களை வரவழைத்து உபசரிப்பதற்கான மானியம் (பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் ஊடாக வழங்கப்பட்ட ரூ. 3 மில்லியன்); மாநாடுகளுக்கு பங்குபற்றுவதற்காக உப வேந்தரவர்களின் திட்டம் மற்றும் உருவாக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி திறந்த அணுகுதல் வெளியீடு (செனட் ஆய்வு குழுவின் ஊடாக); மற்றும் மேம்படுத்தப்பட்ட தரப்புள்ளிகளுடன் மற்றும் தனி வருட செயல்திறன்

அடிப்படையில் திருத்தப்பட்ட விருதுகள் திட்டம். இது தவிர, 2020 ஆண்டின் போது ஆய்வு நிருவாகம் மற்றும் முகாமைத்துவ முறைமை மேம்படுத்துதல், கல்வியாளர்களது ஆய்வு மற்றும் பரப்புதல் திறன் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் பல நடாத்துதல் உட்பட பல்கலைக்கழக ஆய்வு கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக FGS மூலம் பல முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

சர்வதேச ரீதியாக மற்றும் உள்நாட்டு ரீதியாக எனும் இரண்டிலும் வெளிவாரி நிதியிடல் முகவராண்மைகள் மூலம் ஆய்வுக்கான நிதியளிப்பை பாதுகாப்பதற்கு கல்வியாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். 2020 ஆண்டில் பல்கலைக்கழகமானது வெளிவாரி நிதியளிப்பு முகவராண்மைகள் மூலம் ரூ. 64.1 மில்லியனை பெற்றுக்கொண்டதுடன், இதற்குப் புறம்பாக, செனட் சபை ஆய்வு குழு (SRC) மூலம் கல்விசார் பணியாளர்களது பல்கலைக்கழக ஆய்வு கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பு செய்யப்பட்டது. 2020 ஆண்டின் போது SRC மூலம் 13 குறுங்கால மானியங்கள், 37 நீண்டகால மானியங்கள் மற்றும் 4 மூலதன ஊக்கப்படுத்தல் மானியம் உட்பட மொத்தம் ரூ. 99.5 மில்லியன் வழங்கப்பட்டது.

கல்வியாளர்களது 123 ஆய்வு சிறப்பு விருதுகளின் அதிகரிப்பு மூலம் மேலுள்ள முயற்சிகள் மற்றும் செயற்பாடுகள் ஆய்வு செயலாற்றலை குறிப்பிடத்தக்கவகையில் மேம்படுத்தியுள்ளது. அத்துடன், 2013 ஆண்டில் 12 இல் இருந்தது 2020 ஆண்டில் 216 ஆக (கடந்த 5 வருட காலப்பகுதி சார்பாக ஒப்பிடுகையில் 200% அதிகரிப்பு) சூசிகைபடுத்தப்பட்ட சஞ்சிகைகளில் உயர் தர பிரசுரங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளது.



உரு 3 : 2013-2020 சூசிகைபடுத்தப்பட்ட சஞ்சிகைகளில் பிரசுரங்களின் எண்ணிக்கை

இம் முயற்சிகள் மற்றும் செயற்பாடுகள் ஆய்வு வெளியீடுகளில் – ஆய்வு பட்டங்கள் மற்றும் பிரசுரங்களின் எண்ணிக்கை, ஆய்வுகள் மற்றும் பிரசுரங்களின் தரம், ஆய்வு நிதியிடல் மற்றும் ஆய்வு ஒத்துழைப்புக்கள் என்பவற்றில் குறிப்பிடத்தக்க துரித அதிகரிப்பை உண்டாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

1.9 சர்வதேசமயப்படுத்துதல்

மொறட்டுவை பல்கலைக்கழகம் 2020 ஆண்டு காலப்பகுதியில் சர்வதேசமயப்படுத்துவதற்காக அதிகளவு கவனத்தை தொடர்ந்தும் செலுத்தியது. மொறட்டுவை பல்கலைக்கழகம் சார்பான சர்வதேச பார்வையை அதிகரிப்பதற்காக பல்வேறு வழிமுறைகளை பயன்படுத்துவதற்கு கவனத்தைச் செலுத்தும் நோக்கத்துடன் 2015 செப்ரெம்பர் மாதம் பணிப்பாளர்/ சர்வதேச உறவுகள் எனும் பதவிக்கான நியமனத்தை மேற்கொண்டது. கூட்டு பட்டங்களை ஆரம்பித்தல், சர்வதேச மாணவர்களை கவர்ந்திழுத்தல், சர்வதேச சுற்றுப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்தல், எமது மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களில் இணைவதற்கு உதவியளித்தல், சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் (MOUs) என்பவற்றில் ஈடுபடுதல் போன்ற முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

பெற்றோலியம் செயலாக்கல் சார் முதுமாணி கூட்டு நிகழ்ச்சித்திட்டம் உட்பட ஆராய்ச்சி ஒத்துழைப்பு, பணியாளர்கள் பரிமாற்றல் மற்றும் Belt and Road Initiative (BRI) சார் ஒத்துழைப்புக்கள் முன்னெடுப்பது சம்பந்தமாக வெஸ்டர்ன் சிட்னி பல்கலைக்கழகம் மற்றும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் சார் கிழக்கு சீனா பல்கலைக்கழகம் (ECUST) ஆகியவற்றின் பிரதிநிதிகள் வருகைதரல் உட்பட பல ஒத்துழைப்புக்களை ஆரம்பிப்பதற்காக வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு வருகைதந்தமை 2020 ஆண்டின் போது சில நடவடிக்கைகளாகும்.

மேலும், சிறின்டொர்ன் (Sirindhorn) சர்வதேச தொழில்நுட்ப நிறுவகத்தினது (SIIT) தூதுக்குழுவினர் வருகை மற்றும் தாய்லாந்து, தம்மசட் (Thammasat) பல்கலைக்கழக பீ.எச்டீ. (PhD) மாணவர்கள் சார்பாக இரசாயன மற்றும் செயலாக்க பொறியியல் திணைக்களத்துடன் இணைந்து) கூட்டு மேற்பார்வை ஒத்துழைப்பு, SIIT தம்மசட் பல்கலைக்கழகத்தில் UoM மாணவர்களுக்கான ஆய்வு வேலைசார் பயிற்சி வழங்குதல், இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு இடையில் பீட/ பணியாளர் அங்கத்தவர்கள் பரிமாற்றல் மற்றும் இரு பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான உடன்படிக்கையின் அடிப்படையில் கூட்டு கருத்திட்டங்கள், கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் சார் ஒத்துழைப்புக்கள்; பாகிஸ்.-இலங்கை உயர்கல்வி ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2020 – 2021 கல்வியாண்டு தொடர்பாக பாகிஸ்தானில் உள்ள இலங்கை மாணவர்களுக்காக அல்லாமா இக்பால புலமைப்பரிசில் (Allama Iqbal Scholarship) உட்பட UoM மாணவர்களுக்கு பாகிஸ்தான உயர்கல்வி நிறுவகங்களில் காணப்படும் கல்வி வாய்ப்புக்கள் பற்றி கலந்துரையாடுவதற்காக பாகிஸ்தானின் உயர் கல்வி ஆணைக்குழுவின் (HEC) தூதுக்குழுவினரது வருகை என்பன ஏனைய சில முயற்சிகளாகும்.

தற்போது, மொறட்டுவைப் பல்கலைக்கழகம் (UOM) 25 இற்கும் மேற்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் ஒத்துழைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளதுடன், அவற்றில் சில மிக செயலூக்கமானதாகும். அண்மையில், சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவகங்கள் ஆகியவற்றுடன் பல ஒத்துழைப்புக்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதுடன், அவற்றோடு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் (MOUs) மற்றும் ஒப்பந்தங்களில் ஈடுபட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) அங்கீகாரத்துக்காக காத்திருக்கிறது. கூட்டு ஆராய்ச்சி மற்றும் மாணவர்/ பணியாளர்கள் பரிமாறல்கள் சார்பாக நாகோகா (Nagaoka) தொழில்நுட்ப பல்கலைக்கழகம், AALTO பல்கலைக்கழகம் – பின்லாந்து, இஞ்சியோன் (Incheon) தேசிய பல்கலைக்கழம், அன்ஸ்பக் (Ansbach) பிரயோக விஞ்ஞானங்கள் பல்கலைக்கழகம், மியாஸாகி (Miyazaki) பல்கலைக்கழகம், ஷான்டோங் (Shandong) பல்கலைக்கழகம்,

அவுஸ்திரேலியாவின் ரோயல் மெல்போர்ன் இன்ஸ்ரிடியுட் ஒப் டெக்னோலோஜி (RMIT) மற்றும் டீகின் (Deakin) பல்கலைக்கழகம் உட்பட செயற்படும் குறிப்பிடத்தக்க ஒத்துழைப்புக்களாகும்.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் சர்வதேசமயமாக்கல் மூலோபாயத்திற்கு இணங்க, புடைவையும் ஆடை தொழில்நுட்பமும் சார் திணைக்களம், சர்வதேச கடன் இயக்கத் திட்டம், ஈராஸ்மஸ்+ (Erasmus+) மூலம் நிதியளிப்பு செய்யப்பட்ட பணியாளர்கள் இயக்க கருத்திட்டத்தை நடாத்தும் நிறுவனமொன்றாக ஐக்கிய இராச்சியத்தின் பர்மிங்ஹாம் சிட்டி பல்கலைக்கழகமும் (BCU) ஒத்துழைப்புடன் செயலாற்றுகிறது. நவநாகரீகம் மற்றும் ஆடை வடிவமைப்பு பாடத்திட்டத்தினுள் கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் போன்றவற்றில் செயலூக்கத்துடன் ஈடுபட வருகைதரும் பணியாளர்களுக்கு இத்திட்டத்தினால் இயலுமாகிறது. வெளிச்செல்லும் UOM பணியாளர்களும் கூட குறிப்பாக சமூக, கலாச்சார மற்றும் நவநாகரீக நுகர்வோர் வெளிப்பாட்டின் மூலம் பி. வடிவமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் கற்பித்தல் சம்பந்தமாக பயனடைவார்கள். உள்வரும் BCU கல்விசார் பணியாளர்கள் இலங்கையில் வலுவான ஏற்றுமதி ஆடை தயாரிப்பு கலாச்சாரத்துக்கு பழக்கப்படுவார்கள்.

2020-இன் போது, மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் 20 பேருக்கும் அதிகமான முழுநேர சர்வதேச மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். இது தவிர, பல்வேறு மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சர்வதேச மாணவர்கள் மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் குறுங்கால பாடநெறிகளை கற்பதற்கான சில நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

1.10 விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகள்

சிவில் பொறியியல் சங்கத்தின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட 'சிவில் பதுர' (Civil Padura) நிகழ்ச்சி 2020 சனவரி 28-ஆம் திகதி சிவில் பொறியியல் திணைக்கள வளவில் நடாத்தப்பட்டதுடன், பி.எஸ்சி. கௌரவ பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் வழங்கப்படும் நாடக மொடியூலின் பகுதியொன்றாக முதலாவது நிலை மாணவர்களால், பட்டணமும் நாடும் திட்டமிடல் திணைக்களத்தினது "புரவர ரங்கமடல" (Purawara Rangamadala) வருடாந்த நாடக விழா தொடர்ந்து ஒன்பதாவது வருடமாக திணைக்களத்தின் பிரதான கேட்போர்கூடத்தில், 2020 செப்ரெம்பர் 19-ஆம் திகதி வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

இரத்தினபுரி சீவலி கல்லூரியின் சாதாரண தர மாணவ, மாணவிகளுக்காக IESL மாணவர் பிரிவின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட 'பாடசாலையுடன் பேசு' (Talk to school) எனும் சமூக சேவை கருத்திட்டமொன்று, 2020 பெப்பிரவரி 27-ஆம் திகதி நடாத்தப்பட்டது. நில மூலவளங்கள் பொறியியல் திணைக்களத்தினது நில மூலவளங்கள் சங்கத்தின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட, "குருகெதரட அருனெல்லக் – கட்டம் II" (Gurugedarata Arunellak) எனும் பெயரிலான வருடாந்த சமூக சேவை கருத்திட்டமானது நோனகம, வெலிபடன்வில மகா வித்தியாலயத்தில் 2020 பெப்பிரவரி 9 மற்றும் 10-ஆம் திகதிகளில் நடைபெற்றது. இந் நிகழ்வின் நோக்கம், பாடசாலைக்கு எழுது பொருட்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் போன்றவற்றை அன்பளிப்புச் செய்வதுடன், பாடசாலைக் கட்டடத்தை பழுதுபார்த்து, வர்ணம் பூசுவதன் மூலமாக அதன் பணிச் சூழலை மேம்படுத்துவதும், அதனூடாக மாணவர்களை ஊக்கப்படுத்துவதும் ஆகும்.

கோவிட்-19 பரவல் காரணமாக நாட்டில் முடக்க நிலையேற்பட்டதால் சிரமங்களை எதிர்கொண்ட சிவில் பொறியியல் மாணவர்களுக்கு உதவி செய்வதற்கான செயல்பாடொன்றை சிவில் பொறியியல் சங்கம் நடைமுறைப்படுத்தியது. சகல தொகுதிகளையும் சேர்ந்த மாணவர்களுக்கும்

உதவுவதற்காக கல்விசார் பணியாளர்களும் பழைய மாணவ, மாணவிகளுடன் ஒன்று சேர்ந்து 2020 மே மாதம் முயற்சியொன்றை மேற்கொண்டதுடன், 2020 பெப்பிரவரி மாதத்தில் நிகழ்ந்த இரயில் விபத்தொன்றின் காரணமாக அண்மையில் ஊனமுற்ற ERE மாணவரொருவருக்கு உடல்குறையை சரிசெய்ய செயற்கை கருவி உதவியுடன் (Hydraulic Knee -Mercury Hi-activity endolite, Low profile foot with split toe springs for energy Responses-Esprit) நடமாடுவதற்கான உதவியைச் செய்தனர். மொறட்டுவை பல்கலைக்கழக பணியாளர்கள், ERE பழைய மாணவர்கள் மற்றும் வெளியாக நன்கொடையாளரொருவர் ஆகியோரின் நன்கொடைகளினால் இது சாத்தியமானது.

"யுதுகமென் பிந்தக்" (Yuthukamen Bindak) எனும் மரம் நடுதல் நிகழ்வொன்றை நில மூலவளங்கள் பொறியியல் சங்கம் (ERES) ஒழுங்குசெய்ததுடன், இதற்காக 12,500 மரக் கன்றுகளும் அதனோடு நீர் பாய்ச்சுதல் முறைமை, மண்தோண்டும் சாதனம் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரம் என்பனவும் 2020 சனவரி 23-ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் பனாகொட முகாமுக்கு ERES நன்கொடையாக வழங்கியது.

கோவிட்-19 நாடு முடக்க நிலையின் போது, வெசாக் பண்டிகையை கொண்டாடும் வகையில், தகவல் தொழில்நுட்ப பீடத்தின் மாணவர் ஒன்றியம் "பூஜாபிவந்தனா" (Poojabhiwandhana) எனும் பெயரில் ஒன்லைன் (online) வெசாக் போட்டியொன்றை 2020 மே 7-ஆம் திகதி முதல் 10-ஆம் திகதி வரை ஒழுங்குசெய்து நடாத்தியது. போட்டியானது, வெசாக் வினாடி வினா, சிறந்த வெசாக் வெளிச்சக்கூடு, கலைப்படைப்பு, வெசாக் கவிதை, வெசாக் கிராஃபிக் உருவாக்கம் மற்றும் வெசாக் புகைப்படம் எனும் பல பிரிவுகளைக் கொண்டிருந்தது. நாற்பத்தைந்து போட்டியாளர்கள் தங்களது உற்சாகம் மற்றும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தும் வகையில் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். ஒவ்வொரு பிரிவின் கீழும் முதல் மூன்று இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஏற்பாட்டுக் குழுவிடமிருந்து மின்-சான்றிதழைகளை (e-certificates) பெற்றுக்கொண்டனர்.

1.11 கட்டுப்படுத்தல்கள்

2010-2015 கூட்டிணைந்த திட்டத்தின் 1-8 (SMP 2014-2018) குறிக்கோள்களின் அதிகமான நோக்கங்கள் கணிசமானளவு அடையப்பட்டுள்ளன. ஆயினும், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அரசாங்க நிதிகளில் தங்கியிருக்கும் விடயங்களில், மற்றும் தீர்மானம் எடுக்கும் தன்னாட்சி அதிகாரம் இல்லாததனால், குறிக்கோள்களும், நோக்கங்களும் முழுமையாக இன்னும் அடையப்பட வேண்டியுள்ளது.

- ஊதியங்கள் மற்றும் ஏனைய ஊக்கப்படுத்தல் கொடுப்பனவுகள் குறைவு காரணமாக கருத்திட்ட முகாமையாளர் மற்றும் வேலை பொறியியலாளர் ஆகிய பதவிகளுக்கு தகைமைபெற்ற மற்றும் திறனுள்ள தொழில்வாண்மையாளர்களை ஆட்சேர்த்துக்கொள்வது சார்பாக பல்கலைக்கழகத்திற்கு அதிக சிக்கல்மிக்கதாக இருப்பதனால் கருத்திட்ட முகாமை மற்றும் பராமரிப்பு பணிகள் என்பவற்றை பயனுறுதிமிக்க வகையில் நிறைவேற்றுவது பாரிய சிரமமாகவுள்ளது. இதே நிலை மின் மேற்பார்வையாளர் போன்ற துணை பதவிகளுக்கும் பொருந்தும். பல முயற்சிகளின் பின்னரும் கூட பல்கலைக்கழகத்தினால் ஆட்சேர்ப்புச் செய்ய இயலாது போனதுடன், இதற்கான தீர்வினைக் காணுவது கட்டாயமானதாகும்.

- உயர் கல்வித் துறையில் மாறிவரும் சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்காக அரச பல்கலைக்கழங்களில் ஏற்படும் தேவைகளை பூர்த்திசெய்ய புதிய பதவியணியினரை அறிமுகப்படுத்துவது அத்தியாவசியமானதாகும். பல்கலைக்கழக வியாபார தொடர்புகள், ஏற்பாட்டுவசதிகள் முகாமைத்துவம், தகவல் தொடர்பாடல் சேவைகளும் தலைமைத்துவமும்,

ஈ-கற்றல் ஊக்குவிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் ஊடக அலுவல்கள் போன்ற புதிய பணிகள் சார்பாக திறன்வாய்ந்த தொழில்வாண்மையாளர்களின் தேவை இதில் உள்ளடங்குகின்றது. இவ்வாறு ஏற்படும் தேவைகள் சார்பாக பல்கலைக்கழகம் அத்தகைய பதவியணியினர் இன்றி பல்கலைக்கழகம் திணறி வருவதுடன் அலுவல்சார் அங்கீகரிப்புச் செயற்பாடுகளும் வலி மிகுந்ததாகவுள்ளது.

- கொள்வனவு முறை சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் மோசமான செயற்பாடுகள் காரணமாக பல கட்டட நிர்மாணிப்பு கருத்திட்டங்கள் குறிப்பிடத்தக்களவு பின்னடைந்துள்ளன. பல்வேறு பிரச்சினைகள் காரணமாக திறமையான நிர்மாண ஒப்பந்தக்காரரின் சேவையைப் பெற்றுக்கொள்வது கடினமாகவுள்ளது. ஆலோசனை-யாளர்களும் திறமையற்றவர்களாக உள்ளனர். பல்கலைக்கழகத்தின் தரப்பில் நல்ல கருத்திட்ட முகாமையாளரொருவர் இல்லாததனால் பிரச்சினைகள் குவிந்துள்ளதுடன், தவிர்க்க முடியாத காலதாமதங்களும் விளைவுகளாக உள்ளன.

- தங்குமிட விடுதிகளை அதிகரிப்பது பாராட்டத்தக்க விடயமாகும். எனினும், இருக்கும் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் மீண்டுவரும் நிதி போதுமானதாக இல்லையென்பதுடன், நியம நிலைகளுடன் விடுதிகளை பராமரிப்பதற்காக போதுமானளவு செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு நிதி இருத்தல் அவசியமாகும். அரசாங்கத்தினால் அவ்வாறான நிதி வழங்கப்படாவிட்டால், அத்தகைய பராமரிப்பு தேவைகளுக்காக குறைந்தபட்சம் பகுதியளவு நிதியை பூர்த்திசெய்து கொள்வதற்காக ஓரளவு விடுதிக் கட்டணங்களை உயர்த்துவதற்கு அதிகாரம் வாய்த்தவர்களால் கூட்டு தீர்மானமொன்றை எடுப்பது அவசியமாகும்.

- பல்கலைக்கழகமானது மொறட்டுவையிலுள்ள கட்டுப்பெத்தையில் 53 ஏக்கர் காணியில் அமைந்துள்ளது. பல வருடங்களாக நடைபெற்றுவரும் விரிவாக்கல் நடவடிக்கைகளினால் இக் காணியின் இடவசதி நிறைவடையும் நிலையில் உள்ளது. இடவசதி தொடர்பாக காணப்படும் சங்கடங்களை நிவர்த்தி செய்வதற்காக பல்கலைக்கழகம் நிலைக்குத்தான கட்டடங்களை நிர்மாணிக்கும் உபாய முறையை செயற்படுத்த முயற்சியெடுத்துள்ளது. பல்கலைக்கழகத்தின் உகந்த சூழலினை பேணிச்செல்வதற்குத் தேவையான சூழ்நிலையின் கீழ் இவ் உபாய முறையானது அப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வொன்றினை வழங்குமென எதிர்பார்க்க முடியாது. இவ்வாறு விடுதி வசதிகள் விரிவாக்கம் செய்தல் மற்றும் கல்விச் செயற்பாடுகள் இரண்டிலும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக காணி சுவிகரிப்புச் செய்தல் அத்தியாவசியத் தேவையாகும். கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களின் விரிவாக்கல் சம்பந்தமாக குறைந்தது 10-15 ஏக்கர் பரப்பளவு கொண்ட பெரியதொரு காணியொன்று நெருங்கிய சுற்றுவட்டாரத்தில் தேவைப்படுகிறது.

- 2016–ஆம் ஆண்டில் அங்கீகாரம் சார் தேவைப்பாடுகளை எதிர்கொள்வது சார்பாக உபகரணங்களை மேம்படுத்துவதற்காக பொறியியல் பீடத்திற்கு உபகரணங்களை கொள்வனவு செய்ய ரூ. 500 மி. விசேட நிதியளிப்பு ஒதுக்கீட்டை மேற்கொண்டதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகம் அரசாங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. எனினும், உலக தரத்திலான பல்கலைக்கழகமொன்றாக ஆகுவதற்கு அவசியமான சர்வதேச அங்கீகாரத்தை தக்கவைத்து உறுதிசெய்து கொள்வதற்காக இவ்வாறான நிதியைப் பேணிச்செல்லுதல் வேண்டும். 2017 இல் மூலதன நிதிசார் ஒதுக்கீடுகள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளதால், வசதிகள் சார் இற்றைப்படுத்தலைச்செய்து பராமரிப்பது கடினமாகியுள்ளது. அதேபோல், செயல்நுணுக்க முகாமைத்துவ திட்டத்திற்கு ஏற்ப பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்தை தாமதப்படுத்தவும் இது காரணமாகியுள்ளது. 2011 இலும் (ரூ. 100 மில்லியன்) மற்றும் 2012 இலும் (ரூ. 75 மில்லியன்) மொறட்டுவைப்

பல்கலைக்கழகத்தை உண்மையான சர்வதேச பல்கலைக்கழகமாக படிப்படியாக மாறுவதற்காக வழங்கப்பட்ட மேலதிக நிதியளிப்பு, அதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் மேலதிகமாக வழங்கப்படவில்லை. எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அத்தகைய மேலதிக நிதியளிப்பு அத்தியாவசியமானதாகும்.

- துரித பொருளாதார வளர்ச்சிக்கான உபாயங்களாக துவக்க நிலைகளை புதுமையாக்குதல், அதனோடு இணைந்த தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல், வணிகமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பாக பல்கலைக்கழகங்களுக்கு சர்வதேச புகழ் பெற்ற ஏனைய பல்கலைக்கழகங்களில் காணப்படுவது போன்ற வளர்ச்சிமையங்கள் நிறுவக் கூடியதாக இருத்தல் வேண்டும். பல்கலைக்கழகங்களில் உள்ள வளர்ச்சிமையங்களுக்கு நட்டங்களை ஏற்க முடியாதபடியால் அவற்றுக்கு சட்டபூர்வமாக அனுமதி தரப்படுவதில்லை. வித்து நிதிகள் மற்றும் வெற்றிகள் தொடர்பான உத்தரவாதமில்லாமல் ஆதரவு, சொந்த உடமைக்கான சட்டப்பொறி ஆகியன வளர்ச்சிமையங்களுக்குத் தேவையாகவுள்ளன. இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழு மாத்திரமே இடர்களை ஏற்கலாம். அதேபோல், பல்கலைக்கழகங்கள் அவைகளின் சொந்த வணிகமயமாக்கப்பட்ட தொழில்நுட்பங்களைக் கொண்டு வணிகமுயற்சி பணிகளுக்கு பல்கலைக்கழகங்களே பங்காளராக இருக்கமுடியாது. அவ்வாறான கண்டுபிடிப்புகளுக்கான உரிமைக் கொடுப்பனவைப் பெறவோ அல்லது தொழில்நுட்பங்களை விற்கவோ மட்டுமே அவைகளால் முடியும். புதிய பிரதான முன்னேற்ற குறிகாட்டிகளாக பெருமளவான ஆக்கவுரிமைகள், வணிகமயப்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் வணிகங்களை ஆரம்பித்தல் என்பன பல்கலைக்கழகத்தினால் செயற்படுத்தப் பட்டதனால் கொள்கை ரீதியான மாற்றமொன்று அவசியமாகும்.

- விசேடமாக ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அடிப்படையாகக்கொண்ட ஆய்வுகளையும், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள பல்கலைக்கழகங்களால் ஊக்கப்படுத்தப்படுகின்றன. கைத்தொழில் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இலக்காகக் கொண்ட ஆய்வுகளுக்கும், அபிவிருத்திகளுக்கும் அதிகமான கேள்விகள் உள்ளன. எவ்வாறிருப்பினும், பல்கலைக்கழகங்கள் அநேகமாக தாமதங்களுக்காக விமர்சிக்கப் படுவதுடன், சில சந்தர்ப்பங்களில் உரிய நேரத்தில் விநியோகிப்பதில் ஏற்படும் சிக்கல்களினால் அவ்வாறான கருத்திட்டங்கள் பல்கலைக்கழகங்களுக்கு கையளிக்கப் படுவதில்லை. அதிகமான நேரத்தை எடுக்கும் அரசாங்க கொள்வனவு செயல்முறைமைகளை கடைப்பிடித்தல் இதற்கான காரணங்களில் ஒன்றாகும். ஆய்வு செயற்பாடுகளுக்கான கொள்வனவுகளை முன்னரே திட்டமிட முடியாதபடியால், அதனை அச்சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்வதற்கான தேவையேற்படுகின்றது. வழமையான வழிகாட்டல்களிலிருந்து விலகிச் செயற்படுவதனால் அதிகமான கணக்காய்வு விசாரணைகள் தோன்றுகின்றன. ஆய்வு செயற்பாடுகளுக்கு கொள்வனவு செய்வதற்கான விசேட வழிகாட்டல்கள் பல நாடுகளில் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக மொறட்டுவைப் பல்கலைக்கழகம் தனித்துவமான கொள்வனவு வழிகாட்டல் நியமங்களை நிதி, திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்ததுடன், பின்பு இவ் வழிகாட்டல் முறையை மீளாய்வு செய்து, சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது இப் பிரச்சினையை தீர்ப்பதற்காக வேறு முன்மொழிவொன்றை முன்வைத்துள்ளது. இத்தகைய தாமதங்களை தவிர்ப்பதற்காக அவ்வாறான தடங்கல்கள் மிக விரைவில் நீக்கப்படுமென நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கிறது.

2. மூலவளங்கள் மற்றும் மாணவர்கள்

a. பொழிப்பு

பீடம்/ பிரிவு/ நிலையம்	மொத்த பட்டதாரி மாணவர்கள்*		மொத்த கல்விசார் ஆளணியினர்				மொத்த நிருவாக ஆளணியினர் **		மொத்த கல்விசார் துணை ஆளணியினர் ***		மொத்த கல்விசாரா ஆளணியினர் ****	
			நிரந்தரம்		ஒப்பந்தம்							
	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
கட்டடக்கலை பீடம்	2349	2476	90	97	3	6	2	1	1	11	72	68
வியாபார பீடம்	296	454	18	19	7	3	2	1	-	14	4	06
பொறியியல் பீடம்	5668	5791	242	246	34	38	1	2	25	103	215	211
தகவல் தொழில்நுட்ப பீடம்	1758	1829	29	27	-	7	1	2	10	31	50	47
பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம்			-	-	-	-	2	2	1	01	3	3
மருத்துவ பீடம்	-	104				1					-	3
பிரிவுகள் மற்றும் நிலையங்கள்			7	-	-	-	27	22	16	21	334	323
கூட்டு மொத்தம்	**10071**	**10654**	**389**	**389**	**44**	**55**	**35**	**30**	**53**	**181**	**678**	**661**

குறிப்புக்கள் -

[1] கட்டடக்கலை இளமாணி

[2] வடிவமைப்பு இளமாணி

[3] கணிய அளவையியல் சார் விஞ்ஞான இளமாணி

[4] பட்டனமும் நாடும் திட்டமிடல் சார் விஞ்ஞான இளமாணி

[5] வசதிகள் முகாமைத்துவம் சார் விஞ்ஞான இளமாணி

[6] நிலத்தோற்ற கட்டடக்கலை இளமாணி

[7] பொறியியல் (MPR) சார் விஞ்ஞான இளமாணி

[8] பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (நில மூலவளங்கள்)

[9] பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி – (புடவையும் ஆடையும் தொழில்நுட்பம்)

[10] போக்குவரத்து, தேவை. விநி. ஒழுங்க. முகாமை. சார் விஞ்.இளமாணி

[11] நவநாகரீக வடிவ., உற்பத்தி அபி. சார் வடிவமை. இளமாணி

[12] தகவல் தொழில்நுட்பம் சார் விஞ்ஞான இளமாணி

[13] தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் சார் விஞ்ஞான இளமாணி

* வழங்கப்பட்ட காலத்தில் ஓர் ஆண்டின் அதிகூடிய மாணவர் எண்ணிக்கை

** பதிவாளர், நிதியாளர், பிரதி பதிவாளர்/நிதியாளர், சிரேஷ்ட உதவி பதிவாளர்/நிதியாளர், உதவி பதிவாளர்/நிதியாளர், பிரதி உள்ளகக் கணக்காய்வாளர், பணிப்பாளர்/ உடற் கல்வி, சுகாதார சேவை உத்தியோகத்தர், வேலைப் பொறியியலாளர், காப்பாளர், பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் (2020.12.31 ஆம் திகதியில்)

*** நிரந்தர கல்விசார் துணை ஆளணி, ஒப்பந்த கல்விசார் துணை ஆளணி, தற்காலிக போதனாசிரியர்கள் (2020.12.31 ஆம் திகதியில்)

**** நிரந்தர கல்விசாரா ஆளணி, ஒப்பந்த மற்றும் தற்காலிக கல்விசாரா ஊழியர்கள் (2020.12.31 ஆம் திகதியில்)

b. விபரம்

பீடம்/ பிரிவு/ நிலையம்	பாடநெறி	மொத்த மாணவர்கள்*		மொத்த கல்விசார் பணியாளர்				மொத்த நிருவாக பணியாளர்**		மொத்த கல்விசார் துணை பணியாளர்***		மொத்த கல்விசாரா பணியாளர்****	
				நிரந்தரம்		ஒப்பந்தம்							
		2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
கட்டடக்கலை பீடம்	AT [1]	407	438	90	97	3	6	2	1	1	11	72	68
	AD [2]	286	340										
	QS [3]	731	773										
	TCP [4]	347	325										
	FM [5]	323	319										
	BLA [6]	255	281										
உப மொத்தம்		**2349**	**2476**	**90**	**97**	**3**	**6**	**2**	**1**	**1**	**11**	**72**	**68**
வியாபார பீடம்		296	454	18	19	7	3	2	1	-	14	4	06
உப மொத்தம்		**296**	**454**	**18**	**19**	**7**	**3**	**2**	**1**	**-**	**14**	**4**	**06**
பொறியியல் பீடம்	MPR [7]	4346	4388	242	246	34	38	1	2	25	103	215	211
	EM [8]	314	318										
	TM [9]	376	396										
	TLM [10]	343	369										
	FD [11]	289	320										
உப மொத்தம்		**5668**	**5791**	**242**	**246**	**34**	**38**	**1**	**2**	**25**	**103**	**215**	**211**
தகவல் தொழில்நுட்ப பீடம்	IT [12]	1179	1218	29	27	-	7	1	2	10	31	50	47
	ITM [13]	579	611										
உப மொத்தம்		**1758**	**1829**	**29**	**27**	**-**	**7**	**1**	**2**	**10**	**31**	**50**	**47**
பட்டமேற்படிப்பு கற்கை. பீடம்								2	2	1	1	3	3
மருத்துவ பீடம்	MBBS [14]	-	104	-	-	-	1	-	-	-	-	-	3
பிரிவுகள் மற்றும் நிலையங்கள்				7	-	-	-	27	22	16	21	334	323
கூட்டு மொத்தம்		**10071**	**10654**	**386**	**389**	**44**	**55**	**35**	**30**	**43**	**181**	**678**	**661**

குறிப்புக்கள் -

[1] கட்டடக்கலை இளமாணி

[2] வடிவமைப்பு இளமாணி

[3] கணிய அளவையியல் சார் விஞ்ஞான இளமாணி

[4] பட்டனமும் நாடும் திட்டமிடல் சார் விஞ்ஞான இளமாணி

[5] வசதிகள் முகாமைத்துவம் சார் விஞ்ஞான இளமாணி

[6] நிலத்தோற்ற கட்டடக்கலை இளமாணி

[7] பொறியியல் (MPR) சார் விஞ்ஞான இளமாணி

[8] பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (நில மூலவளங்கள்)

[9] பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (புடவையும் ஆடையும் தொழில்நுட்பம்)

[10] போக்குவரத்து, தேவை விநி. ஒழுங்கமைப்பு முகாமை. சார் விஞ். இளமாணி

[11] நவநாகரீக வடிவ. மற்றும் உற்பத்தி அபி. வடிவமைப்பு இளமாணி

[12] தகவல் தொழில்நுட்பம் சார் விஞ்ஞான இளமாணி

[13] தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் சார் விஞ்ஞான இளமாணி

[14] மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல் இளமாணி

* வழங்கப்பட்ட காலத்தில் ஓர் ஆண்டின் அதிகூடிய மாணவர் எண்ணிக்கை

** பதிவாளர், நிதியாளர், பிரதி பதிவாளர்/நிதியாளர், சிரேஷ்ட உதவி பதிவாளர்/நிதியாளர், உதவி பதிவாளர்/நிதியாளர், பிரதி உள்ளகக் கணக்காய்வாளர், பணிப்பாளர்/ உடற் கல்வி, சுகாதார சேவை உத்தியோகத்தர், வேலைப் பொறியியலாளர், காப்பாளர், பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் (2020.12.31 ஆம் திகதியில்)

*** நிரந்தர கல்விசார் துணை ஆளணி, ஒப்பந்த கல்விசார் துணை ஆளணி மற்றும் தற்காலிக போதனாசிரியர்கள் (2020.12.31 ஆம் திகதியில்)

**** நிரந்தர கல்விசாரா ஆளணி, ஒப்பந்த மற்றும் தற்காலிக கல்விசாரா ஆளணி (2020.12.31 ஆம் திகதியில்)

3. உள்நாட்டு மாணவர்கள்

a. பொழிப்பு

(i) இளமாணிப் பட்டங்கள் (பட்டதாரி மாணவர்கள்)

பீடம்	உள்வாங்கல் (மாணவர்கள் எண்.)*		1-ஆம் வருட மாணவர்கள்		2-ஆம் வருட மாணவர்கள்		3-ஆம் வருட மாணவர்கள்		4-ஆம் வருட மாணவர்கள்		5-ஆம் வருட மாணவர்கள்		பட்டம்பெற்றோர் எண்ணிக்கை	
	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
கட்டடக்கலை பீடம்	398	555	379	396	374	379	354	377	358	354	57	55	324	346
வியாபார பீடம்	98	158	100	98	98	100	-	98	-	-	-		-	-
பொறியியல் பீடம்	941	1093	950	945	938	949	938	938	928	938	-		**790**	902
தகவல் தொழில்நுட்ப பீடம்	294	367	296	298	297	296	283	297	288	283	-		**240**	256
மருத்துவ பீடம்	-	104												
கூட்டு மொத்தம்	1731	2277	1723	1737	1707	1724	1575	1710	1574	1575	57	55	1354	1504

* குறிப்பு:- வழங்கப்பட்ட உள்வாங்கல் சார்பாக கல்வி ஆண்டுக்குரிய 90% ஆனவை அடுத்த ஆண்டினுள் பூர்த்திசெய்யப்பட்டன.

(ii) பட்டமேற்படிப்பு பட்டங்கள் (பாடநெறி சார்பாக)

பீடம்	உள்வாங்கல் (மாணவர்கள் எண்.)		தற்போதுள்ள மாணவர் எண். (2020)	பூர்த்திசெய்தோர் எண்ணிக்கை			
				எம்.எஸ்சி./ எம்.பொறியி. / எம்.பிஏ.		பட்டப்பின்படிப்பு திப்ளோமா	
	2019	2020		2019	2020	2019	2020
கட்டடக்கலை பீடம்	38	134	494	33	41	28	8
பொறியியல் பீடம்	611	444	2185	185	141	100	50
தகவல் தொழில்நுட்ப பீடம்	78	88	233	45	26	1	7
வியாபார பீடம்	53	68	177	35	24	3	3
மருத்துவ பீடம்							
மொத்தம்	780	734	3089	298	232	132	68

(iii) பட்டமேற்படிப்பு பட்டங்கள் (ஆய்வு சார்பாக)

பீடம்	உள்வாங்கப்பட்ட மாணவர்கள் எண்.						தற்போதுள்ள மாணவர்கள் எண்ணிக்கை						பட்டம்பெற்றோர் எண்ணிக்கை					
	எம்.எஸ்சி.		எம்.பில்.		பீ.எச்டீ.		எம்.எஸ்சி.		எம்.பில்.		பீ.எச்டீ.		எம்.எஸ்சி.		எம்.பில்.		பீ.எச்டீ.	
	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
கட்டடக்கலை பீடம்	2015 முதல் புதிய பதிவுசெய்தல் பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.						-		5	5	2		-	-	-	-	-	-
பொறியியல் பீடம்							64	57	43	37	56	55	1	7	1	6	3	1
தகவல் தொழில்நுட்ப பீடம்							1	1	3	3	1	-	-	-	-	-	1	-
பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம்	79	52	30	23	18	21	212	236	116	130	77	88	32	28	14	9	-	10
மொத்தம்	**79**	**52**	**30**	**23**	**18**	**21**	**277**	**294**	**167**	**161**	**136**	**143**	**33**	**35**	**15**	**15**	**4**	**11**

(b) விபரம்

(i) இளமாணிப் பட்டங்கள் (பட்டதாரி மாணவர்கள்)

பீடம்	பாடநெறி	மொழி	உள்வாங்கல் (மாணவர்கள் எண்.) *		1-ஆம் வருட மாணவர்கள்		2-ஆம் வருட மாணவர்கள்		3-ஆம் வருட மாணவர்கள்		4-ஆம் வருட மாணவர்கள்		5-ஆம் வருட மாணவர்கள்		பட்டம்பெற்றோர் எண்ணிக்கை	
			2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
கட்டடக்கலை பீடம்	AT [1]	ஆங்கிலம்	68	85	58	69	60	58	54	60	55	54	57	55	64	51
	AD [2]	ஆங்கிலம்	59	84	59	58	55	59	37	58	44	37	-		28	46
	QS [3]	ஆங்கிலம்	125	146	125	125	125	125	124	125	128	124	-		98	124
	TCP [4]	ஆங்கிலம்	48	81	48	48	48	50	51	48	47	51	-		53	44
	FM [5]	ஆங்கிலம்	48	80	50	46	50	50	46	50	47	46	-		43	45
	BLA [6]	ஆங்கிலம்	50	79	37	50	36	37	42	36	37	42	-		38	36
உப மொத்தம்			**398**	**555**	**379**	**396**	**374**	**379**	**354**	**377**	**358**	**354**	**57**	**55**	**324**	**346**
வியாபார பீடம்		ஆங்கிலம்	98	158	100	98	98	100	-	98	-	-	-		-	-
உப மொத்தம்			**98**	**158**	**100**	**98**	**98**	**100**	**-**	**98**	**-**	**-**	**-**		**-**	**-**
பொறியியல் பீடம்	MPR [7]	ஆங்கிலம்	723	768	726	723	721	726	723	721	727	723	-		632	719
	EM [8]	ஆங்கிலம்	49	70	52	50	48	52	50	48	48	50	-		39	47
	TM [9]	ஆங்கிலம்	68	93	60	69	59	60	61	59	54	61	-		42	52
	TLM [10]	ஆங்கிலம்	54	88	62	54	60	61	51	60	55	51	-		44	52
	FD [11]	ஆங்கிலம்	47	74	50	49	50	50	53	50	44	53	-		33	32
உப மொத்தம்			**941**	**1093**	**950**	**945**	**938**	**949**	**938**	**938**	**928**	**938**	**-**		**790**	**902**
தகவல் தொழில்நுட்ப பீடம்	IT [12]	ஆங்கிலம்	196	245	196	200	198	198	188	198	189	188	-		158	172
	ITM [13]	ஆங்கிலம்	98	122	98	98	99	98	95	99	99	95	-		82	84
உப மொத்தம்			**294**	**367**	**296**	**298**	**297**	**296**	**283**	**297**	**288**	**283**	**-**		**240**	**256**
மருத்துவ பீடம்	MBBS [14]	ஆங்கிலம்	**-**	**104**												
உப மொத்தம்			**-**	**104**												
பட்டமேற்படி. கற்கை.பீடம்	பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பட்டமேற்படிப்பு மாணவர்கள் இருக்கவில்லை.															
கூட்டு மொத்தம்			**1731**	**2277**	**1723**	**1737**	**1707**	**1724**	**1575**	**1710**	**1574**	**1575**	**57**	**55**	**1354**	**1504**

குறிப்புக்கள் -

[1] கட்டடக்கலை இளமாணி

[2] வடிவமைப்பு இளமாணி

[3] கணிய அளவையியல் சார் விஞ்ஞான இளமாணி

[4] பட்டனமும் நாடும் திட்டமிடல் சார் விஞ்ஞான இளமாணி

[5] வசதிகள் முகாமைத்துவம் சார் விஞ்ஞான இளமாணி

[6] நிலத்தோற்ற கட்டடக்கலை இளமாணி

[7] பொறியியல் (MPR) சார் விஞ்ஞான இளமாணி

[8] பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (நில மூலவளங்கள்)

[9] பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி – புடவையும் ஆடையும் தொழில்நுட்பம்

[10] போக்குவரத்து, தேவை. விநி. ஒழுங்கமைப்பு முகாமை. சார் விஞ்.இளமாணி

[11] நவநாகரீக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி சார் வடிவமைப்பு இளமாணி

[12] தகவல் தொழில்நுட்பம் சார் விஞ்ஞான இளமாணி

[13] தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் சார் விஞ்ஞான இளமாணி

[14] மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல் இளமாணி

* குறிப்பு:- வழங்கப்பட்ட உள்வாங்கல் சார்பாக கல்வி ஆண்டுக்குரிய 90% ஆனவை அடுத்த ஆண்டினுள் பூர்த்திசெய்யப்பட்டன.

(ii) பட்டமேற்படிப்பு பட்டங்கள் (பாடநெறி சார்பாக)

பீடம்	பாடநெறியின் பெயர்	மொழி	உள்வாங்கல் (மாணவர்கள் எண்.)		தற்போது உள்ள மாணவர் எண்.	பூர்த்திசெய்தோர் எண்ணிக்கை			
						எம்.எஸ்சி./எம்.பொறி. / எம்.பிஏ.		பட்டப்பின்படிப்பு திப்ளோமா	
			2019	2020		2019	2020	2019	2020
கட்டடக்கலை பீடம்	நகர வடிவமைப்பு எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	10	14	45	1	1	2	2
	இடஞ்சார் திட்டமிடல் முகாமையும் வடிவமைப்பும் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	-	27	2	5	-	-
	உள்ளக வடிவமைப்பு சார் எம்.எஸ்சி. கற்றலுக்கான பீஜீ சார் உள்ளக வடிவமைப்பு	ஆங்கிலம்	-	-	-	3	9	10	4
	தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	22	-	62	10	-	1	-
	கருத்திட்ட முகாமை சார் எம்.எஸ்சி./பீஜீ	ஆங்கிலம்	-	60	134	12	8	7	-
	எம்.எஸ்சி./ பீஜீ திப்ளோ. சார் நிலத்தோற்ற வடிவமை.	ஆங்கிலம்	-	-	8	-	-	-	-
	கட்டடக்கலை முதுமாணி	ஆங்கிலம்	-	-	18	-	-	-	-
	ACOMAS சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	-	16	-		4	-
	நிர்மாண சட்டமும் முரண்பாடு தீர்த்தலும் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	60	178	5	18	4	1
	பட்டணமும் நாடும் திட்டமிடல் சார் எம்.எஸ்சி./ பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	-	-	-	-	-	1
	சூழல் திட்டமிடல் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	6	-	6	-	-	-	-
பொறியியல் பீடம்	கணினி விஞ்ஞா. சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	80	100	373	38	25	5	2
	தகவல் தொழில்நு. சார் எம்.பி.ஏ./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	40	31	69	19	20	-	-
	அடித்தள பொறியி. நில தக்கவைத்தல் முறைமை சார் எம்.பொறியி./பீஜீ	ஆங்கிலம்	-	-	62	1	4	2	3
	வியாபார புள்ளிவிபரவியல் சார் எம்.எஸ்சி./ பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	31	19	171	09	7	2	2

பீடம்	பாடநெறியின் பெயர்	மொழி	உள்வாங்கல் (மாணவர்கள் எண்.)		தற்போது உள்ள மாணவர் எண்.	பூர்த்திசெய்தோர் எண்ணிக்கை			
						எம்.எஸ்சி./எம்.பொறி. / எம்.பிஏ.		பட்டப்பின்படிப்பு திப்ளோமா	
			2019	2020		2019	2020	2019	2020
பொறியியல் பீடம்	தொழிற்பாட்டு ஆய்வு சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	38	-	99	06	2	2	1
	நெடுஞ் சாலை மற்றும் வீதிப்போக்குவரத்து பொறியியல் சார் எம்.பொறியி./பீஜீ	ஆங்கிலம்	23	21	98	12	-	4	-
	போக்குவரத்து சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	10	8	35	1	-	1	-
	கருத்திட்ட முகாமை சார் எம்.பி.ஏ./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	-	59	-	-	-	-
	இலத்திரணியல் மற்றும் தன்னியக்கம் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	32	34	99	12	2	-	1
	சூழல் பொறியியலும் முகாமைத்துவமும் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	22	-	32	1	-	7	4
	வழங்கல் சங்கிலி முகாமை. சார் எம்.பி.ஏ.	ஆங்கிலம்	18	12	38	19	-	-	-
	சூழல் முகாமை. பற்றிய எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	16	-	70	1	-	1	2
	கட்டமைப்பு பொறியியல் வடிவமைப்பு சார் எம்.பொறியி./பீஜீ	ஆங்கிலம்	38	-	59	1	-	2	3
	நிர்மாண கருத்தி. முகா. எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	-	6	5	23	13	1
	நிதிசார் கணிதம் பற்றிய எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	20	37	159	9	1	4	1
	உற்பத்தி முறைமை பொறியியல் சார் எம்.பொறியி./பீஜீ	ஆங்கிலம்	32	-	69	7	2	2	1
	பொலிமர் தொழில்நுட்ப எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	-	-	-	-	-	6
	அகழ்தல் மற்றும் கனிப்பொருள் ஆராய்ச்சி சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	-	-	-	-	-	-
	மின் பொறியியல் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	28	41	76	10	14	6	8

பீடம்	பாடநெறியின் பெயர்	மொழி	உள்வாங்கல் (மாணவர்கள் எண்.)		தற்போது உள்ள மாணவர் எண்.	பூர்த்திசெய்தோர் எண்ணிக்கை			
						எம்.எஸ்சி./எம்.பொறி. / எம்.பிஏ.		பட்டப்பின்படிப்பு திப்ளோமா	
			2019	2020		2019	2020	2019	2020
பொறியியல் பீடம்	மின் நிறுவுதல் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	39	67	158	7	8	12	2
	கைத்தொழில் தன்னியக்கம் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	27	33	117	2	-	10	2
	பொருட்கள் விஞ்ஞானம் பொறியியல் சார் எம்.எஸ்சி./ பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	28	-	79	5	-	1	1
	நிலைபேறான செயல்முறை அபிவிருத்தி சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	22	-	58	4	5	1	-
	ஈ-அரசாட்சி சார் எம்.பி.ஏ./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	6	6	20	-	-	-	-
	கட்டட சேவைகள் பொறியியல் சார் எம்.எஸ்சி./ பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	-	33	-	-	13	-
	சக்தி தொழில்நுட்பம் சார் எம்.பொறியி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	21	-	7	6	4	3	1
	புடைவை மற்றும் ஆடை முகாமை. சார் எம்.எஸ்சி./ பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	14	-	60	2	1	2	1
	உட்கட்டமைப்பு சார் சார் எம்.பி.ஏ./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	-	-	-	-	-	-
	தொடர்பாடல் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	26	-	49	-	3	3	6
	இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	-	-	-	-	-	-
	நீர் வள பொறியியல் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	21	30	8	20	4	2
	நனோ தொழில்நுட்பம் சார் எம்.எஸ்சி./பீஜீ	ஆங்கிலம்	-	14	-		-		-
தகவல் தொழில்நுட்ப பீடம்	செயற்கை மதிநுட்பம் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	34	46	127	8	24	1	1
	கல்விசார்ந்த தகவல் தொழில்நுட்ப பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	-	-	-	-	2	-	6
	தகவல் தொழில்நுட்பம் சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	44	42	106	37	-	-	-

பீடம்	பாடநெறியின் பெயர்	மொழி	உள்வாங்கல் (மாணவர்கள் எண்.)		தற்போது உள்ள மாணவர் எண்.	பூர்த்திசெய்தோர் எண்ணிக்கை			
						எம்.எஸ்சி./எம்.பொறி. / எம்.பிஏ.		பட்டப்பின்படிப்பு திப்ளோமா	
			2019	2020		2019	2020	2019	2020
வியாபார பீடம்	தொழில்நுட்ப முகாமை. சார் எம்.பி.ஏ./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	44	48	139	28	21	3	3
	தொழிலுரிமைத்துவம் சார் எம்.பி.ஏ./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	9	20	38	7	3	-	-
மொத்தம்			**736**	**734**	**1630**	**298**	**158**	**132**	**43**

குறிப்பு: எம்.எஸ்சி./எம். பொறியி./எம்.பி.ஏ. மற்றும் பட்டப்பின்படிப்பு திப்ளோமா கற்கைநெறிகள் என்பன வழக்கமாக பகுதி நேர பாடநெறிகள் என்பதுடன், முறையே இரு வருட, ஒரு வருட காலப்பகுதியினை சாதாரணமாக கொண்டுள்ளன.

(iii) பட்டமேற்படிப்பு பட்டங்கள் (ஆய்வு சார்பாக)

பீடம்	உள்வாங்கப்பட்ட மாணவர்கள் எண்.						தற்போதுள்ள மாணவர்கள் எண்ணிக்கை						பட்டம்பெற்றோர் எண்ணிக்கை					
	எம்.எஸ்சி.		எம்.பீல்.		பீ.எச்டீ.		எம்.எஸ்சி.		எம்.பீல்.		பீ.எச்டீ.		எம்.எஸ்சி.		எம்.பீல்.		பீ.எச்டீ.	
	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
கட்டடக்கலை பீடம்	2015 முதல் புதிய பதிவுசெய்தல் பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.						-		5	5	2		-	-	-	-	-	-
பொறியியல் பீடம்							64	57	43	37	56	55	1	7	1	6	3	1
தகவல் தொழில்நுட்ப பீடம்							1	1	3	3	1	-	-	-	-	-	1	-
பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம்	79	52	30	23	18	21	212	236	116	130	77	88	32	28	14	9	-	10
மொத்தம்	**79**	**52**	**30**	**23**	**18**	**21**	**277**	**294**	**167**	**161**	**136**	**143**	**33**	**35**	**15**	**15**	**4**	**11**

4. வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரம்

(அ) வெளிநாட்டு பட்டதாரி மாணவர்கள் பற்றிய விபரம் (புலமைப்பரிசில் பெற்றவர்கள் உட்பட)

(i) 100 புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான வெளிநாட்டு பட்டதாரி மாணவர்கள் பற்றிய விபரம்

பீடம்	பாடநெறி	3-ஆம் வருட மாணவர்கள்		4-ஆம் வருட மாணவர்கள்	
		2019	2020	2019	2020
பொறியியல் பீடம்	பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (எம்பீஆர்)	5	-	5	5
கட்டடக்கலை பீடம்	கணிய அளவையியல் சார் விஞ்ஞான இளமாணி	-	-	-	-
	பட்டணமும் நாடும் திட்டமிடல் சார் விஞ்ஞான இளமாணி	-	-	-	-
மொத்தம்		**5**	**-**	**5**	**5**

(ii) வெளிநாட்டு பட்டதாரி மாணவர்கள் பற்றிய விபரம் (வெளிநாட்டு தகைமைகளைக் கொண்ட ஏனைய மாணவர்கள்)

பீடம்	பாடநெறி	உள்வாங்கல்		1-ஆம் வருட மாணவர்கள்		2-ஆம் வருட மாணவர்கள்		3-ஆம் வருட மாணவர்கள்		4-ஆம் வருட மாணவர்கள்	
		2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
பொறியியல் பீடம்	பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (எம்பீஆர்)	2	-	2	-	-	2	1	-	3	1
கட்டடக்கலை பீடம்	கட்டடக்கலை இளமாணி	-	-	-	-	-	-	1	-	-	1
	பட்டணமும் நாடும் திட்டமிடல் சார் விஞ்ஞான இளமாணி	1	-	1	-	-	1	-	-	-	-
மொத்தம்		**3**	**-**	**3**	**-**	**-**	**3**	**2**	**-**	**3**	**2**

(ஆ) பட்டமேற்படிப்பு வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரம்

பீடம்	பாடநெறி	மொழி	மாணவரின் நாடு	உள்வாங்கல்		தற்போதுள்ள மாணவர்கள் எண்.		பட்டம்பெற்ற மாணவர்கள் எண்.	
				2019	2020	2019	2020	2019	2020
கட்டடக்கலை பீடம்	கருத்திட்ட முகாமை சார் எம்.எஸ்சி./ பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	மாலைத்தீவு	-		-	-	1	
பொறியியல் பீடம்	நீர் வள பொறியியல், முகாமை. சார் எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	பூட்டான்	-	2	-	2	3	2
			ஆப்கானிஸ்தான்	-	3	-	3	1	3
			பாகிஸ்தான்	-	-	-	-	1	-
			இந்தியா	-	3	-	3	-	3
			நேபாளம்	-	1	-	1	1	1
			பங்களாதேஷ்		1	-	1		1
வியாபார பீடம்	தொழிலுரிமைத்துவம் சார் எம்.பி.ஏ./பீஜீ திப்ளோ.	ஆங்கிலம்	சீனா	1	-	-	-	-	-
பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம்	கட்டடக்கலை சார் ஆராய்ச்சியில் பீ.எச்டீ.	ஆங்கிலம்	தென் கொரியா	-	1	-	1	-	-
மொத்தம்				**1**	**10**	**-**	**11**	**7**	**10**

5. பணியாட்தொகுதியினர் விபரம்

a. பொழிப்பு (முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலமான ஊழியர்கள் வகைப்படுத்தலுக்கேற்ப)

சேவை வகை			2019	2020
ஆரம்ப மட்டம்	ஆரம்ப மட்டம் – தேர்ச்சி அற்ற	U-PL 1	94	86
	ஆரம்ப மட்டம் – பகுதி தேர்ச்சி பெற்ற	U-PL 2	75	74
	ஆரம்ப மட்டம் – தேர்ச்சி பெற்ற	U-PL 3	147	139
	மொத்தம்		316	299
இரண்டாம்நிலை மட்டம்	முகாமை. உதவியாளர் – தொழில்நுட்பம் சாரா	U-MN 1	165	165
	முகாமை. உதவியாளர் – தொழில்நுட்பம் சார்	U-MT 1	103	100
	இணைந்த அலுவலர்கள் – பிரிவு 1	U-MN 2	4	4
	இணைந்த அலுவலர்கள் – பிரிவு 2	U-MN 3	6	6
	பதவிநிலை உதவி அலுவலர்/ அதியுயர் மற்றும் சிரேஷ்ட பதவிநிலை உதவி அலுவலர்கள்	U-MN 4	82	82
	மொத்தம்		360	357
மூன்றாம்நிலை மட்டம்	கல்விசார் துணை பதவிநிலை – பிரிவு 2	U-AS 1	5	5
	கனிஷ்ட நிறைவேற்றுநர்/ முகாமையாளர்	U-EX 1	14	13
	கல்விசார் துணை பதவிநிலை – பிரிவு 1	U-AS 2	38	41
	மொத்தம்		57	59
சிரேஷ்ட மட்டம்	மருத்துவ அலுவலர்கள்	U-MO 1	1	1
	சிரேஷ்ட மருத்துவ உத்தியோகத்தர்	U-MO 2	1	1
	இடை நிலை நிறைவேற்றுநர்கள்	U-EX 2/ U-EX 2 (a)	13	14
	சிரேஷ்ட நிலை நிறைவேற்றுநர்கள்	U-EX 3	2	2
	விரிவுரையாளர்கள்	U-AC 3	330	338
	இணை பேராசிரியர்கள்	U-AC 4	4	4
	பேராசிரியர்கள்/ சிரேஷ்ட பேராசிரியர்கள்	U-AC 5	55	54
	மொத்தம்		406	414
கூட்டு மொத்தம்			1139	1129

b. அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆளணியினர் - 2021

பணியாளர் வகை	சம்பள அளவுத் திட்டம்		அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள பணியாளர்கள்												நிரந்தர ஆளணி வெற்றிடம்	உள்ளபடி ஆளணி வெற்றிடம்
				நிரந்தரம்			தற்காலிகம்			ஒப்பந்தம்			ஒப்படைப்பு				
				ஆண்	பெண்	மொத்	ஆண்	பெண்	மொத்	ஆண்	பெண்	மொத்	ஆண்	பெண்	மொத்		
கல்விசார் பணியாளர் *4	U-AC 3 to U-AC 5		610	241	148	389				31	24	55	15	9	24	221	142
	U-AC 1 to U-AC 2		287				40	73	113							174	174
நூலகப் பணியாளர்	U-AC 5		1		1	1										1	0
	U-AC 4															0	0
	U-AC 3		6	3	3	6										6	0
நிருவாக பணியாளர் மற்றும் நிதி பணியாளர் *1	U-EX 3		2	1	1	2										0	0
	U-EX 2		15	5	9	14								1	1	1	0
	U-EX 1		15	1	9	10										5	5
ஏனைய நிறைவேற்று பணியாளர் *2	U-EX 2, U-EX 1		7	2		2							1		1	5	4
	U-EX 2		3													3	3
	U-EX 1		3		1	1								1	1	2	1
மருத்துவ உத்தியோகத்தர்	U-MO 2		1		1	1										0	0
	U-MO 1		4		1	1										3	3
கல்விசார் துணை பணியாளர்	U-AS 2, U-AS 1		8	4	1	5										3	3
	U-AS 2		64	23	18	41				3	2	5	2	1	3	23	15
	U-AS 1		4													4	4
தொழில்நுட்ப பணியாளர் *3	U-EX 2	புதிய சம்பள அளவுத்திட்டம் U-MT 1	188			0										50	50
	U-EX 1					0											
	U-MN 4			21	15	36											
	U-MN 3																
	U-MN 2			2		2											
	U-MN 1																
	U-MT 1			66	34	100											
எழுதுவினைஞர், இணைந்த சேவை பணியாளர்	U-MN 4		1	8	38	46										44	44
	U-MN 3		13	4	2	6											
	U-MN 2		4	2		2											
	U-MN 1		245	66	99	165											
ஆரம்ப பணியாளர்	U-PL 3		90	135	4	139				1		1				144	141
	U-PL 2		139	66	8	74											
	U-PL 1		214	79	7	86				2		2					
ஏனையன *(தயவுசெய்து குறிப்பிடவும்)*																	
மொத்தம்			1924	729	400	1129	40	73	113	37	26	63	18	12	30	795	589

6. கல்விசார் ஆளணியினர் பற்றிய விபரம்

பீடம்	சிரேஷ்ட பேராசிரியர்		பேராசிரியர்		இணை பேராசிரியர்		சிரேஷ்ட விரிவுரையாளர்		விரிவுரையாளர் (மாற்றத்துக்குரிய)		விரிவுரையாளரர் (தகுதிகாண்)		கல்விசார் ஒப்பந்த பணியாளர்		போதனாசிரியர்	
	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
கட்டடக்கலை	1	-	6	6	-	-	48	48	1	1	34	42	7	6	4	10
வியாபாரம்	2	2	-	-	-	-	6	7	-	-	10	10	8	3	2	14
பொறியியல்	19	18	25	26	4	4	146	146	1	4	47	48	53	38	37	83
பட்டமேற்படி. கற்கை. பீடம்																
தகவல் தொழில்நுட்பம்	1	1	-	-	-	-	18	19	2	2	8	-	-	7	6	21
மருத்துவம்														1		
மொத்தம்	**23**	**21**	**31**	**32**	**4**	**4**	**218**	**220**	**4**	**7**	**99**	**05**	**68**	**55**	**49**	**128**

நூலகம்	நூலகர்		சிரேஷ்ட உதவி நூலகர் தரம் II		சிரேஷ்ட உதவி நூலகர் தரம் I		உதவி நூலகர் தரம் II	
	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
நூலக பணியாளர் *	1	1	4	4	2	2	-	-
மொத்தம்	**1**	**1**	**4**	**4**	**2**	**2**	**-**	**-**

* கல்விசார் ஆளணி வகையின் கீழ் கணிப்பிடப்பட்டுள்ளனர்

7. நிர்வாக ஆளணியினர் பற்றிய விபரம்

நிர்வாக உத்தியோகத்தர்கள்	பதிவாளர்/நிதியாளர்		பிரதி பதிவாளர்/ நிதியாளர்		சிரேஷ்ட உதவி பதிவாளர்/நிதியாளர்		உதவி பதிவாளர்/ நிதியாளர்		ஏனைய நிர்வாக உத்தியோகத்தர்கள்*	
	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
பொது நிர்வாகம்	1	1	5	5	2	3	7	7	7	7
நிதி நிர்வாகம்	1	1	3	3	2	1	2	2	-	-
மொத்தம்	**2**	**2**	**8**	**8**	**4**	**4**	**9**	**9**	**7**	**7**

* பிரதி உள்ளக கணக்காய்வாளர், சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் பணிப்பாளர்/ உடற் கல்வி, சுகாதார சேவை உத்தியோகத்தர், வேலை பொறியியலாளர், காப்பாளர், பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர்.

8. கல்விசாரா ஆளணியினர் பற்றிய விபரம்

பீடம் / கிளை	சிரேஷ்ட பணியாளர்*		கனிஷ்ட பணியாளர்**		சிற்றூழியர்கள்		ஒப்பந்த பணியாளர்கள்***	
	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
கட்டடக்கலை பீடம்	8	8	38	34	25	25	-	-
பொறியியல் பீடம்	31	30	83	83	100	97	-	-
தகவல் தொழில்நுட்ப பீடம்	3	3	24	22	23	22	-	-
பட்டமேற்படிப்பு கற்கை. பீடம்	-	-	2	2	1	1	1	-
வியாபார பீடம்	-	1	2	3	2	2	-	-
மருத்துவ பீடம்								3
மூலதன வேலைகளும், சேவைகளும்	1	2	4	4	1	1	-	-
தொழில் வழிகாட்டல் அலகு	-	1	1	1	1	1	-	-
தகவல் தொழில்நுட்ப சேவைகளுக்கான நிலையம்	-		4	4	1	1	-	-

பீடம் / கிளை	சிரேஷ்ட பணியாளர்*		கனிஷ்ட பணியாளர்**		சிற்றூழியர்கள்		ஒப்பந்த பணியாளர்கள்***	
	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
மின் விநியோகம்	-	-	-	1	6	5	-	-
பரீட்சை சேவைகள்	1	1	12	13	5	5	-	-
நிதி நிர்வாகம்	5	5	12	12	6	4	-	-
பொது நிர்வாகம்	8	8	31	28	11	8	-	-
சுகாதார சேவைகள்	-	1	6	5	8	8	-	-
விடுதிகள்	5	-	2	7	7	6	-	-
உள்ளகக் கணக்காய்வு	2	-	3	5	1	1	-	-
காணியும் கட்டடங்களும்	1	1	5	6	32	28	-	-
நூலக சேவைகள்	9	7	19	19	10	9	-	-
உடற்பயிற்சிக் கல்வி	1	1	-	-	5	5	-	-
பாதுகாப்பு சேவைகள்	1	2	2	9	16	8	1	-
களஞ்சியங்களும், விநியோக சேவைகளும்	5	4	4	5	2	2	-	-
மாணவர், ஊழியர் சேமநலம்	1	1	3	3	-	-	-	-
போக்குவரத்துச் சேவைகள்	-	-	-	-	31	31	-	-
நீர் விநியோகம்	-	-	-	-	5	5	-	-
வேலைத் தளம்	2	2	9	9	21	22	-	-
சட்டம், ஆவணங்கள் அலகு	-	-	1	1	1	1	-	-
CODL	-	-	1	1	1	1	-	-
வெளியக அலுவல்களும் பிரசுரங்களும் மற்றும் ISP	-	-	1	1	-	-	-	-
பணியாளர் அபிவி. நிலையம்	-	-	-	-	1	1	-	-
மொத்தம்	**84**	**78**	**269**	**278**	**323**	**300**	**2**	**3**

குறிப்பு: கல்விசாரா பணியாளர்களின் விபரம்

* சிரேஷ்ட கல்விசாரா பணியாளர்கள்

** சிற்றூழியர்கள் தவிர்ந்த கல்விசாரா பணியாளர்கள்

*** அனைத்து வகையான கல்விசாரா ஒப்பந்தப் பணியாளர்கள்

9. ஆய்வு கருத்திட்டங்கள் / ஆக்கவுரிமைகள்

a. பொழிப்பு

பீடம்	நடைபெற்றுவரும் ஆய்வு கருத்திட்டங்கள்	பூர்த்தியான ஆய்வு கருத்திட்டங்கள்	ஆக்கவுரிமைகள் பெற்றவை
கட்டடக்கலை பீடம்	**31**	**1**	**-**
வியாபார பீடம்	**11**	**-**	**-**
பொறியியல் பீடம்	**195**	**15**	**1**
தகவல் தொழில்நுட்ப பீடம்	**8**	**1**	**-**
கூட்டு மொத்தம்	**245**	**17**	**1**

b. விபரங்கள்

பீடம்	திணைக்களம்	நடைபெற்றுவரும் ஆய்வு கருத்திட்டங்கள்	பூர்த்தியான ஆய்வு கருத்திட்டங்கள்
கட்டடக்கலை பீடம்	கட்டடகலை திணைக்களம்	13	
	ஒன்றிணைக்கப்பட்ட வடிவமைப்பு திணை.	11	
	பட்டினமும் நாடும் திட்டமிடல் திணை.	7	1
	கட்டடப் பொருளியல் திணைக்களம்	-	
உப மொத்தம்		**31**	**1**
பொறியியல் பீடம்	இரசாயன, செயல்முறை பொறியியல் திணை.	18	2
	சிவில் பொறியியல் திணைக்களம்	35	2
	கணினி விஞ்ஞானம், பொறியியல் திணை.	25	2
	நில வளங்கள் பொறியியல் திணைக்களம்	14	1
	மின் பொறியியல் திணைக்களம்	24	1
	இலத்திரணி., தொடர்பாடல் பொறி. திணை.	12	
	கணிதவியல் திணைக்களம்	4	
இலங்கை வங்கி - க/கு இல. 306795 (விடுதி)	2,849,220	4,162,375
இலங்கை வங்கி - க/கு இல. 71579813	61,970	102,720
வெளிநாட்டு RFD/KAT/US$40	1,232,805	1,207,061
மொத்தம்	**522,521,616**	**145,293,156**

குறிப்பு – 9

கையிலுள்ள காசு		
சில்லறைக் காசு கட்டுநிதி		
மின் பொறியியல் திணைக்களம்	-	10,000
இலத்திரனியல் & தொடர்பாடல் திணைக்களம்	-	15,000
திறந்த மற்றும் தொலைக் கற்றல் நிலையம்	-	20,000
AHEAD - OTS அலுவலகம்	-	5,000
மொத்தம்	-	**50,000**

குறிப்பு – 10

செலு.வேண்டிய வைப்புக்கள்		
விலைமனு	152,000	177,000
சில்லறை	6,015,611	2,641,886
நம்பிக்கை உத்தரவாதம்	17,500	17,500
சிற்றுண்டிச்சாலை	481,000	431,000
ஆய்வுகூடம் மற்றும் நூலகம்	16,388,500	17,204,750
பாதுகாப்பு	876,057	612,744
கடன் பிணை	818,900	829,155
இணையம்	914,000	872,000
மொத்தம்	25,663,568	22,786,035

குறிப்பு – 11	2020	2019
செலுத்தவேண்டியவைகள்	ரூ.	ரூ.
செலுத்தப்படாத மாணவர் உதவிதொகை	75,900	15,900
அறக்கட்டளை நிதி புலமைப்பரிசில் செலுத்தவேண்டிய கணக்கு	4,000	-
ஏனைய பொறுப்புக்கள்	55,530,396	58,082,133
மூலதன செயற்பாடுகளுக்கான பெறுவனவுகள்	19,871,317	22,452,803
சில்லறை கடன்கொடுத்தோர்	13,857,991	28,184,442
தடுத்தல்வைத்தல் கழு - வழங்குநர்கள்	7,550,180	9,288,663
ஒப்பந்தவேலைக்காரர் சார் தடுத்தல்வைத்தல்	24,120,599	36,502,106
வெளிநாட்டு மாணவருக்கான மானியம் - உயர் கல்வி அமைச்சு	1,639,775	1,471,775
செலுத்தப்படாத கூலிகள்	393,654	463,631
செலுத்தப்படாத பணிக்கொடை	1,086,219	-
செலுத்தவேண்டிய நிறுத்தி வைத்தல் வரி	70,594	1,573,711
நிறுத்திவைத்துள்ள செலுத்.வேண். பணிக்கொடை	1,609,616	2,095,851
மொத்தம்	**125,810,241**	**160,131,016**

குறிப்பு - 12		
பிற்போடப்பட்ட வருமானம்		
பட்டப்பின்படிப்பு பாடநெறிகள்	496,132,535	429,766,619
பகுதி நேர பாடநெறிகள்	6,317,462	8,592,456
பயிற்சியளிப்பு நிகழ்ச்சித்திட்டம்	27,161,596	34,717,603
ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்	114,617,711	114,921,070
கருத்திட்டங்கள்	75,403,731	72,803,144
மொத்தம்	**719,633,035**	**660,800,892**

குறிப்பு – 13		
செலவிட்ட மூலதன மானியங்கள்		
ஆரம்ப மீதி	3,806,254,641	3,949,650,980
சீராக்கல்கள்	(27,140,673)	-
சொத்துக்கள் கைகொள்ளல்	186,361,445	217,388,555
ஏனைய மூலதன நடவடிக்கைகள் செலவினம்	36,169,374	77,478,616
கருத்திட்டச் செலவினம் (குறிப்பு 4)	164,810,166	128,647,026
UDF இருந்து மாற்றப்பட்டது	-	(4,861,462)
ஆண்டுக்கான கடன்தீர் நிதி	(530,461,967)	(562,049,075)
மீதி	**3,635,992,986**	**3,806,254,641**

குறிப்பு – 14		
மூலதன மானியம் – செலவிடப்படாதவை		
ஆரம்ப மீதி	0.00	18,652,736
திறைசேரி மூலம் மானியம்	423,000,000	400,000,000
மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் உயர் இலத்திரனியல் வடிவமைப்பு நிலையம் தாபிப்பதற்காக UDF மூலம் மாற்றல்	10,135,266	4,861,462
சீராக்கல்கள்	26,770	-
சொத்துக்கள் கைகொள்ளல்	(222,530,820)	(294,867,171)
முடிவுறாதவேலை மீதான செலவினம்	(164,810,166)	(128,647,026)
மொத்தம்	**45,821,051**	**0.00**

குறிப்பு – 15		
ஆய்வு மானியங்கள்		
தேசிய விஞ்ஞான மன்றம்	8,800,566	7,688,592
சர்வதேச நிதியளிப்பு ஆய்வு கருத்திட்டங்கள்	-	-
ஏனைய ஆய்வு மானியங்கள்	107,516,071	78,439,398
	116,316,637	**86,127,989**

குறிப்பு – 16		
உருவாக்கிய நிதி – மூலதனம்		
ஆரம்பமீதி	58,570,010	55,435,546
சீராக்கல்கள்	-	4,537
உபவேந்தரின் நிதியம் மற்றும் பிற திணைக்கள நிதி	5,229,875	7,803,249
UDF மூலம் மேலதிக மாற்றல்	-	4,861,462
	63,799,886	68,104,794
கழி: சென்ற வருடத்திற்கான கடன்தீர் நிதி	-	(11,343)
ஆண்டுக்கான கடன்தீர் நிதி	(10,046,428)	(9,523,441)
மொத்தம்	53,753,457	58,570,010

குறிப்பு – 17	2020	2019
நன்கொடைகள் – மூலதனம்	ரூ.	ரூ.
ஆரம்பமீதி	562,946,621	638,353,279
சீராக்கல்கள்	-	202,915
பெறுவனவுகள்	602,865	6,997,653
	563,549,486	645,553,847
கழி: ஆண்டுக்கான கடன்தீர் நிதி	(82,667,512)	(82,607,226)
மொத்தம்	**480,881,974**	**562,946,621**

குறிப்பு – 18		
நன்கொடைகள் - AHEAD தொழிற்பாடுகள் மூலம் முதலீடு		
ஆரம்பமீதி	64,415,564	-
பெறுவனவுகள்	113,570,707	71,572,849
	177,986,271	71,572,849
கழி: ஆண்டுக்கான கடன்தீர் நிதி	(18,514,356)	(7,157,285)
மொத்தம்	**159,471,915**	**64,415,564**

குறிப்பு – 19	2020	2020	2019	2019
கட்டுப்படுத்தப்பட்ட நிதியம்	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
உருவாக்கப்பட்ட நிதியம்	**437,650,001**		**412,830,636**	
கூட்டுக - பெறுவனவுகள்	252,655,524		351,065,951	
கழி - கொடுப்பனவுகள்	(145,288,558)		(326,246,586)	
	545,016,968		**437,650,001**	
கூட்டு: திணைக். க/கு & பாடநெறி அபி. நிதி	195,725,251		181,732,342	
	740,742,219		**619,382,343**	
இறுதி மீதி		**740,742,219**		**619,382,343**
நன்கொடை நிதிகள்	**19,270,646**		**18,582,450**	
கூட்டுக - பெறுவனவுகள்	729,689		770,894	
கழி - கொடுப்பனவுகள்	(44,504)	**19,955,831**	(82,699)	**19,270,646**
ஆய்வு மானிய நிதிகள்	**9,868,724**		**9,617,673**	
கூட்டுக - பெறுவனவுகள்	245,849		251,051	
கழி - கொடுப்பனவுகள்	(6,489)	**10,108,084**	-	**9,868,724**
கடன் பிணைகள் மற்றும் ஒப்பந்த நிதிகள்	**168,397,441**		**149,084,328**	
கூட்டுக - பெறுவனவுகள்	19,608,312		21,834,370	
கழி - கொடுப்பனவுகள்	(1,121,531)	**186,884,221**	(2,521,257)	**168,397,441**
ஏனைய நிதிகள்	**34,384,433**		**29,553,291**	
கூட்டுக - பெறுவனவுகள்	3,409,986		5,000,683	
கழி - கொடுப்பனவுகள்	(36,155)	**37,758,263**	(169,541)	**34,384,433**
		995,448,619		**851,303,587**

குறிப்பு – 20	2020	2019
அறக்கட்டளை நிதி	ரூ.	ரூ.
ஆரம்ப மீதி	27,131,846	25,679,532
பெறுவனவுகள்	4,549,982	2,175,000
பெற்ற வட்டி	1,710,836	2,362,227
கொடுப்பனவுகள்	(2,630,465)	(3,084,913)
மொத்தம்	**30,762,199**	**27,131,846**

21.7 நிதிச் செயலாற்றல் கூற்றுக்கான குறிப்புக்கள்

குறிப்பு 21 பெற்ற வட்டி	2020 ரூ.	2019 ரூ.
முதலீடுகளிலிருந்து வட்டி	49,299,639	48,828,519
கடன் மற்றும் முற்பணம் மூலம் வட்டி	1,678,795	2,137,836
	50,978,434	**50,966,355**
குறிப்பு 22		
மாணவர்களிடமிருந்து வருமானம்		
பதிவுசெய்தல் - பட்டப்படிப்பு	341,850	945,920
பட்டமேற்படிப்பு	2,651,600	2,362,600
பாடவகுப்புக் கட்டணம் - பட்டப்படிப்பு	4,838,900	7,612,300
பட்டமேற்படிப்பு	-	-
பரீட்சைக் கட்டணம் - பட்டப்படிப்பு	167,160	250,560
பட்டமேற்படிப்பு	675,020	913,920
	8,674,530	**12,085,300**
குறிப்பு 23		
ஏனைய வருமானம்		
ஆதனங்களிலிருந்து வாடகை	486,262	759,400
நானாவிதப் பெறுவனவுகள்	12,510,921	15,283,390
வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்	16,407	(7,363)
நூலக தண்டப்பணம்	57,366	64,838
மருத்துவக் கட்டணங்கள்	93,111	206,313
	13,164,066	**16,306,577**
குறிப்பு 24		
ஆளுக்குரிய வேதனாதிகள்		
கல்விசார்		
சம்பளங்களும் கூலிகளும்	602,967,407	555,444,509
படிகள்	811,840,945	707,415,841
வாழ்க்கைச் செலவுப் படி	44,741,689	47,733,761
ப.சே.நி.	114,616,501	102,907,204
ஓய்வூதியம்	71,016,163	60,841,343
ஊ.ந.நி.	36,951,778	32,740,248
பதில் கடமை கொடுப்பனவுகள்	-	-
வருகைதரும் விரிவுரையாளர் கட்டணம்	30,962,883	37,600,964
கல்விசாராத		
சம்பளங்களும் கூலிகளும்	336,687,615	345,717,616
படிகள்	219,589,052	208,165,399
வாழ்க்கைச் செலவுப் படி	65,534,381	67,695,079
மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவு	-	-
ப.சே.நி.	48,920,048	47,153,577
ஓய்வூதியம்	32,371,644	29,685,867
ஊ.ந.நி.	16,258,209	15,386,826
பதில் கடமை கொடுப்பனவுகள்	151,875	556,415
மேலதிக நேர படி	28,144,294	57,255,945
விடுமுறைக்கால கொடுப்பனவு	123,356	166,354
	2,460,877,839	**2,316,466,946**

குறிப்பு 25	2020	2019
பிரயாண மற்றும் இணைந்த கொடுப்பனவுகள்	ரூ.	ரூ.
உள்நாடு	599,511	1,399,885
வெளிநாடு	857,339	5,005,076
	1,456,850	**6,404,961**

குறிப்பு 26		
நலன்புரிச் சேவைகள்		
சீருடைகள் மற்றும் தையல் கட்டணங்கள்	2,544,337	2,755,773
மருத்துவ வழங்கல்கள்	939,753	1,173,079
பணியாளர் அபிவிருத்தி	3,467,775	6,487,822
விடுமுறைகால ஆணைச்சீட்டு, பருவகால சீட்டு	1,199,420	1,859,590
வெகுமதிகளும் அன்பளிப்புக்களும்	2,895,000	3,105,933
பல்கலைக்கழக விளையாட்டு செயற்பாடுகள்	550,255	2,611,100
மாணவ நலன்புரி, ஊழியர் நலன்புரி, மாணவ சங்கம்	-	66,707
உதவுதொகைகள், அங்கத்துவக் கட்டணங்கள்	6,073,130	3,307,212
பிற – புதினப்பத்திரிகை, சஞ்சிகைகள், போன்றன	15,253,225	28,097,531
	32,922,895	**49,464,748**

குறிப்பு 27		
பிற செயற்பாட்டு செலவுகள்		
கவுன்சில் மற்றும் குழு சேவைகள்	1,982,900	899,800
தொழில்சார் மற்றும் ஏனைய கட்டணங்கள்	8,426,416	7,622,666
களியாட்டச் செலவுகள்	2,761,116	5,233,751
பட்டமளிப்பு விழா	5,913,518	6,257,983
பரீட்சை செலவினம்	7,951,422	12,128,628
பணிக்கொடை ஏற்பாடுகள்	94,527,594	429,368,809
ஆதன கடன் வட்டி - அரசாங்க பங்களிப்பு	5,526,825	5,682,162
	127,089,792	**467,193,798**

குறிப்பு 28		
மாணவர்களுக்கான நிதி உதவிகள்		
மஹபொல புலமைப்பரிசில்கள்	-	17,380,300
மாணவர் உதவிப்பணங்கள்	11,224,000	11,298,500
அறக்கட்டளை நிதி புலமைப்பரிசில்கள்	18,000	86,000
	11,242,000	**28,764,800**

குறிப்பு 29		
ஒப்பந்த சேவைகள்		
போக்குவரத்து	1,000,534	3,156,376
தொடர்பாடல்	48,440,432	54,787,205
அஞ்சல் கட்டணம்	1,227,921	2,195,181
மின்சாரம்	52,998,238	90,368,664
பாதுகாப்பு சேவைகள்	39,491,120	40,748,231
நீர்	3,606,791	8,110,814
சுத்திகரிப்புச் சேவைகள்	75,127,017	80,525,621
வாடகை, வாடகைக்கமர்த்தல் கட்டணம்	4,484,840	4,977,259
இறைகள் மற்றும் வரிகள்	736,103	50,511
அச்சடித்தல் மற்றும் விளம்பரப்படுத்தல்	4,310,819	6,985,595
ஏனையன	418,239	552,971
	231,842,053	**292,458,428**

குறிப்பு 30	2020	2019
வழங்கல்கள் மற்றும் நுகர்வுகள்	ரூ.	ரூ.
காகிதாகிகள்	17,764,613	25,080,639
எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள்	4,273,116	11,318,371
எந்திர உபகரணம் மற்றும் மின் பொருட்கள்	-	553,620
இரசாயனங்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள்	187,526	1,899,411
பிற வழங்கல் (மென்பொருள், பராமரிப்பு, முதலியன)	37,785,666	75,799,881
	60,010,921	**114,651,921**

குறிப்பு 31		
பராமரிப்புக்கள்		
வாகனங்கள்	5,795,154	13,104,069
பொறி எந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	33,775,743	35,529,297
பிற - கட்டடங்களும் நிர்மாணிப்புக்களும்	9,000	40,882
	39,579,896	**48,674,247**

குறிப்பு 32		
நிதிச் செலவு		
வங்கிக் கட்டணம்	16,849	262,748
	16,849	**262,748**

குறிப்பு 33		
உருவாக்கப்பட்ட வருமானம்/செலவினம்		
பட்டமேற்படிப்பு பாடநெறிகள்	208,958,012	215,647,170
குறுகிய பாடநெறிகள்	29,864,941	38,953,416
ஆலோசனைசார் கருத்திட்டங்கள்	286,448,296	265,723,138
	525,271,249	**520,323,724**

காசுப்பாய்ச்சல் கூற்றுக்கான குறிப்புக்கள்

குறிப்பு 34		
காசு மற்றும் காசுக்கு சமமானவை		
முதலீடு (நீண்டகாலம்)	938,400,977	894,406,976
வங்கியிலுள்ள காசு	522,521,616	144,969,929
கையிலுள்ள காசு	-	50,000
காசு மற்றும் காசுக்கு சமமானவை	**1,460,922,593**	**1,039,426,905**

21.8 சட்ட நியாயாதிக்க சபை நிதிசார் முன்னேற்றம் – 2020

1 நிறுவகத்தின் பெயரும் முகவரியும் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம், கட்டுபெத்த, மொறட்டுவை

2 செயற்பணி -

- உலக சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஆராய்ந்தறியும் மனோபாவத்தையும் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதனையும் போசிக்கக் கூடியதான தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் கல்வியை வழங்குதல்;
- கல்வி வரையறைகளை விருத்திசெய்வதற்காக மற்றும் தேசிய தொழில்நுட்பத் திறமைகளை உயர்வடையச்செய்வதற்காக தேசிய ரீதியில் பொருத்தமான மற்றும் உயர் விளைவுகள் கொண்ட ஆய்வினை மேற்கொள்ளுதல்;
- சர்வதேச ரீதியிலான இடத்தைக் கொண்டதொரு தேசிய பல்கலைக்கழகமாக நாட்டிற்கும் கைத்தொழில் துறைக்கும் சமூகத்திற்கும் நிபுணத்துவ சேவைகளை வழங்குதல்; மற்றும்
- இலங்கையின் நிலைத்திருக்கும், விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பங்குபற்றுதல் -

என்பன மூலமாக தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் அதிகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வி நிறுவகமாக தெற்காசியாவில் திகழ்வதாகும்.

3 பிரதான செயற்பாடுகள் - பொறியியல், கட்டடக்கலை, தகவல் துறைகளில் கற்பித்தல், ஆராய்ச்சி, ஆலோசனை மற்றும் ஏனைய தொழில்சார் செயற்பாடுகளை வழங்குதல்.

4 செயலாற்றல் போக்கு

இல.	விபரம்	அலகு	2016	2017	2018	2019	2020
	வருமானம் மற்றும் செலவினம்						
1	அரசாங்க மானியம் - மீண்டெழும்	ரூ.'000	1,724,000	1,950,496	2,329,350	2,756,920	2,875,000
2	சொந்த வருமானம் - மீண்டெழும்	ரூ.'000	50,735	54,786	71,872	79,366	72,817
3	பிற மீண்.மானி. (மஹபொல, உதவிப்பணம் போன்ற)	ரூ.'000	84,937	91,077	105,523	77,175	44,038
4	மொத்த வருமானம் – மீண்டெழும் (1+2+3)	ரூ.'000	**1,859,672**	**2,096,359**	**2,506,745**	**2,913,461**	**2,991,855**
5	மொத்த ஊழியர் கிரயம்	ரூ.'000	1,466,230	1,581,907	1,998,628	2,745,835	2,555,406
6	பிற மீண்டெ. செலவு (பெறு.தேய்வு நீங்கலாக)	ரூ.'000	613,618	670,014	687,696	704,396	478,607
7	மிகை / பற்றாக்குறை {3-(4+5)}	ரூ.'000	**(220,176)**	**(155,562)**	**(179,579)**	**(536,770)**	**(42,158)**
8	அரச. மானி.–மூலத.(2016-ல் திறை.பெ.வே.உட்பட)	ரூ.'000	1,353,500	745,000	562,000	400,000	423,000
9	பிற மானியம் – மூலதன செலவினம்	ரூ.'000	119,913	668,647	8,224	78,571	114,174
10	உருவாக்கப்பட்ட நிதியம் – மூலதன செலவினம்	ரூ.'000	34,812	8,901	4,729	7,803	5,230
11	மூலதன செலவினம் – அரச. மானியம்	ரூ.'000	1,363,959	780,993	545,575	423,514	387,341
12	கிரய மீளளிப்பு செயற்பாட்டு பெறுவனவு	ரூ.'000	587,443	590,905	600,635	623,107	556,765
13	கிரய மீளளிப்பு செயற்பாட்டு செலவினம்	ரூ.'000	482,398	508,563	536,645	520,324	525,271
	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்						
14	முதலீடுகள்	ரூ.'000	359,219	481,461	699,089	894,407	938,401
15	நடைமுறையல்லா சொத்துக்கள்	ரூ.'000	4,232,292	10,935,243	10,618,846	10,175,452	10,005,372
16	நடைமுறை சொத்துக்கள்	ரூ.'000	341,867	292,326	305,856	289,466	628,777
17	நடைமுறை பொறுப்புக்கள்	ரூ.'000	673,730	776,908	934,590	1,074,171	1,022,525
18	நடைமுறையல்லா பொறுப்புக்கள்	ரூ.'000	878,162	891,762	1,137,577	1,607,800	1,793,818
19	நன்கொடைகள்/வெளிநாட்டுதவி (திரட்டிய)	ரூ.'000	1,201,196	712,239	638,353	627,362	640,354
20	திரட்டு நிதி	ரூ.'000	2,180,290	9,328,120	8,913,271	8,049,993	8,115,854
21	ஊழியர்களின் எண்ணிக்கை - கல்விசார்	(எண்.)	422	439	456	431	389
22	மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை	(எண்.)	1,100	1,099	1,193	1,150	1,045
23	மாணவர்களின் எண்ணிக்கை	(எண்.)	7,922	7,902	7,912	8,369	6,798
	முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள்						
i	மொத்த வருமானத்தில் சொந்த வருமானம்	%	2.73	2.61	2.87	2.72	2.43
ii	ஊழியரொருவ. மொத்த உழைப்பு கிரயம்	ரூ.'000	1,333	1,439	1,675	2,388	2,445
iii	மாணவரொருவ. மொத்த உழைப்பு கிரயம்	ரூ.'000	185	200	253	328	376
iv	மீண். மானியம் - மாணவருக்கு/ஆண்டிற்கு	ரூ.'000	218	247	294	329	423
v	ஒரு பட்டதாரிக்கான மொத்த கிரயம்	ரூ.'000	769	859	967	1,088	1,294
vi	தொழிலாக்கம் (பெறுபேற்றின் 3 மாதத்தினுள்)	%	94	93	91	92	71
vii	ஊழியர் ஒருவருக்கான மாணவர்	(எண்.)	07:01	07:01	07:01	07:01	07:01
viii	கல்விசார் ஆளணி. ஒருவ. மாணவர் (உண்மை)	(எண்.)	19:01	18:01	17:01	19:01	17:01
ix	வாகனம் ஒன்றுக்கான மாணவர்	(எண்.)	180:01	202:01	202:01	209:01	178:01

21.9 கணக்காய்வுக் குழு அறிக்கை – 2020

கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்கம்

பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுக் குழுவானது நிறைவேற்றுக் குழுவில் இடம்பெறாத மூவரை உறுப்பினர்களாகக் கொண்டிருப்பதுடன், நிதி முகாமைத்தும் தொடர்பான திறன்களையுடைய ஒருவர் தலைமை வகிப்பார்.

2020-ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் குழுவின் அமைப்பு.

திரு. எஸ்.எம்.ரீ.எச். சுபசிங்ஹ	-	தலைவர்
பேராசி. (திருமதி) ஈ.ஆர்.கே. பெரேரா	-	அங்கத்தவர்
திருமதி ஏ. இத்தமல்கொட	-	அங்கத்தவர்

மேற்படி உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோர் அவதானிப்பாளர்களாக பங்கேற்பதற்கு அழைக்கப்பட்டனர்.

பதிவாளர் மற்றும் நிதியாளர் ஆகியோர் அழைப்பின் பேரில் கூட்டங்களில் பங்கேற்பதுடன், பல்கலைக்கழகத்தின் ஏனைய பணியாட்தொகுதி உறுப்பினர்களின் பிரசன்னம் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அழைக்கப்படுவர். குழுவின் செயலாளராக பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் செயலாற்றுவார்.

கூட்டங்கள்

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய PED/31-ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி, குழு குறைந்தபட்சம் ஒரு வருடத்தில் நான்கு தடவைகள் கூட்டப்படல் வேண்டும். மீளாய்வு ஆண்டில் குழு ஐந்து தடவைகள் கூடியிருப்பதுடன், இக் கூட்டங்களின் போது உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாளர்களின் அறிக்கைகள் மற்றும் விசாரணைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. குழுவின் கூட்டக் குறிப்புக்கள் தகவல்களுக்காகவும் அவசியமான நடவடிக்கைகளுக்காகவும் பல்கலைக்கழக நிருவாக சபைக்கு பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

குழுவின் நோக்கெல்லை

பல்கலைக்கழகத்தின் நிதி மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் பற்றிய நிருவாக சபையின் பொறுப்பினை வினைத்திறன் மிக்கதாக முன்னெடுப்பதற்கு நிருவாக சபைக்கு உதவுதல் கணக்காய்வுக் குழுவின் முக்கிய நோக்கமாகும். கணக்காய்வு சார்ந்த நல்லாட்சிக்கான சுற்றறிக்கைப் படி குழுவின் நோக்கெல்லை பின்வரும் பணிகளைக் கொண்டிருக்கும்.

i. உள்ளகக் கணக்காய்வின் பொறுப்புகளைத் தீர்மானித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வு செய்தல்.

ii. நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளுக்குமென உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

iii. உரிய காலத்தில் கிரய விளைதிறனின் பொருட்டும், விரயத்தைத் தடுப்பதற்காகவும் செயலாற்றுகையை மீளாய்வு செய்தல்.

iv. வெளியக கணக்காய்வாளர்களுடன் தொடர்புகளைப் பேணுதல் மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் விசாரணைகள் மற்றும் அறிக்கைகள் மீதான தொடர் கவனிப்பு நடவடிக்கை.

v. சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்தல்.

vi. நிவாரண நடவடிக்கைகளின் பொருட்டு உள்ளகக் கணக்காய்வு/ வெளியக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ ஆவணங்களை மீளாய்வு செய்தல்.

vii. அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (COPE) சிபாரிசுகள் மற்றும் பணிப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை மீளாய்வு செய்தல்.

viii. ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்காக குழுவின் கண்டுபிடிப்புகள் அடங்கிய அறிக்கையைத் தயாரித்தல்.

ஆண்டின் போது முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

மீளாய்வு ஆண்டின் போது பின்வரும் நடவடிக்கைகளை குழு முன்னெடுத்துள்ளது.

1) **2020 ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயல்பாட்டுத்திட்டம் என்பவற்றை அங்கீகரித்தல் மற்றும் கண்காணித்தல்.**

குழுவானது 2020-ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயல்பாட்டுத்திட்டம் ஆகியவற்றை சிபாரிசு செய்ததுடன், வருடம் பூராகவும் அதன் நிலைமையை கண்காணிப்பு செய்தது. மேலும், உள்ளகக் கணக்காய்வு மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் வினைத்திறனும் செயல்நிறைவேற்றமும் மீளாய்வு செய்யப்பட்டு, கண்காணிப்பு செய்யப்பட்டது.

2) **சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்தல்**

கணக்காய்வு குழுவானது ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குதல் தொடர்பாக உள்ளக மற்றும் வெளியாக கணக்காய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை மீளாய்வு செய்தது.

3) **உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மீளாய்வு செய்தலும் பலப்படுத்தலும்.**

குழு, உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை பலப்படுத்துவதற்குத் தேவையான சிபாரிசுகளை வழங்குதல் மூலமாக நிலையான சொத்துக்கள், மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினம் மீதான பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுபாடுகள் சார் வினைத்திறனை மீளாய்வு செய்துள்ளது. அத்துடன் குழுவானது, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்-பட்டுள்ள பலவீனங்கள், மீளாய்வு ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணைகளை சரிப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

மேலும், 2019 ஆண்டின் போது உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் வழங்கப்பட்ட சகல பரிந்துரைகளையும் குழு மீளாய்வு செய்ததுடன், 2019 திசம்பர், 19-ஆம் திகதி நடைபெற்ற உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பில் பல்கலைக்கழகத்தின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை சோதனையிடும் போது அமுல்படுத்தப்படாத சகல செயல்பாடுகளின் முன்னேற்றத்தையும் மதிப்பாய்வு செய்தது.

4) பிணை மீறல்களை மீளாய்வு செய்தலும் மேற்பார்வை செய்தலும்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் மூலம் தொிவிக்கப்பட்ட பிணை மீறல் சிக்கல்கள் சம்பந்தமாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைகளை பிணை தொடர்பான மீறல் பற்றிய மீளாய்வுக் குழுவிடம் சமர்ப்பித்தது.

தவிசாளர்
கணக்காய்வுக் குழு
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
2022.01.05

(ஆங்கில பதிப்பு கையொப்பமிடப்பட்டுள்ளது)

22. நிலைபேறான அபிவிருத்தி பற்றிய எதிர்பார்க்கை அறிக்கை

நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைதல்

1. குறிக்கோள்களையும் இலக்குகளையும் இனங்காணுதல்

பல்கலைக்கழகத்தின் மூலம் விதிக்கப்பட்ட எல்லைகளின் ஊடாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2020 - 2030 ஆம் ஆண்டுகளுக்கான மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பிரதான திட்டம் கட்டடக்கலை பீடத்தின் பணியாளர் குழுவொன்றின் மூலம் தயாரிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் தற்போதய சகல பௌதிக அபிவிருத்திச் செயற்பாடுகளும் இப் பிரதான திட்டத்தின் படி மேற்கொள்ளப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் துரித விரிவாக்கத்துடன் 2020 இற்கும் அப்பால் 2030 தொடர்பாக திருத்தப்பட்ட திட்டமொன்று பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணத்துவ குழுவொன்றின் மூலம், தேசிய அபிவிருத்தி திட்டம் மற்றும் உயர் கல்வி அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் கூட்டுத் திட்டம் ஆகியவற்றுக்கு இணங்க மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பௌதிக உட்கட்டமைப்பு வசதிகள் சார்பாக துரித அபிவிருத்தியை உள்ளடக்கியதாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

- குறிக்கோள் இல. 04

பூரணத்துவம் மற்றும் சமத்துவம் கொண்ட தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் நீண்டகால கற்றல் வாய்ப்புக்களை ஊக்குவித்தல்.

குறிக்கோளின் சாராம்சம் அதாவது, பல்கலைக்கழகத்தின் மூலோபாய முகாமைத்துவ திட்டத்தினுள் "பூரணத்துவம் மற்றும் சமத்துவம் கொண்ட தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் நீண்டகால கற்றல் வாய்ப்புக்களை ஊக்குவித்தல்" எனும் விடயங்கள் தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்தின் மூலம் நடாத்தப்படும் சகல கல்வி மற்றும் ஆராய்ச்சி சார் பிரதான செயற்பாடுகளில் இக் குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக முன்னுரிமை அளித்து செயலாற்றப்படுகிறது.

தரமான கல்வியை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் கற்பித்தல்சார் பணியாளர்களை ஆட்சேர்க்கும் போது சர்வதேச மட்டத்தில் கீர்த்திமிக்க பல்கலைக்கழகங்களில் கலாநிதி பட்டத்தைப் பெற்ற புலமையாளர்களுக்கு முன்னுரிமை அளிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இந் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

- குறிக்கோள் இல. 05

  ஆண்-பெண் பால்நிலை சமத்துவத்தை அடைதல் மற்றும் எல்லா பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டுதல்.

  பல்கலைக்கழகத்தின் மூலோபாய முகாமைத்துவ திட்டத்தினுள் இது பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- குறிக்கோள் இல. 06

  அனைவருக்கும் நீர் மற்றும் உடல்நலவசதிகள் கிடைப்பதை உறுதிசெய்தல் மற்றும் அவற்றை நிலைபேறாக முகாமை செய்தல்.

  100% டெங்கு போன்ற பரவும் நோய்களற்ற பசுமை பல்கலைக்கழகமொன்றாக ஆகுவதற்கு பாடுபடும்.

- குறிக்கோள் இல. 07

  அனைவருக்கும் மலிவான, நம்பகமான, நிலைபேறான மற்றும் நவீன வலுசக்தி கிடைப்பதை உறுதிசெய்தல்.

  வலுசக்தி பயன்பாடு பற்றிய முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், 2030 ஆண்டளவில் 25% திறன்மிக்க மாற்று வலுசக்தி வடிவங்களை நோக்கி மாற்றமடையுமென எதிர்பார்க்கப்படுவதோடு, இது தொடர்பாக ஸ்மார்ட் கிரிட் (Smart Grid) கருத்திட்டமொன்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- குறிக்கோள் இல. 09

  நெகிழ்திறனுடைய உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புவதுடன், பரந்தளவான மற்றும் நிலைபேறானதுமான கைத்தொழில்மயமாக்கத்தை மேம்படுத்துதலும் புத்துருவாக்கலும்.

  இது சார்பாக கைத்தொழில் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடன் ஒன்றிணைந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருதுடன், அவற்றை மேலும் மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

- குறிக்கோள் இல. 13

  காலநிலை மாறுபாட்டையும் அதன் தாக்கங்களையும் எதிர்த்துப் போராடுவதற்கு துரித நடவடிக்கைகளை எடுத்தல்.

  பல்கலைக்கழகத்தின் மூலம் நடாத்தப்படும் பெரும்பாலான கல்விசார் பாடநெறிகளில் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் நடவடிக்கைகள் ஊடாக மேலே குறிப்பிடப்பட்ட 06, 07, 09 மற்றும் 13-ம் குறிக்கோள்களின் உள்ளடக்கங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2. குறிக்கோள்களையும் இலக்குகளையும் பல்கலைக்கழகத்தின் திட்டங்களில் ஒருங்கிணைத்தல்.

பல்கலைக்கழக சட்ட ஏற்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் இணங்க அறிவைப் பரப்புவதன் ஊடாக மாணவர்களை வலுவூட்டுவதை (குறிப்பாக கஷ்ட பிரதேசங்களில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெற்ற, பொருளாதாரத்தில் பின்னடைவான மாணவ, மாணவிகளின் வறுமை நிலையை ஒழிப்பதை) நோக்காகக் கொண்டு கற்கை பாடநெறிகள் நடாத்திச்செல்லப்படுகின்றன.

அதேசமயம், பல்கலைக்கழக பணியாளர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் நன்கு திட்டமிட்ட வகையில் சமுதாய அபிவிருத்தி மற்றும் சமூக உதவி நிகழ்ச்சித்திட்டங்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருவதுடன், இவற்றில் பெரும்பாலானவை குறைந்த வருமானமுடைய நபர்களுக்கு நேரடியாக கல்வியைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்றன மூலம் ஆரோக்கியமான அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கத்தோடு அமுல்படுத்தப்படுகின்றன.

3. குறிகாட்டிகளை தயாரித்தல்

வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டினுள் விசேடமாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் குறிப்பிடப்படாத போதிலும், அக் குறிக்கோள்களை (குறிப்பாக 04 ஆம் இலக்க குறிக்கோளை) அடைந்துகொள்ளும் தேசிய முயற்சிக்கு பங்களிப்புச் செய்யும் நோக்கத்தின் அடிப்படையில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பல்கலைக்கழகமானது நேரடியாக இன்றியேனும் நிதியேற்பாட்டை பெற்றுக்கொள்ள கருதுகிறது. அதேசமயம், பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயற்பாடுகளின் ஊடாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் இலக்கம் 5, 6, 7, 9 மற்றும் 13 ஆகியவற்றை அடைந்துகொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அத்துடன், அனைவருக்கும் பூரணத்துவம் மற்றும் சமத்துவம் கொண்ட தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் நீண்டகால கற்றல் வாய்ப்புக்களை ஊக்குவித்தல் ஆகியவற்றை உறுதிசெய்வதற்குத் தேவையான சகல தர கட்டுப்பாட்டு செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்காக பல்கலைக்கழகம் தேவையான நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும், பல்கலைக்கழகத்திலிருந்து தொலைதூரத்தில் இருக்கும் பல்வேறு ஆற்றலுடையவர்களை இலக்காகக் கொண்டு, திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தின் (CODL) மூலம் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. இந் நோக்கத்திற்காக வரவு செலவுத் திட்ட நிதியேற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்தின் பொதுவான நடைமுறைகளில் இருந்து விலகி, மாற்றுத்திறனாளி நபர்களை கல்வித் துறையில் மிகச் சிறந்து விளங்க வழிசெய்வதன் மூலம் அவர்கள் வலுவூட்டப்பட்டுள்ளனர். இத்தகைய செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக பல்கலைக்கழகத்தினால் மேலதிக வரவு செலவுத் திட்ட நிதியேற்பாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

4. தரவுகளை பேணிச்செல்லல்

சம்பந்தப்பட்ட பாடநெறிகளை நடாத்தும் திணைக்களங்களின் மூலம் அந்தந்த பாடநெறிகள் சம்பந்தமான தரவு பதிவுகள் பேணிச்செல்லப்படுகின்றன.

5. அடைவு நிலைகளை இனங்காணுதல்

செயற்பாட்டுத் திட்டம் மற்றும் மூலோபாய திட்டம் என்பன திருத்தப்பட்டதைத் தொடர்ந்து, கண்காணிப்புக்கான அடைவு நிலைகள் எவையென வரையறுக்கப்படும். இது தற்போது அபிவிருத்திக் கட்டத்தில் காணப்படுவதுடன், உரிய பகுதிகளை இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, பொருத்தமான செயற்பாட்டுத் திட்டம் அபிவிருத்தி செய்யப்படும்.

6. முன்னேற்றத்தை அளவிடுதல்

ஒவ்வொரு திணைக்களங்களின் மூலம் நடாத்தப்படும் ஆலோசனைக் குழு கூட்டங்களின் மூலமாகவும், தர உத்தரவாத அலகின் மூலமாகவும் முன்னேற்றம் சம்பந்தமான மீளாய்வுச் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

23. ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கை மீதான கருத்துக்கள்

HED/C/UOM/6/20/FA 2021 அக்டோபர், 25

உப வேந்தர்,
மொறட்டுவை பல்கலைக்கழகம்.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் 2020 திசம்பர் 31-ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

மேலே உள்ள அறிக்கையை உங்களுடன் இணைக்கிறேன்

டபிள்யூ.பீ.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

(சிங்கள பதிப்பு கையொப்பமிடப்பட்டுள்ளது)

HED/C/UOM/6/20/FA 2021 அக்டோபர், 25

உப வேந்தர்,
மொறட்டுவை பல்கலைக்கழகம்.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் 2020 திசம்பர் 31-ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் 2020 திசம்பர் 31-இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்து மாற்றங்கள் சார் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றும் நிதிக் கூற்றுக்கான குறிப்புக்களையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2020 திசம்பர் 31-இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)-ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018-இன் 19-ஆம் இலக்க இலங்கை தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971-இன் 38-ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டன. அரசியலமைப்பின் 154(6)-ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் மூலம் 2020 திசம்பர் 31-இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையில் நிதிக் கூற்றுக்கள் சார் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்காக போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் என்னால் பெற்றுக்கொள்ளப்-பட்டுள்ளது என நான் நம்புகிறேன்.

1.3 பல்கலைக்கழகத்தின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் பல்கலைக்கழகத்தினது 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனாலும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதாக கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்கள் சம்பந்தமாக முகாமைத்துவம் பொறுப்புக்கூறுதல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயமானது ஏனைய தகவல்களை உள்ளடக்காது என்பதுடன், நான் அது சம்பந்தமாக எவ்விதமான உறுதிப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயத்தையோ தொிவிக்கவில்லை.

நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கணக்காய்வுடன் தொடர்புபட்டதாக மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள இயலுமான போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கு ஏற்ப அளவுசார்ந்ததாக பொருந்தாது இருகின்றதா என கவனம் செலுத்துவதே எனது பொறுப்பாகும்.

பல்கலைக்கழகத்தின் 2020 ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, அதில் அளவு சார்ந்ததாக தவறாக் காட்டப்பட்டுள்ளது என நான் தீர்மானித்தால், திருத்தம் செய்வதற்காக நிருவாகத் தரப்பினருக்கு அவ் விடயங்களை தொியப்படுத்துதல் வேண்டும். இன்னும் திருத்தம் செய்யப்படாமல் தவறாக் காட்டப்பட்டுள்ளன இருக்குமாயின், அவற்றை அரசியலமைப்பின் 154(6)-ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்.

நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள்

காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில், பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் நிலையை தொடருவதற்கான இயலுமையை தீர்மானம் செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை முடிவுறுத்துவதற்கு கருதுவதாயின் அல்லது ஏனைய மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாயின் தவிர தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமாக பரிசீலிக்கும் பொறுப்பு, நிருவகிக்கும் தரப்பினர்களால் பொறுப்பு ஏற்கப்படுகிறது.

2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1)-ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றை பேணிச்செல்லுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரது அறிக்கையை வழங்குவதும் எனது நோக்கங்களாக உள்ளன. நியாயமான உறுதிப்படுத்துதல் உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கண்டுபிடிக்கின்ற உறுதிப்படுத்துதல் ஒன்றாக அமையமாட்டாது. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாக அல்லது கூட்டான ரீதியில் தாக்கம் செலுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடும் என்பதுடன், இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன் அடைவோர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் சார்பாக ஏற்படும் தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வினது பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களுடனும் மற்றும் தொழில்சார் ஐயப்பாட்டுடனும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் என்னால்,

- தொிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றைப் பெற்றுக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவுசார் தவறான கூற்றுக்களால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் சார்பாக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. தவறாக குறிப்பிடுவதன் காரணத்தினால் ஏற்படும் அளவுசார் பிறழ் கூற்றுக்களால் ஏற்படும் தாக்கத்தை விட மோசடியால் ஏற்படுகின்ற தாக்கம் வலிமை கூடியதாக அமைவது, அவை கூட்டுச்சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல், பிழையாக காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை விட்டுவிடுதல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைதிறன் சம்பந்தமாக அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் எண்ணத்துக்காக இல்லாவிடினும், சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் நிமிர்த்தமாக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பானதொரு விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் சார்பான பொருத்தப்பாடுகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் சார்பாக மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் காரணமாக பல்கலைக்கழகமானது தொடர்ந்து இயங்குதல் சம்பந்தமாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் சார்ந்த அடிப்படையில் கணக்கீட்டு செயற்பாட்டுக்காக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவை பயன்படுத்தும் பொருத்தப்பாடுகள் பற்றி தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் பற்றி எனது கணக்காய்வு அறிக்கையானது கவனத்தைச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், அவ் வெளிப்படுத்தல்கள் போதியளவாகக் காணப்படாது இருக்குமாயின் எனது கருத்தை வெளிப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ந்து இயங்கும் நிலையானது முடிவுறுத்தவும் படலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் ஆகியவற்றுக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்படுகின்ற முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவாக தரப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டல் செய்கின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை.

2.1 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2.1.1 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, கணக்காய்வுக்கு அவசியமான சகல தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், எனது பரீட்சிப்பின் மூலம் தெரியவருகின்றவாறு முறையான நிதிசார் பதிவேடுகள் பல்கலைக்கழகத்தினால் பேணிச்செல்லப்பட்டுள்ளன.

2.1.2 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நிறுவகத்தினது நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு இருந்ததனால் கீழே குறிப்பிடப்படுவதைவிட வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

2.2.1 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, பல்கலைக்கழகத்தின் நிருவாக சபையின் அங்கத்தவர் எவருக்காவது பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது நேரடியற்ற வகையில் தொடர்புபட்டிருத்தல்.

2.2.2 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புக்களை தவிர்த்து, ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டங்களுடன் அல்லது பல்கலைக்கழகத்தின் நிருவாக சபையினால் விடுக்கப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுடன் இணங்காதவாறு செயலாற்றியிருப்பதை குறிப்பிடுதல்.

தொடர்புபட்ட சட்டங்கள், ஒழுங்குவிதிகள்	அவதானிப்புக்கள்
(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது உயர் கல்வி நிறுவனங்கள் சார்பான தாபனக் கோவையின் XX அத்தியாயத்தின் 3.1 பிரிவு	பல்கலைக்கழக தாபனக் கோவைக்கு முறணாக கல்விசார் பணியாட்தொகுதியினரின் உள்வருகையும் வெளிச்செல்கையும் உறுதிப்-படுத்தப்படாமல் மீளாய்வு ஆண்டுக்காக ரூ.1,459,550,041 தொகை சம்பளங்களும் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டிருந்தன.
(ஆ) 2003 யூன் 02 திகதியும் 12-ம் இலக்கமும் கொண்ட அரசாங்க பொறுப்புமுயற்சி-கள் பற்றிய சுற்றறிக்கை	மீளாய்வு ஆண்டுக்குரிய கூட்டுத் திட்டம் மற்றும் செயல்பாட்டுத் திட்டம் என்பன தயாரிக்கப்-பட்டிருக்கவில்லை.
(இ) 1978 திசம்பர் 19-ம் திகதியும் 842-ம் இலக்கமும் கொண்ட அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை	பல்கலைக்கழகத்தின் வசமுள்ள நிலையான சொத்துக்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேடொன்று பேணிச்-செல்லப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புக்களை விடுத்து, பல்கலைக்கழகத்தின் தத்துவங்கள், செயற்பணி மற்றும் இலக்குகள் என்பவற்றுக்கு இணக்கமின்றி செயலாற்றியிருப்பதை குறிப்பிடுதல்.

2.2.4 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, பல்கலைக்கழகத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் காலவரையறைகளுக்குள் ஏற்புடையதான சட்டதிட்டங்களுக்கு இணங்க பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்-படுத்தப்பட்டிருக்காமையை குறிப்பிடுதல்.

2.3 **ஏனைய அவதானிப்புக்கள்**

(அ) 2020 திசம்பர் 31-ஆம் திகதியில் பல்கலைக்கழகத்தினது அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்தொகுதியினரையும் உள்ளபடியான பணியாட்தொகுதியினரையும் ஒப்பிடும் போது வெற்றிடங்கள் முறையே 321 ஆகவும், 232 ஆகவும் இருந்தது. கல்விசார் பணியாட்தொகுதியில் நிலவிய வெற்றிடங்கள் நிரப்பப்படாத காரணத்தால், வெளிவாரி விரிவுரையாளர்கள்

ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு, மீளாய்வு ஆண்டினுள் மாத்திரம் ரூ. 30,962,883 தொகை கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2020 திசம்பர் 31-ஆம் திகதியில் மொத்தம் ரூ. 2,676,340 ஆன 16 புலமைப்பரிசில் நிதியங்கள் 03 வருடங்கள் முதல் 10 வருடங்களினுள் எவ்வித புலமைப்பரிசிலும் செலுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படாது குறைந்த பயன்-பாடுடையதாக இருந்தன.

(இ) 2020 திசம்பர் 31-ஆம் திகதியில் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் மற்றும் திணைக்களங்கள் சார் அபிவிருத்தி நிதியங்கள் 34-இன் மொத்தம் ரூ.13,921,449 தொகை ஆண்டினுள் செயற்பாடின்றி காணப்பட்டதுடன், நிதியங்கள் 21-இன் மொத்தம் ரூ. 6,074,585 ஆன தொகை 4 வருட காலங்களாக குறைந்த பயன்-பாடுடையதாக இருந்தது.

டபிள்யூ.பீ.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

(ஆங்கில பதிப்பு கையொப்பமிடப்பட்டுள்ளது)

මොරටුව විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை
University of Moratuwa, Sri Lanka

මගේ යොමුව/எனது இல/My Ref: | ඔබේ යොමුව/உமது இல/Your Ref: | දිනය/திகதி/Date: 2021.10.27

கணக்காய்வாளர் தலைமையதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல. 306/72,
பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் 2020 திசம்பர் 31-ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

மேற்படி விடயம் தொடர்பான தங்களது இலக்கம் HED/C/UOM/6/20/FA மற்றும் 2021 அக்டோபர் 25-ஆம் திகதியுடைய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் தொடர்பானது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2.2.2 (அ) பல்கலைக்கழக கல்விசார் பணியாட்தொகுதியினர் 8 மணி நேர அலுவலகப் பணிகளை நிறைவேற்றுகின்ற ஊழியர் பிரிவொன்றல்ல என்பதுடன், கற்பித்தல், ஆராய்ச்சி, புத்துருவாக்கம், தேசிய ரீதியில் முக்கியத்துவமிக்க விடயங்களில் ஈடுபடுதல் போன்ற விசேட பணிகளுக்குப் பங்களிப்புச் செய்யும் பணியாட்தொகுதியினர் என்பதுடன், அப் பணிகளை புத்தகங்களில் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை ஆகியவற்றைக் குறிப்பிடுவதன் மூலம் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்துவதன் மூலமாக பயன்மிக்க சேவையினைப் பெற்றுக்கொள்வது மிகவும் சிரமமானதாகும். தற்போது நிலவுகின்ற நிலைமைகளின் கீழ் கல்விசார் பணியாட்தொகுதியினர் பல்கலைக்கழகத்திலிருந்து விலகிச் செல்லாது தடுத்து நிறுத்துவது மிகச் சிரமமான காரியமாக இருக்கின்ற சூழ்நிலைகளின் கீழ் மென்மேலும் கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் தற்போதுள்ள பணியாட்தொகுதியினரையும் தடுத்து நிறுத்துவது சம்பந்தமாக பிரச்சினைகள் ஏற்படலாம். எனினும், மாதாந்த சம்பளம் வழங்கும் போது கல்விசார், கல்விசாரா பணியாட்தொகுதி உறுப்பினர்கள் அனைவரினதும் சேவைக்கு வருகைதரல் பற்றிய அறிக்கைகள் கல்வித் திணைக்களங்கள் மற்றும் பிரிவுகள் ஆகியவற்றின் தலைவர்கள் மூலமாகப் பெற்று, சேவைக்கு வருகைதரல் பற்றி உறுதிப்படுத்துதல் பெற்றுக்-கொள்ளப்படுகிறது எனவும், அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டிய சேவை, கல்விசார் வேலை ஒப்படைப்புகள் மற்றும் வேலைகள் (Academic work load verification) மூலமாகவும் பிரிவுத் தலைவர்களால் உறுதிப்படுத்தப்படுகிறது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

මොරටුව විශ්වවිද්‍යාලය, බණ්ඩාරනායක මාවත, කටුබැද්ද, මොරටුව 10400, ශ්‍රී ලංකාව
மொறட்டுவைப் பல்கலைக்கழகம், பண்டாரநாயக்க மாவத்தை, கடுபெத்த, மொறட்டுவை 10400, இலங்கை
University of Moratuwa, Bandaranayake Mawatha, Katubedda, Moratuwa 10400, Sri Lanka

උප කුලපති/உப வேந்தர்/Vice-Chancellor: +94 112 651259
Fax: +94 112 651671
කාර්යාලය/காரியாலயம்/Office: +94 112650188, 2650301, 2650340; 2650441, 265053-
www.mrt.ac.lk
Fax: +94 112650622

மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனக் கோவையின் XX-வது அத்தியாயத்தின் 2:3-ஆம் பிரிவிற்கு இணங்க, கல்விசார் பணியாட்தொகுதியினர் சம்பந்தமாக அலுவலக நேர வரையொன்று விதிக்கப்படத் தேவையில்லை. அவர்களுக்கு குறிப்பிட்ட அலுவலக நேரங்கள் இல்லையென்பதே இதன் மூலம் தொிவிக்கப்படுகிறது. பல்கலைக்கழக முறைமை முழுவதும் செயற்படுவது இந் நடைமுறை என்பதால் மொறட்டுவை பல்கலைக்கழகத்தினுள்ளும் இதே நடைமுறை அமுல்படுத்தப்படுகிறது என்பதை தயவுடன் தொிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) 2017 முதல் 2021 வரை மொறட்டுவை பல்கலைக்கழகத்துக்கான கூட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்குரிய செயல்பாட்டுத் திட்டமொன்றும் வருடாந்தம் தயாரிக்கப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும், 2020-ஆம் ஆண்டுக்கான செயல்பாட்டுத் திட்டம் 2020 ஆண்டின் ஆரம்பத்திலேயே தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த வருடத்தினுள் கோவிட் தொற்றுநோய் நிலவியதால் ஊழியர் பிரச்சினையின் காரணமாக விடுபட்டுவிட்டதால் நிருவாக சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க இயலாமல் போயுள்ளது. ஆயினும், செயல்பாட்டுத் திட்டம் 2021 பெப்பிரவரி மாதம் 23-ஆம் திகதி நடாத்தப்பட்ட விசேட நிருவாக சபை கூட்டத்தின் போது அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நிருவாக சபையின் அங்கீகாரம் பெறப்படாதபோதிலும், பல்கலைக்கழகத்தின் அனைத்து அலுவல்களும் 2020 ஆண்டு சார்பாக சம்பந்தப்பட்ட செயல்பாட்டுத் திட்டத்திற்கு இணங்கவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் வசமுள்ள நிலையான சொத்துக்கள் சம்பந்தமான விபரங்களை உள்ளடக்கி நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று கணினி முறைமை ஊடாக பேணிச்செல்லப்படுகிறது என்பதை தொிவித்துக்கொள்கிறேன்.

2.3 (அ) <u>கல்விசாரா பணியாட்தொகுதியினர்</u>

இவ் வெற்றிடங்களை நிரப்புதல், அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளும் பட்டியல் மற்றும் செய்திப்பத்திரிகை விளம்பரங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க, செய்திப்பத்திரிகை விளம்பரங்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும், பல்வேறு காரணங்களுக்காக பல்கலைக்கழகம் மூடப்பட்டதனால் சம்பந்தப்பட்ட செல்லுபடியாகும் காலம் காலாவதியாகியுள்ளது. மீண்டும் விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பட்டியல் கிடைத்துள்ள பதவிகள் சம்பந்தமாக ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும், நிதி அமைச்சு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் மூலம் காலத்துக்கு காலம் அறிவிக்கப்படுகின்றவாறு ஆரம்ப தர பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கல்விசார் பணியாட்தொகுதியினர்

கல்விசார் மற்றும் கல்விசார் துணை பதவி வெற்றிடங்கள், சம்பந்தப்பட்ட பிரிவுகளின் தேவைக்கு ஏற்பவும் திணைக்களத் தலைவர்களின் கோரிக்கைக்கு ஏற்பவும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வெற்றிடங்களை நிரப்பும் போது விண்ணப்பிக்கும் நபர்கள் உரிய நடைமுறைக்கேற்ப நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தி, தகைமைகளையும் ஆற்றல்களையும் கொண்டுள்ள ஆட்கள் மாத்திரம் தொிவு செய்யப்படுகிறார்கள்.

சம்பந்தப்பட்ட பதவிகளுக்கான தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருக்காதனால், சம்பந்தப்பட்ட வெற்றிடங்கள் நிரப்ப முடியாதுள்ளதுடன், அத்தகைய சந்தர்ப்பங்களில் கல்விச் செயற்பாடுகளை தடங்களின்றி நடாத்திச் செல்வதற்காக வெளிவாரி விரிவுரையாளர்களது சேவையைப் பெற்றுக்கொள்ள-வேண்டியேற்படுகிறது.

(ஆ) மேற்படி குறைந்த பயன்பாடுடைய புலமைப்பரிசில் நிதி தொடர்பாக விரிவான முறையில் தேடிப்பார்ப்பதற்கும், அவற்றை இயக்க நிலைக்கு கொண்டுவருவதற்கும் தேவையான செயற்பாடுகளை எடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) மேற்படி திணைக்கள அபிவிருத்தி நிதியத்திற்கான நிதி சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் மூலம் சுயமாக ஈட்டல் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பாடநெறி/ ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகள் மூலம் கிடைக்கிறது. அதன்போது, சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களின் மூலம் இனங்காணப்படும் பணியாட்தொகுதியினர் மற்றும் மாணவர்கள் சார் அபிவிருத்திச் செயற்பாடுகள், ஆய்வுகூடம் மற்றும் திணைக்களம் சார் உபகரணங்களை கொள்வனவு செய்தல் சார்பாக இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது. இந் நிதியம், ஒரு வருடம் அல்லது சில வருடங்கள் இயக்கமின்றி இருந்தாலும், அவை எதிர்காலத்தில் உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படும். அதன்படி, இத் திணைக்கள அபிவிருத்தி நிதிகள் சம்பந்தப்பட்ட திணைக்களத்தை மேம்படுத்துவதற்காகவும் எதிர்காலத் தேவைகளுக்காகவும் சுயமான ஈட்டல் நடவடிக்கைகள் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானத்தினால் ஒதுக்கமாக பேணப்படும் நிதியமாகும். இந் நிதி, குறிப்பிட்ட காலப்பகுதியினுள் செலவிடப்-படவேண்டிய வெளியக நிறுவனமொன்றினால் வழங்கப்படும் நிதியொன்றல்ல என்பதனால் அதனை சில வருடங்கள் செலவிடாது ஒதுக்கமொன்றாக வைத்திருப்பதில் பிரச்சினை ஏதுமில்லை என்பதும் தொியவருகின்றது. அத்துடன், 2020 ஆண்டின் போது நாட்டில் காணப்பட்ட கோவிட் தொற்றுநோய் நிலைமையின் கீழ் சில மாதங்கள் பல்கலைக்கழகம் முழுமையாக மூடப்பட்டிருந்தமை, ஏனைய மாதங்களில் கல்விசார் பிரிவுகள் முழுமையான கொள்ளளவுடன் இயங்காமை எனும் காரணங்களால் இந் நிதியங்கள் 2020 ஆண்டில் இயக்கமின்றி இருந்ததற்கு காரணமாக அமைந்தது.

அதேபோல், பாடநெறி அபிவிருத்தி நிதியத்திற்கான நிதி, சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் மூலம் சுயமாக ஈட்டல் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பாடநெறிகள் மூலமாக ஈட்டப்படுகின்ற வருமானங்கள் ஊடாக கிடைக்கிறது. அதன்போது, இப் பாடநெறிகளை விருத்தி செய்தல் சார்பாகவும் எதிர்கால தேவைப்பாடுகள் சார்பாகவும் ஒதுக்கமொன்றாக சம்பந்தப்பட்ட பாடநெறிகள் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானத்தின் ஒரு பகுதி இவ்வாறு பாடநெறி அபிவிருத்தி நிதியமாக பேணிச்செல்லப்படுகிறது. அத்துடன், இந் நிதி தேவையற்ற விடயங்களுக்காக செலவிடாமல், தேவைகள் எழுகின்ற வரை நிறுத்தி வைப்பதன் மூலமாக அப் பாடநெறிகள் சார்பாகவும், அதேபோல் பல்கலைக்கழகத்தினதும் நிதிசார் சக்தியை அதிகரிப்பதற்கு காரணமாகின்றது. மேலும், இந் நிதி குறிப்பிட்ட வருடத்திலேயே பயன்படுத்த ஊக்குவிப்பதன் மூலமாக அர்த்தமற்ற, பயனற்ற அலுவல்களுக்காக செலவிடும் போக்கை ஏற்படுத்த இடமுள்ளது.

பேராசிரியர் என்.டீ. குணவர்தன
உப வேந்தர்

(ஆங்கில பதிப்பு கையொப்பமிடப்பட்டுள்ளது)

பிரதிகள் - 01. பதிவாளர்
02. பிரதி உள்ளகக் கணக்காய்வாளர்

මොරටුව විශ්වවිද්‍යාලය, බණ්ඩාරනායක මාවත, කටුබැද්ද, මොරටුව 10400, ශ්‍රී ලංකාව
மொறட்டுவைப் பல்கலைக்கழகம், பண்டாரநாயக்க மாவத்தை, கடுபெத்த, மொறட்டுவை 10400, இலங்கை
University of Moratuwa, Bandaranayake Mawatha, Katubedda, Moratuwa 10400, Sri Lanka

උප කුලපති/உப வேந்தர்/Vice-Chancellor: +94 112 651259 කාර්යාලය/காரியாலயம்/Office: +94 112650188, 2650301, 2650340; 2650441, 26505
Fax: +94 112 651671 www.mrt.ac.lk Fax: +94 112650622



සාමාන්‍ය පාලන අංශය, මොරටුව විශ්වවිද්‍යාලය.
பொதுநிர்வாகப் பிரிவு, மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.
General Administration Division, University of Moratuwa.